# புதுமைப்பித்தன் சிறுகதைகள்

புதுமைப் பித்தனின் இயற்பெயர் சொ. விருத்தாசலம். இவர் பிறந்த ஆண்டு 1906. திருநெல்வேலியில் பி.ஏ. வரை படித்துப் பட்டம் பெற்ற பிறகு புரட்சிக்கோலம் பூண்டு சென்னைப் பட்டித்தின் பத்திரிக்கை உலகுக்குள்ளே புகுந்து தமது எழுத்தினால் மிகப் பெரிய புரட்சியை இலக்கிய உலகிலே உண்டாக்கியவர். தினமணி பத்திரிகையிலும் பின்னர் தினசரி பத்திரிகையிலும் பல ஆண்டுகள் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தார். பிறகு திரைப்படத் துறையிலும் தமது வாழ்வின் கடைசி நாட்களில் எழுத்துப் பணி செய்தார். தினமணியில் உதவி ஆசிரியராகப் பணி செய்தபோது மணிக்கொடியிலும் வேறுசில பத்திரிக்கைகளிலும் கருத்தாழம் கொண்ட பல சிரஞ்சீவிக் கதைகளை எழுதித் தமது புதுமையாலும், சிந்தனைக் கூர்மையாலும், ஒப்பற்ற நுட்பத்தாலும், வியக்கத்தக்க நெஞ்சுரத்தோடு கூடிய கதைப்பொருள் வைப்பு முறையாலும், தமிழ்ச் சிறுகதை உலகிலே நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார் இவர் மரணமடைந்த ஆண்டு 1948.

அனைத்திந்திய நூல் வரிசை

# புதுமைப்பித்தன் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர்
மீ.ப. சோமசுந்தரம்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

ISBN 81-237-0585-9

முதற் பதிப்பு 1976
ஆறாம் பதிப்பு 1999 (*Saka* 1921)
© திருமதி கமலா விருத்தாசலம், 1973
Original: Puthumaippithan Short Stories (*Tamil*)
Puthumaippithan Sirukathaigal (*Tamil*)

**ரூ. 25.00**

வெளியீடு: இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
ஏ-5, கிரீன் பார்க், புதுதில்லி - 110 016

# பொருளடக்கம்


1. புதுமைப்பித்தனைப் பற்றிய குறிப்பு ... ii

2. முன்னுரை—மீ. ப. சோமசுந்தரம் ... vii

3. புதுமைப்பித்தன் கதைகள்

    1. சாபவிமோசனம் ... 1
    2. பால்வண்ணம் பிள்ளை ... 16
    3. கயிற்றரவு ... 20
    4. ஞானக்குகை ... 28
    5. உபதேசம் ... 35
    6. அன்று இரவு ... 40
    7. வாடாமல்லிகை ... 59
    8. கருச்சிதைவு ... 63
    9. ஒருநாள் கழிந்தது ... 69
    10. பொன்னகரம் ... 80
    11. நினைவுப் பாதை ... 83
    12. நியாயம் ... 88
    13. சிற்பியின் நரகம் ... 91
    14. காஞ்சனை ... 93
    15. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் ... 109
    16. சாமியாரும் குழந்தையும் சீடையும் ... 130

## முன்னுரை

சிறுகதை இலக்கியம் உலகமொழிகள் அனைத்திலுமே முக்கியமான ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளது. இதற்குக் காரணம் உலகெங்கிலுமே மக்களிடையே கதை கேட்கும் ஆர்வம் எல்லாக்காலத்திலும் எல்லா மொழியினங்களிலும் மிகுதியாக இருந்து இலக்கியத்தைப் பேணிவந்திருக்கிறது. பலநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, வாய்மொழி இலக்கியமாகச் சிறுகதை இலக்கியம் பயில ஆரம்பித்துப் பிறகு எழுத்து வடிவத்திலே நிலையான முக்கிய இடத்தை வகிக்கத் தொடங்கியிருக்கிறது.

தமிழிலும் பல நூற்றுண்டுகளாகத் திண்ணையிலும், சாவடிகளிலும், பாடிகளிலும், இலக்கிய மன்றங்களிலும் கதை சொல்லுகிற கலையானது வளர்ந்து வந்திருக்கிறது. நமது இதிகாசங்களிலும், புராணங்களிலும், எத்தனையோ

சிறு கதைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் மொழியிலுள்ள பெரும் காப்பியங்களான மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலும், அகநானூறு, கலித்தொகை, குறுந் தொகை போன்ற தொகுப்பு நூல்களிலும் அரிய பல சிறு கதைகள் பின்னி இணைந்திருக்கின்றன. என்றாலும் இவை யெல்லாம் கவிதை வடிவிலே அந்தக் காலத்தில் வழங்கி வந்த உத்திகளையும் நெறிமுறைகளையும் தாங்கி நிற் கின்றன. வசனத்தில் கதைகள் என்ற வடிவம் எழுத்து வடிவம் பெருது பெரும்பாலும் வாய்மொழியாகவே சென்ற நூற்றாண்டு வரை பயிலப்பட்டு வந்தது.

அச்சு இயந்திரங்களும், மேனுட்டு இலக்கியங்களின் செல்வாக்கும் தமிழகத்தில் நன்கு பரவித் தமிழ் மக்களை ஆட்கொள்ளத் தொடங்கிய பின்பு, பத்திரிகையின் வளர்ச்சியும், புத்தகங்களின் பயிற்சி விநியோகமும் வளரத் தொடங்கவே, தமிழில் சிறுகதை இலக்கியமும் இன்றையப் புதிய உருவங்களில் உலாவித் தமிழ் மக்களைக் கவர ஆரம்பித்தது.

தமிழ்ப்பத்திரிகைகளின் வளர்ச்சியை நன்கு ஆராய்ந்து பார்த்தோமானால், கடந்த ஐம்பது ஆண்டுகளில் பழை மையைப் பணிப் புதுமையை வளர்க்கத் தொடங்கிய எழுத்தாளர்களும், முற்றிலும் புரட்சியையே மையமாகக் கொண்டு எழுத்துத்துறையிலே புகுந்த எழுத்தாளர்களு மாக இரு தொகுதியினர் போட்டி போட்டுக் கொண்டு சிறு கதை இலக்கியத்தைத் தமிழ் மொழியில் வளர்த்து வந்திருக்கிருர்கள் என்பது தெரியும்.

சுப்பிரமணிய பாரதிக்குப் பிறகு தோன்றிய மறுமலர்ச்சி எழுத்தாளர்களிலே, நிலையான இலக்கியச் செல்வங்களைச் சிறுகதை வடிவத்தில் நமக்குத் தந்துள்ளவர்கள் முக்கிய மான இரண்டு பிரிவுகளில் அடங்குவர். ஆனந்த விகடன், கல்கி முதலிய பத்திரிகைகள் மூலம் சேவை செய்த கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியும், அவரைப்போன்ற அல்லது அவருடைய துறையைச் சேர்ந்த எழுத்தாளர் களும் ஒரு குழுவினர். மற்ருெரு குழுவினர் மணிக்கொடிப் பத்திரிகையிலும் அதன் போக்கிலே அமைந்த வேறு

பத்திரிகைகளிலும் சேவை செய்த பி. எஸ். ராமையா, புதுமைப்பித்தன் ஆகிய பெரிய எழுத்தாளர்களைச் சேர்ந்த குழுவினர்.

இந்த இரண்டு குழுவினரையும் பின்பற்றியும் அல்லது ஓரளவு இன்றையத் தேவைக்கேற்ப மாறுபட்டும் இன்று நூற்றுக்கணக்கான சிறுகதைச் சிற்பிகள் தமிழில் வளமான தொண்டு செய்து வருகிறார்கள். அண்மையில் ஒரு முக்கியமான இலக்கிய நிறுவனத்தார் நடத்திய புள்ளி விவர ஆராய்ச்சியிலே, ஆண்டு தோறும் தமிழில் ஆயிரத்து ஐநூறு சிறு கதைகள் வரை குறிப்பிடும்படியாக வெளிவருகின்றன என்று கணக்கு எடுத்திருக்கிறார்கள். எண்ணிக்கை பெரிதுதான் என்றாலும், இவற்றில் நிலையாக நிற்கக் கூடிய சிறுகதைகள் எத்தனை இருந்துவிடக் கூடும் என்பது வெளிப்படை!

என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய சிறுகதைகள் பலவற்றை நமக்கு எழுதித் தந்துள்ள செம்மையான இலக்கியச் செல்வர்களின் முன்வரிசையிலே தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய வல்லமைபெற்ற ஒரு மேதாவியே இந்தத் தொகுப்பின் ஆசிரியர் புதுமைப் பித்தன் அவர்கள்.

மணிக்கொடி எழுத்தாளர்கள் என்று அழைக்கப்பெறுகிற குழுவில் ஒருவராக மதிக்கப்படும் ஒரு பேராசிரியரே புதுமைப்பித்தன். அந்தக் குழுவில் ஒருவர் என்று இவரைச் சொல்வதைவிட ஒப்பற்ற ஒருவர் என்று சொல்வதே பொருந்தும். இதைப்பற்றிப் புதுமைப் பித்தனே கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

**"மணிக்கொடிப் பத்திரிகையில் எழுதியவர்களில் பெரும் கேலிக்கும், நூதனம் என்பதனால் ஏற்படும் திக்பிரமைக்கும் ஆளான ஒரே கதாசிரியன் நான்!"**

இவ்வாறு கூறுகிற புதுமைப்பித்தன் மணிக்கொடியின் சகாப்தம் என்று கூறத்தக்க அந்த மறுமலர்ச்சிப் புரட்சியின் வரலாற்றையும் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். இந்த மணிக்கொடி வரலாறு புதுமைப்பித்தனுடைய இலக்கிய வரலாறும், மணிக்கொடிப் பத்திரிகையின் சரிதமும் இரண்டும் இரண்டறக் கலந்த ஓர் இணைப்பாகத்

நிகழ்கிறது. அதை இங்கே அப்படியே தருகிறேன். புதுமைப்பித்தன் சொல்கிருர் :—

" மணிக்கொடிப் பத்திரிகையானது வெளிவரும் முன்பு எத்தனையோ இலக்கியப் பத்திரிகைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் புதிய பரிசீலனைகளுக்கு இடங் கொடுக்கும், உற்சாகமூட்டும், வரவேற்கும், பத்திரிகைகள் அதற்குமுன்போ பின்போ கிடையாது. அந்தப் பத்திரி கையை ஆரம்பித்த லக்ஷியவாதியான கே. ஸ்ரீனிவாசன் அவருடைய அந்தக் " குற்றத்திற்காக " (?) டாஷைப் பிரஷ்டம் செய்யப்பட்டவர் போல, வேற்று மாகாணத்தில் வேற்று பாஷையிலே பத்திரிகைத் தொழில் நடத்தும் பாக்கியம் கிடைக்கப்பெற்று வாழ்ந்து வருகிருர். காலத் துக்கு ஏற்றபடி உடுக்கு அடிக்கும் கோட்டான்களும், ஆவேசத்தோடு சீறுவதுபோல் " பம்மாத்து"ச் செய்து கொண்டு இருக்கும் கிழட்டுப்புலிகளும், பாஷையையும் பாஷையின் வளர்ச்சியையும் பாழ்படுத்திக்கொண்டு இருக்கும்படி அனுமதித்துவரும் தமிழரின் பாஷா அபி மானத்தைக் கோவில்கட்டித்தான் கும்பிட வேண்டும். அன்று மறுமலர்ச்சி என்ற ஒரு வார்த்தை புதிய வேகமும் பொருளும் கொண்டது. அதைச் சிலர் வரவேற்ருர்கள். பலர் கேலி செய்தார்கள். பெரும்பான்மையோர் அதைப் பற்றி அறியாதிருந்தார்கள். மணிக்கொடி பொருளாதார நிர்ப்பந்தம் என்ற நபரால் சிசுஹத்தி செய்யப்பட்டு, அசிரத்தை என்ற முனிஸிபல் குப்பைத் தொட்டியில் எறியப்பட்டது. மூச்சுப் பேச்சற்றுக்கிடந்த அந்தக் குழந்தையை எடுத்து வந்து ஆசை என்ற ஒரே அமுது ஊட்டி வளர்ப்பதற்காக நானும் பி.எஸ். ராமையா என்ற நண்பரும், எங்களைப் போலவே உற்சாகத்தை மட்டும் மூலதனமாகக் கொண்ட இன்னும் சில சக எழுத்தாளர் களும் சேர்ந்து நடத்தி வந்தோம். அது இரண்டு மூன்று வருஷங்களில் கன்னிப் பருவம் எய்திக் கண்ணை மயக்கும் லாவண்யத்தைப் பெறும் சமயத்தில் அதைக் கைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடும் நண்பரைப் பெற்ருேம். அவர் அவளை ஒருவருக்கு விற்ருர். விற்ற உடனே அவளுக்கு

ஜீவன் முக்தி இந்தக் கலிகாலத்தில் கிடைத்தது. இது தான் தமிழிலே புதிய பரிசீலனைகள் செய்யவேண்டும் என்று கோட்டை கட்டியவர்களின் ஆசையின் கதை. **இந்தக் கதையின் ஒரு அம்சம் எனது கதைகள்.''**

மேலே உள்ள வாக்கியங்கள் புதுமைப் பித்தனின் வாக்கியங்கள். வரிக்கு வரி அப்படியே கொடுத்திருக்கிறேன். இந்த வாக்கியங்களுக்குள்ளே புதுமைப் பித்தனின் கதைகளைப் பற்றிய கதை, புறக் கதை' அப்படியே சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

இனி, புதுமைப் பித்தனின் தமிழ் நடையைப் பற்றிச் சில பல சர்ச்சைகள் ஆரம்பத்திலிருந்தே காரசாரமாக விவாதிக்கப்பட்டு வந்துள்ளன. புதுமைப் பித்தனுடைய கற்பனைகளும், புரட்சிகளும் எப்படிச் சர்ச்சைகளுக்கு உள்ளாயினவோ, அப்படியே அவருடைய நடையும் சர்ச்சைக்கு உள்ளாயிற்று. இதைப் பற்றிப் புதுமைப் பித்தனே விரிவாகவும் தெளிவாகவும் விமரிசனம் செய்திருக்கிறார். தமது தமிழ்நடை எத்தகையது. அதன் பரிணமம் என்ன, என்பதைப் புதுமைப்பித்தனே கீழ்க் கண்டவாறு தெளிவுபடுத்துகிறார் :—

'' கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு, தாவித் தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன். அது நானாக எனக்கு வகுத்துக் கொண்ட ஒரு பாதை! அது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் புதிது. அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதன் விளைவாக பாஷைக்குப் புதிது. இதனால் பலர் நான் என்ன எழுதுகிறேன் என்பது பற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொது ஜனங்களுக்குப் புரியாது என்று சொல்லி அனுதாபப்பட்டார்கள். அந்த முறை நல்லதா, கருத்து ஓட்டத்துக்கு வசதி செய்வதா என்பதை அதே முறையில் பலர் எழுதிய பின்புதான் முடிவு கட்ட முடியும். அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பிறகு கைவிட்டு விட்டேன். காரணம், அது சௌகரியக் குறைவுள்ள சாதனம் என்பதற்காக அல்ல எனக்குப்

பலமுறைகளில் கதைகளைப் பின்னிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினுல் அதைக் கைவிட்டு வேறு வழிகளைப் பின்பற்றினேன்......எனது முயற்சி பலிக்காமல் போயி ருக்கலாம். அதனுல் முறை தப்பானது என்று முடிவு கட்டிவிடக்கூடாது. நான் அறியாமல் வகுத்துக் கொண்ட எனது பாதையைப் பற்றி இன்னும் ஒரு வார்த்தை: நான் எந்தச் சமயத்தில் இந்தத் தவளைப் பாய்ச்சல் நடையைப் பின்பற்றினேனே அதே சமயத்தில் மேலை நாடுகளில் அதுவே சிறந்த சிகரமாகக் கருதப் பட்டது என்பதைச் சமீபத்தில் நான் ஒரு இலக்கிய நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தபோது கேட்டு அறிந்தேன். இலக்கிய சிங்காசனத்தில் ஏறி அமர்ந்து கொள்ள எனக்குத்தான் உரிமை என்று கட்சி பேச நான் இந்தக் கருத்தைச் சொல்ல வரவில்லை. கருத்துக்கள் நமது தேசத்து மனஉளைச்சல்களின் உருவகமாக இருந் தாலும் என்போக்கு உலக இலக்கியத்தின் பொதுப் போக்கோடு சேர்ந்து இருந்தது என்பதை எடுத்து காட்டவே இதைக் குறிப்பிட்டேன்!"

இவ்வாறு புதுமைப்பித்தனே தமது தமிழ் நடையின் புரட்சித் தன்மையை நமக்கு மிகத் தெளிவாக விளக்குகிருர்.

புதுமைப் பித்தனுடைய கதைகளில் காணும் புதுமைப் புரட்சிக்கு விளக்கமாக அமைந்திருக்கின்றன நான் மேலே கொடுத்துள்ள இரண்டு பகுதிகளும். முதலாவது மேற்கொள் மணிக்கொடி வாயிலாக எழுந்த புதுமைப் பித்தனின் புதுமை வேட்கை. அடுத்து இரண்டாவதாக நான் கொடுத்துள்ள மேற்கோள் அவருடைய புதுமைப் புரட்சி நடைக்கு அருமையான ஒரு விளக்கம் தருகிறது.

இனி இந்தத் தொகுப்பிலுள்ள பதினுறு கதைகளைப் பற்றி ஒரு சில கூற வேண்டும்.

புதுமைப் பித்தனுடைய கதைகளில் சோடை என்று எதையும் ஒதுக்கிவிடுவது எளிதில்லை. ஏனென்ருல் ஒவ்வொரு கதையும் ஒரு முக்கிய பிரச்னையைக் கேள்விக் குறியாக வளைத்துப் போட்டு நிமிர்ந்து நிற்கக் கூடிய

தனித் தன்மை கொண்டது. வெறும் பொழுது போக்குக் கற்பனைகள் அல்ல அவை. சமூகத்தின் நெஞ்சிலே ஆணி அடிக்கிற கேள்விக்குறிகளே புதுமைப் பித்தனின் கதைகள்! எந்தக் கேள்விக்குறியை எதைவிட அதிக முக்கியம் என்று தேர்ந்து வகைப்படுத்துவது? அவருக்கு அவருடைய கேள்விகள் எல்லாமே முக்கியமாக இருந்த காரணத்தினால்தான் அவை கதைகளாக வடிவம் எடுத்தன! என்றாலும், இந்தத் தொகுப்பின் முக்கியநோக்கம் என்ன வென்றால், ஆசிரியருடைய உள்ளத்தின் முழு வடிவமும், முழுமையான கோணங்களும், அவற்றின் வன்மையும், திண்மையும், மென்மையுங் கூடப் பல வண்ணங்களிலும் பிரதிபலிக்க வேண்டும் என்பதே. இந்த நோக்கத்தோடு பல சந்தர்ப்பங்களில் பலவேறு மனப் பான்மைகளில் பலநிலைகளில் நின்று அவர் எழுதியுள்ள பல் வகைப்பட்ட கதைகளில் பதினாறு கதைகளை இங்கே தொடுத்திருக்கிறேன். இந்தப் பதினாறுகதைகளும் பதினாறு விதமானவை. "எட்டுத் திசையும் பதினாறு கோணமும்" என்று சொல்வார்களே அப்படிப் பரந்து விரிந்து பேசுகின்ற பதினாறு கதைகள் இவை. ஒரு சில கதைகள் மேலெழுந்த வாறாகப் பார்க்கும்போது "இவற்றில் என்ன இருக்கிறது" என்று பலவீனமாகக் கேட்கத் தோன்றும். ஆனால் ஒரு தடவைக்கு இருதடவை படித்துப் பார்த்தால் கதைக்குள் பொதிந்துள்ள நுட்பம் நமக்குத் துலாம்பர மாகும். பலவீனம் போன்ற ஒரு மென்மைக்குள்ளே யிருந்து குண்டு வெடிப்பது போல உண்மை சீறி வரக் காண்போம்! இது புதுமைப்பித்தனின் தனிச்சிறப்பு.

இந்தப் பதினாறு கதைகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் எழுதினால் இந்த முன்னுரை மிகவும் நீண்டு விடும். கதைகளைக் கையிலே கொடுத்துவிட்டால், அவற்றை நீங்களே படித்துப் பார்த்து விடுவீர்கள். உண்ணுவதற்கு மாம்பழங்களைக் கையிலே கொடுக்கும்போது, மாம் பழத்தைப்பற்றி நீண்ட ஒரு சொற்பொழிவு எதற்கு? எனினும், இந்தத் தொகுப்பிலுள்ள கதைகளில் மூன்று அரிய கதைகளைப் பற்றி மட்டும் இங்கே நான்

கட்டாயம் குறிப்பிட வேண்டும். அவை காஞ்சனை, சாப விமோசனம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் ஆகிய மூன்றுமே!

புதுமைப் பித்தனுடைய சில கதைகளைப் பற்றி அவருக்கும் எனக்கும் பல கடிதப் போக்குவரத்துக்கள் நடந்ததுண்டு. அவற்றை யெல்லாம் வெளியிட்டால் அந்தக் கடிதத் தொகுப்பே ஒரு தனி நூலாக அமையும். இந்த முன்னுரையில் அதற்கு அவசிய மில்லை. அவருடைய இந்த மூன்று கதைகளைப் பற்றி அவரே, புதுமைப் பித்தனே என்ன கருத்தை வெளி யிடுகிறார் என்பதை மட்டும் அவருடைய வாக்கியங் களிலேயே அப்படியே மேற்கோளாகக் கொடுக்கி றேன் :—

**காஞ்சனையைப் பற்றி :—**

என் கதைகள் எதுவானாலும் அதில் அழகு காண்கிற நண்பர் ஒருவர் இந்தக் காஞ்சனைக் கதையைப் படித்து விட்டு என்னிடம் வந்து "உங்களுக்குப் பேய் பிசாசு களில் நம்பிக்கை உண்டா?...... ஏன் கதையை அப்படி எழுதினீர்கள்!" என்று கேட்டார். நான், "பேயும் பிசாசும் இல்லை என்றுதான் நம்புகிறேன். ஆனால் பயமாக இருக்கிறதே!" என்றேன். "நீங்கள் சும்மா விளையாட வேண்டாம். அந்தக் கதைக்கு அர்த்தம் என்ன?" என்று கேட்டார். "சத்தியமாக எனக்குத் தெரியாது!" என்றேன். அவருக்கு இந்தப் பதில் திருப்தி இல்லை என்று தெரிந்து கொண்ட பிறகு அவரிடமிருந்து தப்பித்துக் கொண்டு இலக்கியப் பக்குவம் மிகுந்த என் நண்பர் ஒருவரிடம் போனேன். அவர் அட்டகாசமாய் வரவேற்றார். ஜேம்ஸ் ஜாய்ஸ் மாதிரி அதை எழுதி யிருப்பதாகவும், 'கயிற்றரவு' என்று சொல்லுவார்களே ஒரு மயக்க நிலை, அதை அழகாக வார்த்திருப்பதாகவும் சொன்னார். இங்கிலீஷ் இலக்கியத்திலே கடைசிக் கொழுந்து என்று கருதப்படு கிறவர் ஜேம்ஸ் ஜாய்ஸ். அப்படிச் சொன்னால் யாருக்குத்

தான் தலைசுற்றி ஆடாது? அங்கிருந்து வீட்டுக்கு வந்தேன். வார்த்தைகளை வைத்துக்கொண்டு ஜனங்களைப் பயங்காட்டுவது ரொம்ப லேசு என்பதைக் கண்டு கொண்டேன்!

காஞ்சனைக்குப் பிறகு "**சாப விமோசனம்**" இதே மாதிரி அவதிக்கு உள்ளாயிற்று. முக்கால் வாசிப் பேருக்கு அந்தக் கதை பிடிக்கவில்லை. காரணம், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. விமரிசகர், "சென்று தேய்ந்து இறுதல்" என்றார். ஆனால் இன்னும் ஒருவர் வால்மீகி கதையில் அகலிகை கல்லாக வில்லை என்றும், ஜனங்களுக்கு உண்மையை விட உண்மையின் மீதுள்ள பாசிதான் கண்களுக்குப் பளபளப்பாக இருக்கிறது என்றார். பாசி என்பதுதான் என்ன? மனப் பக்குவத்தில் ஒரு நிலைதானே அதுவும்? அப்படிப் பார்க்கப்போனால் ஜனக ராகங்களிலிருந்து ஜன்ய ராகங்கள் பிறப்பது எல்லாமே பாசிதானே? தொன்னைக்கு நெய்தான் ஆதாரம் என்று கருதுகிறவர்கள்தான் ஒரு குறிப்பிட்ட கோல வகையில்தான் எதுவும் அமைந்திருக்க முடியும் என்று நினைக்கிறார்கள். வேறு ஒருவிதமான கோலம் போட்டுக் காண்பிக்க முடியாது, கூடாது என்று கருதுகிறவர்கள் இவர்கள், தத்துவவாதிகள்! உலகசிருஷ்டி இவர்களுடைய தத்துவத்துக்குள் மட்டும் ஒடுங்கிவிடவில்லை.

நான் கதை எழுதுகிறவன். கதையிலே கல் உயிர் பெற்று மனிதத் தன்மை அடைந்துவிடும். மூட்டைப் பூச்சிகள், அபிவாதயே சொல்லும். அதற்கு நான் என்ன செய்யட்டும்! கதையுலகத்தின் நியதி அது. நீங்கள் கண்கூடாகக் காணும் உலகத்தில், மனிதன் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்க்கவில்லையா? மனிதன் கல் மாதிரி இருக்கும் போது கல்தான் சற்று மனிதன் மாதிரி இருந்து பார்க்கட்டுமே! தவிரவும் பழைய கதைகளை எடுத்துக்கொண்டு அதை இஷ்டமான கோணங்களிலெல்லாம் நின்று கொண்டு பார்க்க எங்களுக்கு உரிமை யுண்டு.

சாப விமோசனத்தைப் பற்றிய வரையில் எனக்கு ஒரே ஒரு குறைதான் உண்டு. அதில் வசிஷ்டனையும் கூனியையும் கூட்டிக்கொண்டு வர மறந்து போனது தான் அது. மற்றப்படி யார் எப்படிக் கருதினாலும், ராமாயணக் கதையின் அமைதி முற்றும் பொருந்தித்தான் இருக்கிறது!''

இனி, **கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்** என்ற கதையைப் பற்றிப் பேராசிரியர் புதுமைப்பித்தன் பேசுகிறார் :—

"திருப்பணியில் ஈடுபாடுடைய பக்தர்கள் பலருக்கு அவர்கள் ஆர்வத்துடன் செதுக்கி அடுக்கும் கல்லுக் குவியலுக்கு இடையில் அகப்பட்டு நசுங்கிப் போகாமல் அவர்களுடைய இஷ்ட தெய்வத்தை நான் மெதுவாகப் பட்டணத்திற்குக் கூட்டிக் கொண்டு விட்டதில் பரம கோபம். நான் அகப்பட்டால் என்னைக் கழுவேற்றிப் புண்ணியம் சம்பாதித்துக் கொள்ள விரும்புவார்கள். என்னுடைய கந்தசாமிப் பிள்ளையுடன் ஊர் சுற்றுவதற்குத் தான் கடவுள் சம்மதிக்கிறார். இதற்கு நானா பழி?''

இவ்வாறு புதுமைப்பித்தன் தமது கடவுட் கதையை விளக்குகிறார். புதுமைப்பித்தன் ஒரு மேதாவி. பிறக்கும்போதே நல்ல கூரிய பார்வையும் அரிய ஆற்றலும், மிடுக்கும், நெஞ்சுரமும், தனித்தன்மையோடு கூடிய கற்பனையும் சேர்ந்து பிறந்தவர். வாழ்வில் அவர் பெற்ற அனுபவங்கள், கசப்புகள், கோபதாபங்கள், சிருஷ்டி வெறிக்கு வித்திட்ட நிகழ்ச்சிகள், அவருடைய சொந்த வாழ்க்கையின் சூழ்நிலைகள், ஆகிய எல்லாம் சேர்ந்து அவருடைய கதையிலே பின்னி விளையாடுகின்றன.

அவர் ஓர் அரிய எழுத்தாளர் என்பதோடு, அரிய மனிதராகவும் திகழ்ந்தார். அஞ்சாத நெஞ்சழுத்தமும், தன்னம்பிக்கையும் அவருடைய தனி இயல்புகளாக விளங்கின. ஆங்கிலப் படிப்பும், ஆங்கில நூல்களை மேலும் மேலும் வாங்கிப் படிக்கிற தாகமும் அவரிடம்

நிரம்பியிருந்தன. அந்தப் பண்புகளை யெல்லாம் எழுத்திலே வடிக்கக்கூடிய ஆற்றலும் அவரிடம் இருந்தது.

முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையிலே, முற்றிலும் வேறுபட்ட ஒரு குழலிலே உருவாகிய என்னிடம் அவருக்கு இருந்த அன்பும், மதிப்பும் பலருக்கு வியப்பூட்டின. சிலருக்குக் குழப்பத்தையே தந்தன. என்ருலும் நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மதிக்கவும் வாஞ்சையோடு பார்க்கவும் எங்கள் இதயத்தில் ஓர் அதிசயமான தொடர்பு ஏற்பட்டிருந்தது. ஆகவே இந்தக் கதைகளைத் தேர்ந்தெடுத்து இலக்கிய உலகுக்கு வழங்குவதில் என் நண்பருக்கு நான் செய்கிற ஒரு இலக்கியக் கடமை நிறைவேறுவதாகவே கருதி, இப்போது நான் மனத்திருப்தி அடைகிறேன். அவருடைய ஆற்றலையும் எழுத்தையும் பற்றி எத்தனையோ கூறிக்கொண்டே போகலாம். அதற்கு இடம் இல்லாதபடி அவரே தம்மைப்பற்றி என்ன கருதுகிருர் என்பதற்கு அவருடைய உரையின் ஒரு பகுதியையே இங்கே கூறி முடிக்கிறேன். புதுமைப் பித்தனைப் பற்றி வேறு யாரும் இவ்வளவு தெளிவாகச் சொல்ல முடியாது. தாமே தம்மைப்பற்றி எழுதுகிற அந்த அற்புதமான பகுதி வருமாறு:—

பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் செய்யும் ஸ்தாபனம் அல்ல! பிற்கால நல்வாழ்வுக்குச் சௌகரியம் பண்ணி வைக்கும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன். சிலர் என்னோடு சேர்ந்து கொண்டு சிரிக்கிருர்கள். இன்னும் சிலர் கோபிக்கிருர்கள். இவர்கள் கோபிக்கக் கோபிக்கத்தான் அவர்களை இன்னும் கோபிக்க வைத்து முகம் சிவப்பதைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனுல், இப்படிக் கோபிப்பவர்கள் கூட்டம் குறையக் குறையத்தான் எனக்குக் கவலை அதிகமாகி வருகிறது. இவர் இன்னமாதிரிதான் எழுதுவது வழக்கம், அதைப் பாராட்டுவது குறிப்பிட்ட மனப்பக்குவம் தமக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் கௌரவம் என்ருகி,

என்னைச்சட்டம் போட்டுச் சுவரில் மாட்டிப் பூப் போட்டு மூடிவிடுவதுதான் என் காலை இடறி விடுவதற்குச் சிறந்த வழி. அந்த விளையாட்டெல்லாம் என்னிடம் பலிக்காது! நீங்கள் என் கதைகளைக் கொள்ளாவிட்டாலும் நான் கவலைப்படவில்லை. வாழையடி வாழையாகப் பிறக்கும் வாசகர்களில் எவனோ ஒருவனுக்கு நான் எழுதிக் கொண்டிருப்பதாகவே மதிக்கிறேன். விமரிசக மக்களுக்கு ஒரு வார்த்தை:—வேதாந்திகளின் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்து விட்டவைகளும். அவை உங்கள் அளவு கோல்களுக்குள் அடைபடாதிருந் தால் நானும் பொறுப்பாளி அல்ல; நான் பிறப்பித்து விளையாட விட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளிகள் அல்ல. உங்கள் அளவு கோல்களைத்தான் என் கதை களின் அருகில் வைத்து அளந்து பார்த்துக் கொள்ளுகிறீர் கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்".

இது புதுமைப்பித்தன் குரல்! உள்ளே உள்ள கதை களுக்குள் நுழைவதற்கு முன்னால் அந்தக் கதைகளைப் படைத்த ஆசிரியரின் குரலைக் கேட்டு விட்டீர்கள் அல்லவா? எல்லாவிதத்திலும் புதிய ஒரு குரலாக ஒலிக்கிறது அல்லவா இது? கதைகளுக்கு உள்ளேயும் இந்தப் புதுமை ஒலியே கேட்கும். நம்முடைய அளவு கோல்களைக் கொண்டு நாம் இதுவரை அளந்து பார்த்த எழுத்து வேறு விதம். இப்போது நாம் புகுந்து பார்க்கப் போகும் எழுத்து முற்றிலும் வேறு விதம். அந்த எழுத்துக்குப் பெயர்தான் **புதுமைப்பித்தன்!** அவன் அமரன்!

**மீ. ப. சோமசுந்தரம்**

# சாப விமோசனம்

*(ராமாயண பரிசயமுள்ளவர்களுக்கு இந்தக் கதை பிடிபடாமல் (பிடிக்காமல் கூட) இருக்கலாம். அதை நான் பொருட்படுத்த வில்லை.)*

## 1

**சாலை**யிலே ஒரு கற்சிலை. தளர்ந்து நொடிந்து போன தசைக் கூட்டத்திலும், வீரியத்தைத் துள்ள வைக்கும் மோகன வடிவம்; ஓர் அபூர்வ சிற்பி பூலோகத்தில் இதற்காகவென்றே பிறந்து தன் கனவையெல்லாம் கல்லில் வடித்து வைத்தானோ என்று தோன்றும் அவ்வளவு லாகிரியை ஊட்டுவது. ஆனால் அந்தப் பதுமையின் கண்களிலே ஒரு சோகம்—சொல்லில் அடைபடாத சோகம்—பிறந்து, பார்க்கிறவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அது சிற்பியின் அபூர்வக் கனவு அன்று. சாபத்தின் விளைவு. அவள் தான் அகலிகை.

அந்தக் காட்டுப் பாதையில் கல்லில் அடித்து வைத்த சோகமாக, அவளது சோகத்தைப் பேதமற்ற கண்கொண்டு பார்க்கும் துறவி போன்ற இயற்கையின் மடியிலே கிடக்கிறாள். சூரியன் காய்கிறது. பனி பெய்கிறது. மழை கொழிக்கிறது. தூசும் தும்பும் குருவியும் கோட்டானும் குந்துகின்றன; பறக்கின்றன. தன் நினைவற்ற தபஸ்வியாக—கல்லாக—கிடக்கிறாள்.

சற்றுத் தூரத்திலே ஒரு கறையான் புற்று. நிஷ்டையில் ஆழ்ந்து தன் நினைவகற்றித் தன் சோகத்தை மறந்து தவம் கிடக்கிறான் கோதமன். இயற்கை, அவனையும் அபேதமாகத்தான் போஷிக்கிறது.

இன்னும் சற்றுத் தூரத்திலே இந்தத் தம்பதிகளின் குடும்பக் கூடு கம்பமற்று வீழ்ந்ததுபோல, இவர்களுக்கு நிழல் கொடுத்த கூரையும் தம்பம் இற்று வீழ்ந்து பொடியாகிக் காற்றோடு கலந்துவிட்டது.

சுவரும் கரைந்தது. மிஞ்சியது திரடுதான். இவர்கள் மனசில் ஏறிய துன்பத்தின் வடுப்போலத் தென்பட்டது அது.

தூரத்திலே கங்கையின் சலசலப்பு. அன்னை கங்கை, இவர்களது எல்லையற்ற சோகத்தை அறிவாளோ என்னவோ!

இப்படியாக ஊழி பல கடந்தன, தம்பதிகளுக்கு.

ஒரு நாள்......

முற்பகல் சூரிய ஒளி சற்றுக் கடுமைதான். என்றாலும் கொடிகளின் பசுமையும் நிழலும், இழைந்து வரும் காற்றும், உலகின் துன்பத்தை மறைக்க முயன்று நம்பிக்கையையும் வலுவையும் தரும் சமய தத்துவம்போல, இழைந்து மனசில் ஒரு குளுமையைக் கொடுத்தன.

ஆண் சிங்கம் போல, மிடுக்கு நடை நடந்து, எடுத்த கருமம் முற்றியதால் உண்ட மகிழ்ச்சியை மனசில் 'அசை போட்டு'க் கொண்டு, நடந்து வருகிறான் விசுவாமித்திரன். மாரீசனும் சுவாகுவும் போன இடம் தெரியவில்லை. தாடகை என்ற கிழட்டுக் கொடுமை நசித்துவிட்டது. நிஷ்டையில் ஆழ்ந்தும், எரியோம்பியும் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நிம்மதியைத் தரும் சாதனமாகத் தன்னை ஆக்கிக் கொண்டதில் ஒரு திருப்தி.

அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொள்கிறான். பார்வையில் என்ன பரிவு! இரண்டு குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடி வருகின்றன. அவர்கள் வேறு யாருமல்ல; அவதார சிசுக்களான ராம லக்ஷ்மணர்களே. அரக்கர் நசிவை ஆரம்பித்து வைத்துவிட்டு அதன் பொறுப்புத் தெரியாமல் ஓடிப் பிடித்து வருகிறார்கள்.

ஓட்டம் புழுதியைக் கிளப்புகிறது. முன்னால் ஓடி வருகிறான் லக்ஷ்மணன்; துரத்தி வருபவன் ராமன். புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது......

என்ன உத்ஸாகமோ என்று உள்ளக் குதூகலிப்புடன் திரும்பிப் பார்க்கிறார் விசுவாமித்திரர். பார்த்தபடியே நிற்கிறார்.

புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது.

எப்போதோ ஒரு நாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. போன போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. கல்லில் ஜீவ உஷ்ணம் பரவி உயிருள்ள தசைக் கோளமாகிறது. பிரக்ஞை வருகிறது.

கண்களை மூடித் திறக்கிறாள் அகலிகை. பிரக்ஞை தெளிகிறது. சாப விமோசனம்! சாப விமோசனம்!

தெய்வமே! மாசுபட்ட இந்தத் தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது!

தனக்கு மறுபடியும் புதிய வாழ்வைக் கொடுக்க வந்த தெய்வீக புருஷன்? அந்தக் குழந்தையா?

அவன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிருள். ராமன் ஆச்சர்யத்தால் ரிஷியைப் பார்க்கிருன்.

விசுவாமித்திரருக்குப் புரிந்துவிட்டது. இவள் அகலிகை. அன்று இந்திரனுடைய மாய வேஷத்துக்கு ஏமாறிய பேதை. கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக, தன் உடம்பை, மாய வேஷத்தால் ஏமாறி, மாசுபடுத்திக்கொண்டவள்; கோதமனின் மனைவி. அவ்வளவையும் ராமனிடம் சொல்லுகிருர். அதோ நிற்கும் புற்று இருக்கிறதே; அதில், வலை முட்டையில் மோனத்தவங் கிடக்கும் பட்டுப் பூச்சிபோலத் தன்னை மறந்து நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிருன். அதோ அவனே எழுந்துவிட்டானே!

நிஷ்டை துறந்த கண்கள் சாணை தீட்டிய கத்திபோல் சுருள்கின்றன. உடலிலே, காயகற்பம் செய்ததுபோல் வலு பின்னிப் பாய்கிறது. மிடுக்காக, பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவனைப் போலத் தயங்கி வருகிருன்.

மறுபடியும் இந்தத் துன்ப வலையா? சாப விமோசனத்துக்குப் பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்கவில்லை. இப்பொழுதோ அது பிரம்மாண்டமான மதிளாக அவனது வாழ்வைச் சுற்றியே மண்டலிக்கிறது. அவன் மனம் மிரளுகிறது.

ராமனுடைய கல்வி, தர்மக் கண்கொண்டு பார்த்தது. தெளிவின் ஒளி பூண்டது. ஆனுல் அநுபவச் சாணையில் பட்டை பிடிக்காதது; வாழ்வின் சிக்கலின் ஒவ்வொரு நூலையும் பின்னலோடு பின்னல் ஓடியாமல் பார்த்த வசிஷ்டனுடைய போதனை. ஆனுல் சிறுமையை அறியாதது. புது வழியில் துணிந்து போக அறிவுக்குத் தெம்பு கொடுப்பது.

உலகத்தின் தன்மை என்ன, இப்படி விபரீதமாக முறுக்கேறி உறுத்துகிறது! மனசுக்கும் கரணசக்தியின் நிதானத்துக்கும் கட்டுப் படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின்மீது தண்டனை? "அம்மா!" என்று சொல்லி அவள் காலில் விழுந்து வணங்கு கிருன் ராமன்.

இரண்டு ரிஷிகளும், (ஒருவன் துணிச்சலையே அறிவாகக் கொண்டவன்; மற்றவன் பாசத்தையே தர்மத்தின் அடித்தலமாகக் கொண்டவன்) சிறுவனுடைய நினைவுக்கோணத்தில் எழுந்த கருத்துக்களைக் கண்டு குதூகலிக்கிருர்கள். எவ்வளவு லேசான, அன்பு மயமான, துணிச்சலான உண்மை.

"நெஞ்சினுல் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக் கொள்ளுவதுதான் பொருந்தும்" என்ருன் விசுவாமித்திரன் மெதுவாக.

குளுமை பூண்ட காற்றில் அவனது வாதக் கர கரப்பு ரஸபேதம் காட்டுகிறது.

கோதமனும், அவன் பத்தினியும், அந்தத் தம்ப மற்றுத் திரடேறிப் போன மேடும் அவ்விடத்தை விட்டு அகலவில்லை. முன்பு உயிரற்றிருந்த இடத்தில் ஜீவகளை துவள நினைத்தது.

சாட்டையின் கொடுக்கைப் போலப் போக்கை மாற்றி யமைக்க வந்த சக்திகள் அவ்விடம் விட்டுப் பெயர்ந்துவிட்டன. மிதிலைக்குப் பொழுது சாயும் பொழுதாவது போக வேண்டாமா? மணவினை, இரு கைகளை நீட்டி அழைக்கிறதே.

கோதமனுக்கு அவளிடம் முன்போல் மனக் களங்கமின்றிப் பேச நாவெழவில்லை. அவளை அன்று விலைமகள் என்று சுட்டது, தன் நாக்கையே பொசுக்க வைத்து விட்டது போல இருக்கிறது. என்ன பேசுவது? என்ன பேசுவது? என்ன பேசுவது?

"என்ன வேண்டும்?" என்ருன் கோதமன். அறிவுத் திறம் எல்லாம் அந்த உணர்ச்சிச் சுழிப்பிலே அகன்று பொருளற்ற வார்த்தையை உந்தித் தள்ளியது.

"பசிக்கிறது" என்ருள் அகலிகை, குழந்தைபோல.

அருகிலிருந்த பழனத்தில் சென்று கனிவர்க்கங்களைச் சேகரித்து வந்தான் கோதமன். அன்று, முதல் முதல் மணவினை நிகழ்ந்த புதிதில் அவனுடைய செயல்களில் துவண்ட ஆசையும் பரிவும் விரல்களின் இயக்கத்தில் தேக்கத்தில் காட்டின.

'அந்த மணவினை உள்ளப்பரிவு பிறந்த பின்னர் பூத்திருந்தாலும், ஏமாற்றின் அடிப்படையில் பிறந்ததுதானே: பசுவை வலம் வந்து பறித்து வந்ததுதானே!' என்று கோதமனுடைய மனசு, திசை மாறித் தாவித் தன்னையே சுட்டுக்கொண்டது.

அகலிகை பசி தீர்ந்தாள்.

அவர்கள் மனசில் பூர்ணமான கனிவு இருந்தது. ஆனுல் இருவரும் இருவிதமான மனக்கோட்டைகளுக்குள் இருந்து தவித்தார்கள்.

கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்பதே அகலிகையின் கவலை.

அகலிகைக்குத் தான் ஏற்றவனு என்பதே கோதமனின் கவலை.

சாலையோரத்தில் பூத்திருந்த மலர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்தன.

# 2

அகலிகையின் விருப்பப்படி, ஆசைப்படி அயோத்தி வெளி மதில்களுக்குச் சற்று ஒதுங்கி, மனுஷ பரம்பரையின் நெடிபடாத தூரத்தில், சரயூ நதிக்கரையிலே ஒரு குடிசை கட்டிக்கொண்டு தர்ம விசாரம் செய்து கொண்டிருந்தான் கோதமன். இப்பொழுது கோதமனுக்கு அகலிகைமீது பரிபூரண நம்பிக்கை. இந்திரன் மடிமீது அவள் கிடந்தால்கூட அவன் சந்தேகிக்க மாட்டான். அவ்வளவு பரிசுத்த வதியாக நம்பினான் அவன். அவளது சிற்றுதவி இல்லாவிடின் தனது தர்மவிசாரம் தவிடு பொடியாகிவிடும் என்ற நிலை அவனுக்கு ஏற்பட்டது.

அகலிகை அவனை உள்ளத்தினால் அளக்க முடியாத ஓர் அன்பால் தழைக்க வைத்தாள். அவனை நினைத்து விட்டால், அவள் மனமும் அங்கங்களும் புது மணப் பெண்ணுடையனபோலக் கனிந்துவிடும். ஆனால், அவள் மனசில் ஏறிய கல் அகலவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி, விசேஷமாகக் கூர்ந்து பார்க்கக் கூட, இடங் கொடாதபடி நடக்க விரும்பினாள். அதனால் அவள் நடையில் இயற்கையின் தன்மை மறந்து இயல்பு மாறியது. தன்னைச் சூழ நிற்பவர்கள் யாருமே இந்திரர்களாகத் தென் பட்டார்கள்; அகலிகைக்குப் பயம் நெஞ்சில் உறையேறிவிட்டது. அந்தக் காலத்திலிருந்த பேச்சும் விளையாட்டும் குடியோடிப் போயின. ஆயிரம் தடவை மனசுக்குள் திருப்பித் திருப்பித் சொல்லிப் பாடம் பண்ணிக்கொண்டு, அந்த வார்த்தை சரிதானா என்பதை நாலு கோணத்திலிருந்தும் ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் எதையும் சொல்லுவாள். கோதமன் சாதாரணமாகச் சொல்லும் வார்த்தைகளுக்குக்கூட உள்ளர்த்தம் உண்டோ என்று பதைப்பாள்.

வாழ்வே அவளுக்கு நரக வாதனையாயிற்று.

அன்று மரீசி வந்தார். முன்னொரு நாள் ததீசி வந்தார். மதங்கரும் வாரணாசி செல்லும்போது கோதமனைக் குசலம் விசாரிக்க எட்டிப்பார்த்தார். அவர்கள் மனசில் கனிவும் பரிவும் இருந்த போதிலும், அகலிகையின் உடம்பு குன்றிக் கிடந்தது. மனசும் கூம்பிக் கிடந்தது. அதிதி உபசாரங்கூட வழுவி விடும்போல

இருந்தது. ஏறிட்டுச் சாதாரணமாகப் பார்க்கிறவர்களையும் களங்க மற்ற கண்கொண்டு பார்க்கக் கூசியது. குடிசையில் ஒளிந்து கொண்டாள்.

கோதமனுடைய சித்தாந்தமே இப்பொழுது புது வித விசாரணையில் திரும்பியது. தர்மத்தின் வேலிகள் யாவும் மனமறிந்து செய்பவர் களுக்கே. சுயப் பிரக்ஞை இல்லாமல் வழு ஏற்பட்டு, அதனால் மனுஷ வித்து முழுவதுமே நசிந்துவிடும் என்றாலும், அது பாபம் அல்ல; மனவயிப்பும், லயப்பிரக்ஞையுடன் கூடிய செயலீடு பாடுமே கறை படுத்துபவை. தனது இடிந்து போன குடிசையில் மறுபடியும் பிறர் கூட்டி வைத்த ஒரு தன்மையில் இருந்து கொண்டு புதிய கோணத்தில் தன் சிந்தனையைத் திருப்பி விட்டான் கோதமன். அவனுடைய மனசில் அகலிகை மாசு அற்றவளாகவே உலாவினாள்; தனக்கே அருகதை இல்லை; சாபத் தீயை எழுப்பிய கோபமே தன்னை மாசு படுத்திவிட்டது என்று கருதினான்.

சீதையும் ராமனும் உல்லாசமாகச் சமயா சமயங்களில் அந்தத் திசையில் ரதமூர்ந்து வருவார்கள். அவதாரக் குழந்தை, கோதமனின் மனசில் லக்ஷ்ய வாலிபனாக உருவாகித் தோன்றினான். அவனது சிரிப்பும் விளையாட்டுமே தர்மசாஸ்திரத்தின் தூண்டாவிளக்கு களாகச் சாயனம் (வியாக்கியானம்) பண்ணின. அந்த இளம் தம்பதிகளின் பந்தந்தான் என்ன? அது கோதமனுக்குத் தனது அந்தக் காலத்து வாழ்வை ஞாபகப் படுத்தும்.

அகலிகையின் மனப் பாரத்தை நீக்க வந்த மாடப்புறா சீதை. அவளது பேச்சும் சிரிப்பும் தன் மீதுள்ள கறையைத் தேய்த்துக் கழுவுவனபோல் இருந்தன அகலிகைக்கு. அவள் வந்த போதுதான் அகலிகையின் அதரங்கள் புன்சிரிப்பால் நெளியும். கண்களில் உல்லாசம் உதயவொளி காட்டும்.

வசிஷ்டரின் கண் பார்வையிலே வளரும் ராஜ்ய லக்ஷ்யங்கள் அல்லவா? சரயூ நதியின் ஓரத்தில் ஒதுங்கி இரு தனி வேறு உலகங்களில் சஞ்சரிக்கும் ஜீவன்களிடையே பழைய கலகலப்பைத் தழைக்க வைத்து வந்தார்கள்.

அகலிகைக்கு வெளியே நடமாடி நாலு இடம் போவதற்குப் பிடிப்பற்று இருந்தது. சீதையின் நெருக்கமே அவளது மனச் சுமையை நீக்கிச் சற்றுத் தெம்பை அளித்தது.

பட்டாபிஷேக வைபவத்தின்போது அயோத்திக்கு வருவதாக ஒப்புக் கொண்டிருந்தாள். ஆனால் அரண்மனைக்குள் ஏற்பட்ட உணர்ச்சிச் சுழிப்புக்குத்தான் என்ன வலிமை! ஒரே மூச்சில் தசரதன்

உயிரை வாங்கி, ராமனைக் காட்டுக்கு விரட்டி, பரதனைக் கண்ணீரும் கம்பளியுமாக நந்திக்கிராமத்தில் குடியேற்றி விட்டது.

மனுஷ அளவைகளுக்குள் எல்லாம் அடைபடாத அதீத சக்தி, ஏதோ உன்மத்த வேகத்தில் காயுருட்டிச் சொக்கட்டான் ஆடியது போல், நடந்து முடிந்துவிட்டது.

வசிஷ்டர்தான் என்ன, சர்வ ஜாக்கிரதையோடு மனுஷ தர்மத்தின் வெற்றியாக ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கண்ணில் எண்ணெயூற்றி வளர்த்தார். அவருடைய கணக்குகள் யாவும் தவிடுபொடியாகி, நந்திக் கிராமத்தில் நின்றெரியும் மினுக்கு வெளிச்சமாயிற்று.

சரயூ நதிக் குடிசை மறுபடியும் தம்பமற்று விழுந்தது என்று சொல்லவேண்டும். கோதமன் தர்ம விசாரமெல்லாம் இந்தப் பேய்க் காற்றில் சூறை போயிற்று. மனசில் நம்பிக்கை வறண்டு சூன்ய மாயிற்று.

அகலிகைக்கோ ? அவளது துன்பத்தை அளந்தால் வார்த்தைக் குள் அடைபடாது. அவளுக்குப் புரியவில்லை. நைந்து ஓய்ந்து விட்டாள். ராமன் காட்டுக்குப் போனான். அவன் தம்பியும் தொடர்ந்தான் ; சீதையும் போய்விட்டாள். முன்பு கற்சிலையாகிக் கிடந்தபோது மனசு இருண்டு கிடந்த மாதிரி ஆகிவிட்டது. ஆனால் மனப் பாரத்தின் பிரக்ஞை மட்டும் தாங்க முடியவில்லை.

கருக்கலில் கோதமர் ஜபதபங்களை முடித்துக்கொண்டு கரை யேறிக் குடிசைக்குள் நுழைந்தார்.

அவர் பாதங்களைக் கழுவுவதற்காகச் செம்பில் ஜலத்தை ஏந்தி நின்ற அகலிகையின் உதடு அசைந்தது.

"எனக்கு இங்கு இருப்புக் கொள்ளவில்லை. மிதிலைக்குப் போய் விடுவோமே."

"சரி, புறப்படு ; சதானந்தனையும் பார்த்து வெகு நாட்களாயின" என்று வெளியே இறங்கினார் கோதமர்.

இருவரும் மிதிலைநோக்கி நடந்தார்கள். இருவர் மனசிலும் பளு குடியேறி அமர்ந்திருந்தது. கோதமர் சற்று நின்றார்.

பின் தொடர்ந்து நடந்துவந்த அகலிகையினுடைய கையை எட்டிப் பிடித்துக்கொண்டார் ; நடந்தார் ; "பயப்படாதே" என்றார்.

இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள்.

# 3

பொழுது புலர்ந்துவிட்டது. கங்கைக் கரைமேல் இருவரும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

யாரோ ஆற்றுக்குள் நின்று கணீரென்ற குரலில் காயத்திரியைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஜபம் முடியுமட்டும் தம்பதிகள் கரையில் எட்டிக் காத்து நின்றார்கள்.

''சதானந்தா!'' என்று கூப்பிட்டார் கோதமர்.

''அப்பா...அம்மா'' என்று உள்ளத்தின் மலர்ச்சியைக் கொட்டிக் காலில் விழுந்து நமஸ்கரித்தார் சதானந்தர்.

அகலிகை அவனை மனசால் தழுவினாள். குழந்தை சதானந்தன் எவ்வளவு அன்னியனாகி விட்டான், தாடியும் மீசையும் வைத்துக் கொண்டு ரிஷிமாதிரி!

கோதமருக்கு மகனது தேஜஸ் மனசைக் குளுமை யூட்டியது.

சதானந்தன் இருவரையும் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றான். சிரம பரிகாரம் செய்துகொள்ளுவதற்கு வசதி செய்து வைத்துவிட்டு, ஜனகனது தத்துவ விசார மண்டபத்துக்குப் புறப்படலானான்.

கோதமரும் உடன் வருவதாகப் புறப்பட்டார். மகனுக்கு அவரை அழைத்துச் செல்லுவதில் பிரியந்தான். நெடுந்தூரத்துப் பிரயாண மாச்சே என்று ரத்த பந்தத்தின் பரிவால் நினைத்தான். ஊழிகாலம் நிஷ்டையில் கழித்தும் வாடாத தசைக் கூட்டமா, இந்த நடைக்குத் தளர்ந்துவிடப் போகிறது? அவனுக்குப் பின் புறப்பட்டார். அவருடைய தத்துவ விசாரணையின் புதிய போக்கை நுகர ஆசைப் பட்டான் மகன்.

மிதிலையின் தெருக்கள் வழியாகச் செல்லும்போது, அயோத்தியில் பிறந்த மனத்தொய்வும் சோகமும் இங்கும் படர்ந்திருப்பதாகப் புலப் பட்டன கோதமருக்கு. அடக்கிவிட்ட பெருமூச்சு, காற்றினூடே கலந்து இழைந்தது.

ஜனங்கள் போகிறார்கள், வருகிறார்கள்; காரியங்களைக் கவனிக் கிறார்கள்; நிஷ்காம்ய சேவைபோல எல்லாம் நடக்கிறது; பிடிப்பு இல்லை; லயிப்பு இல்லை.

திருமஞ்சனக் குடம் ஏந்திச் செல்லும் அந்த யானையின் நடையில் விறுவிறுப்பு இல்லை ; உடன் செல்லும் அர்ச்சகன் முகத்தில் அருளின் குதுகலிப்பு இல்லை.

இருவரும் அரசனுடைய பட்டிமண்டபத்துக்குள் நுழைந்தார்கள். சத்சங்கம் சேறு சமுத்திரமாக நிறைந்திருந்தது. இந்த அங்காடியில் ஆராய்ச்சி எப்படி நுழையும் என்று பிரமித்தார் கோதமர். அவர் நினைத்தது தவறுதான்.

ஜனகன் கண்களில் இவர்கள் உடனே தென்பட்டார்கள்.

அவன் ஓடோடியும் வந்து முனிவருக்கு அர்க்கியம் முதலிய உபசாரங்கள் செய்வித்து அழைத்துச் சென்று அவரைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டான்.

ஜனகனுடைய முகத்தில் சோகத்தின் சோபை இருந்தது. ஆனல் அவன் பேச்சில் தழுதழுப்பு இல்லை ; அவனுடைய சித்தம் நிதானம் இழக்கவில்லை என்பதைக் காட்டியது.

என்னத்தைப் பேசுவது என்று கோதமர் சற்றுத் தயங்கினர்.

''வசிட்டன் தான் கட்டிய ராஜ்யத்தில் உணர்ச்சிக்கு மதகு அமைக்கவில்லை'' என்ருன் ஜனகன், மெதுவாகத் தாடியை நெருடிக்கொண்டு.

ஜனகனின் வாக்கு, வர்மத்தைத் தொட்டுவிட்டது.

''உணர்ச்சியின் சுழிப்பிலேதானே உண்மை பிறக்கும்'' என்ருர் கோதமர்.

''துன்பமும் பிறக்கும், உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாது போனல். ராஜ்யத்தைக் கட்ட ஆசைப்படும்போது அதற்கும் இடம் போட்டுவைக்க வேண்டும் ; இல்லாவிட்டால் ராஜ்யம் இருக்காது'' என்ருன் ஜனகன்.

''தங்களதோ ?'' என்று சந்தேகத்தை எழுப்பினர் கோதமர்.

''நான் ஆளவில்லை ; ஆட்சியைப் புரிந்துகொள்ள முயலுகிறேன்'' என்ருன் ஜனகன்.

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.

''தங்களது தர்ம விசாரணை எந்த மாதிரியிலோ ?'' என்று விநயமாகக் கேட்டான் ஜனகன்.

''இன்னும் ஆரம்பிக்கவே இல்லை ; இனிமேல்தான் புரிந்து கொள்ள முயலவேண்டும் ; புதிர்கள் பல புலங்களை யெல்லாம் கண்ணியிட்டுக் கட்டுகின்றன'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் கோதமர்.

மறுநாள் முதல் அவர் ஜனகன் மண்டபத்துக்குப் போகவில்லை.

புத்தியிலே பல புதிர்கள் ஹிமாசலத்தைப்போல் ஓங்கி நின்றன. தனிமையை விரும்பினுர். ஆனுல் நாடிச் செல்லவில்லை. அகலிகை மனசு ஒடிந்துவிடக் கூடாதே !

மறுநாள் ஜனகன், "முனிசுவரர் எங்கே?" என்று ஆவலுடன் கேட்டான்.

"அவர் எங்கள் குடிசைக்கு எதிரே நிற்கும் அசோக மரத்தடியில் தான் பொழுதைக் கழிக்கிருர்" என்ருர் சதானந்தர்.

"நிஷ்டையிலா?"

"இல்லை; யோசனையில்"

"அலை அடங்கவில்லை" என்று தனக்குள்ளே மெதுவாகச் சொல்லிக் கொண்டான் ஜனகன்.

அகலிகைக்கு நீராடுவதில் அபார மோகம். இங்கே கங்கைக் கரையருகே நிம்மதி இருக்கும் என்று தனியாக உதய காலத்திலேயே குடமெடுத்துச் சென்றுவிடுவாள்.

இரண்டொரு நாட்கள் தனியாக, நிம்மதியாகத் தனது மனசின் கொழுந்துகளைத் தன்னிச்சையோடு படரும்படி விட்டு, அதனுல் சுமை நீங்கியதாக ஒரு திருப்தியுடன் குளித்து முழுகி விளையாடி விட்டு நீர்மொண்டு வருவாள்.

இது நீடிக்கவில்லை.

குளித்துவிட்டுத் திரும்பிக் குனிந்த நோக்குடன், மனசை இழைய விட்டுக்கொண்டு நடந்துவந்துகொண்டிருந்தாள்.

எதிரே மெட்டிச் சப்தம் கேட்டது. ரிஷி பத்தினிகள் யாரோ: அவர்களும் நீராடத்தான் வந்துகொண்டிருந்தார்கள். அவளைக் கண்டதும் பறைச்சியைக் கண்டதுபோல ஒடி விலகி, அவளை விறைத்துப் பார்த்துவிட்டுச் சென்ருர்கள்.

"அவள்தான் அகலிகை" என்பது தூரத்தில் கேட்டது. கோதமனுக்கு அன்று அடிவயிற்றில் பற்றிக்கொண்டு பிறந்த சாபத் தீயைவிட அதிகமாகச் சுட்டன அவ்வார்த்தைகள்.

அவள் மனசு ஒரேயடியாகச் சுடுகாடு மாதிரி வெந்து தகித்தது. சிந்தனை திரிந்தது. "தெய்வமே: சாப விமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடையாதா?" என்று தேம்பினுள்.

யந்திரப் பாவைபோல அன்று கோதமருக்கும் சதானந்தருக்கும் உணவு பரிமாறினுள். 'மகனும் அன்னியனுகிவிட்டான்; அன்னியரும் விரோதிகளாகி விட்டார்கள்; இங்கென்ன இருப்பு?' என்பதே அகலிகையின் மனசு அடித்துக்கொண்ட பல்லவி.

கோதமர் இடையிடையே பிரக்ஞை பெற்றவர்போல் ஒரு

கவளத்தை வாயிலிட்டு நினைவில் தோய்ந்திருந்தார்.

இவர்களது மன அவசத்தால் ஏற்பட்ட பளு சதானந்தனையும் மூச்சுத் திணற வைத்தது.

பளுவைக் குறைப்பதற்காக, "அத்திரி முனிவர் ஜனகனைப் பார்க்க வந்திருந்தார். அகத்தியரைப் பார்த்துவிட்டு வருகிறார். மேருவுக்குப் பிரயாணம். ராமனும் சீதையும் அகத்தியரைத் தரிசித்தார்களாம். அவர்கள் இருவரையும், 'நல்ல இடம் பஞ்சவடி. அங்கே தங்குங்கள்' என்று அகத்தியர் சொன்னாராம். அங்கே இருப்பதாகத்தான் தெரிகிறது" என்றான் சதானந்தன்.

"நாமும் தீர்த்தயாத்திரை செய்தால் என்ன?" என்று அகலிகை மெதுவாகக் கேட்டாள்.

"புறப்படுவோமா?" என்று கைகளை உதறிக்கொண்டு எழுந்தார் கோதமர்.

"இப்பொழுதேயா?" என்றான் சதானந்தன்.

"எப்பொழுதானால் என்ன?" என்று கூறிக்கொண்டே, மூலையி லிருந்த தண்டு கமண்டலங்களை எடுத்துக்கொண்டு வாசலை நோக்கினார் கோதமர்.

அகலிகை பின் தொடர்ந்தாள்.

சதானந்தன் மனம் தகித்தது.

## 4

பொழுது சாய்ந்து, ரேகை மங்கிவிட்டது. இருவர் சரயூ நதிக்கரை யோரமாக அயோத்தியை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

பதினான்கு வருஷங்கள் ஓடிக் காலவெள்ளத்தில் ஐக்கியமாகி விட்டன. அவர்கள் பார்க்காத முனிபுங்கவர் இல்லை; தரிசிக்காத க்ஷேத்திரம் இல்லை. ஆனால் மனநிம்மதி மட்டிலும் அவர்களுக்கு இல்லை.

வலுவற்றவனின் புத்திக்கு எட்டாது நிமிர்ந்து நிற்கும் சங்கர னுடைய சிந்தனைக் கோயில்போல, திடமற்றவர்களின் கால் களுக்குள் அடைபடாத கைலயங்கிரியைப் பனிச் சிகரங்களின் மேல் நின்று தரிசித்தார்கள்.

தமது துன்பச் சுமையான நம்பிக்கை வறட்சியை உருவகப் படுத்தின பாலையைத் தாண்டினார்கள்.

தம் உள்ளம்போலக் கொழுந்துவிட்டுப் புகைமண்டிச் சாம்பலையும் புழுதியையும் கக்கும் எரிமலைகளை வலம்வந்து கடந்தார்கள்.

தமது மனம்போல ஓயாது அலைமோதிக்கொண்டு கிடக்கும் சமுத்திரத்தின் கரையை எட்டிப் பின்னிட்டுத் திரும்பினார்கள்.

தம் வாழ்வின் பாதைபோன்ற மேடு பள்ளங்களைக் கடந்து வந்து விட்டார்கள்.

"இன்னும் சில தினங்களில் ராமன் திரும்பி விடுவான்; இனி மேலாவது வாழ்வின் உதயகாலம் பிறக்கும்" என்ற ஆசைதான் அவர்களை இழுத்து வந்தது.

பதினான்கு வருஷங்களுக்கு முன் தாம் கட்டிய குடிசை இற்றுக் கிடந்த இடத்தை அடைந்தார்கள்.

இரவோடு இரவாக, குடியிருக்க வசதியாகக் கோதமர் அதைச் செப்பனிட்டார். வேலை முடியும்போது உதய வெள்ளி சிரித்தது.

இருவரும் சரயூவில் நீராடித் திரும்பினார்கள்.

கணவனாருக்குப் பணிவிடை செய்வதில் முனைந்தாள் அகலிகை. இருவரது மனசும் ராமனும் சீதையும் வரும் நாளை முன்னோடி வரவேற்றது. இருந்தாலும் காலக் களத்தின் நியதியை மனசைக் கொண்டு தவிர, மற்றப்படித் தாண்டிவிட முடியுமா?

ஒரு நாள் அதிகாலையில் அகலிகை நீராடச் சென்றிருந்தாள்.

அவளுக்கு முன், யாரோ ஒருத்தி விதவை குளித்து விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள்; யார் என்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை; ஆனால் எதிரே வந்தவள் அடையாளம் கண்டு கொண்டுவிட்டாள். ஓடோடியும் வந்து அகலிகையின் காலில் சர்வாங்கமும் தரையில் பட விழுந்து நமஸ்கரித்தாள்.

தேவி கைகேயி: தன்னந்தனியாக, பரிசனங்களும் பரிவாரமும் இல்லாமல், துறவியாகிவிட்டாளே!

குடத்தை இறக்கி வைத்துவிட்டு அவளை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினாள். அவளுக்குக் கைகேயியின் செயல் புரியவில்லை.

"தர்ம ஆவேசத்திலே பரதன் தன்னுடைய மனசில் எனக்கு இடம் கொடுக்க மறந்துவிட்டான்" என்றாள் கைகேயி.

குரலில் கோபம் தெறிக்கவில்லை; மூர்த்தண்யம் துள்ளவில்லை. தான் நினைத்த கைகேயி வேறு; பார்த்த கைகேயி வேறு. படர்வதற்குக் கொழுகொம்பற்றுத் தவிக்கும் மனசைத்தான் பார்த்தாள் அகலிகை.

இருவரும் தழுவிய கை மாறாமல், சரயூவை நோக்கி நடந்தார்கள்.

"பரதனுடைய தர்ம வைராக்கியத்துக்கு யார் காரணம்?"

என்ருள் அகலிகை. அவளுடைய உதட்டின் கோணத்தில் அநுதாபம் கனிந்த புன்சிரிப்பு நெளிந்து மறைந்தது.

"குழந்தை வைத்த நெருப்பு ஊரைச் சுட்டு விட்டால் குழந்தையைக் கொன்று விடுவதா?" என்ருள் கேகேயி.

குழந்தைக்கும் நெருப்புக்கும் இடையில் வேலி போடுவது அவசியந்தான் என்று எண்ணிஞள் அகலிகை. "ஆனல் எரிந்தது எரிந்ததுதானே?" என்று கேட்டாள்.

"எரிந்த இடத்தைச் சுத்தப்படுத்தாமல் சாம்பலே அப்படியே குவித்து வைத்துக்கொண்டு சுற்றி உட்கார்ந்திருந்தால் மட்டும் போதுமா?" என்ருள் கைகேயி.

"சாம்பலே அகற்றுகிறவன் இரண்டொரு நாட்களில் வந்து விடுவானே" என்ருள் அகலிகை.

"ஆமாம்" என்ருள் கைகேயி. அவள் குரலில் பரம நிம்மதி தொனித்தது. ராமனே எதிர்பார்த்திருப்பது பரதனல்ல; கைகேயி.

மறுநாள் அவள் அகலிகையைச் சந்தித்தபொழுது முகம் வெறிச் சோடியிருந்தது; மனசு நொடிந்து கிடந்தது.

"ஒற்றர்களே நாலு திசைகளிலும் விட்டு அனுப்பிப் பார்த்தாகி விட்டது. ராமனேப்பற்றி ஒரு புலனும் தெரியவில்லே. இன்னும் நாற்பது நாழிகை நேரத்துக்குள் எப்படி வந்துவிடப் போகிருர்கள்? பரதன் பிராயோபவேசம் செய்யப் போகிருனும். அக்கினி குண்டம் அமைக்க ஏற்பாடு செய்து வருகிருன்" என்ருள் கைகேயி.

பரதன் எரியில் தன்னே அவித்துக் கொள்ளுவது தன்மீது சுமத்தப்பட்ட ராஜ்ய மோகத்துக்குத் தக்க பிராயச்சித்தம் என்று அவள் கருதுவதுபோல இருந்தது பேச்சு.

சற்று நிதானித்து, "நானும் எரியில் விழுந்துவிடுவேன்; ஆனல் தனியாக, அந்தரங்கமாக" என்ருள் கைகேயி. அவள் மனசு வைராக்கியத்தைத் தெறித்தது.

பதிஞன்கு வருஷங்கள் கழித்து மறுபடியும் அதே உணர்ச்சிச் சுழிப்பு. அயோத்திக்கு ஏற்பட்ட சாபத்தீடு நீங்கவில்லேயா?

அகலிகையின் மனசு அக்குத்தொக்கு இல்லாமல் ஓடியது. தனது காலின் பாபச் சாயை என்றே சந்தேகித்தாள்.

"வசிட்டரைக் கொண்டாவது அவனேத் தடை செய்யக் கூடாதோ?" என்ருள் அகலிகை.

"பரதன் தர்மத்துக்குத்தான் கட்டுப்படுவான்; வசிட்டருக்குக் கட்டுப்படமாட்டான்" என்ருள் கைகேயி.

"மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்துக்குச்

சத்துரு" என்று கொதித்தாள் அகலிகை.

தன்னுடைய கணவர் பேச்சுக்குப் பரதன் ஒருவேளை கட்டுப்படக் கூடாதோ என்ற நைப்பாசை. மறுபடியும் அயோத்தியில் துன்பச் சக்கரம் சுழல ஆரம்பித்துவிடக் கூடாதே என்ற பீதி.

கோதமன் இணங்கினான். ஆனால் பேச்சில் பலன் கூடவில்லை.

பரதனை உண்டு பலிகொள்ள அக்கினி தேவன் விரும்பவில்லை.

அனுமன் வந்தான்; நெருப்பு அவிந்தது. திசைகளின் சோகம், கரை உடைந்த குதுகல வெறியாயிற்று. தர்மம் தலைசுற்றியாடியது.

வசிட்டனுக்கும் பதினான்கு வருஷங்கள் கழித்த பிறகாவது கனவு பலிக்கும் என்று மீசை மறைவில் சிரிப்புத் துள்ளாடியது.

இன்ப வெறியில் அங்கே நமக்கு என்ன வேலை என்று திரும்பி விட்டான் கோதமன்.

சீதையும் ராமனும் தன்னைப் பார்க்க வருவார்கள் என்று அகலிகை உள்ளம் பூரித்தாள். வரவேற்பு ஆரவாரம் ஒடுங்கியதும் அவர்கள் இருவரும் பரிவாரம் இன்றி வந்தார்கள்.

ரதத்தை விட்டு இறங்கிய ராமனது நெற்றியில் அநுபவம் வாய்க் கால்வெட்டியிருந்தது. சீதையின் பொலிவு அநுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயமும் மோக்ஷ லாகிரியை ஊட்டியது.

ராமனை அழைத்துக் கொண்டு கோதமன் வெளியே உலாவச் சென்றுவிட்டான்.

தன் கருப்பையில் கிடந்து வளர்ந்த குழந்தையால் சுரக்கும் ஒரு பரிவுடன் அகலிகை அவளை அழைத்துச் சென்றாள். இருவரும் புன்சிரிப்புடன் உட்கார்ந்திருந்தார்கள்.

ராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. ராமனுடன் சேர்ந்து விட்ட பிறகு துன்பத்துக்கு அவளிடம் இடம் ஏது?

அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள். அகலிகை துடித்து விட்டாள்.

'அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?" என்று கேட்டாள்

"அவர் கேட்டார்; நான் செய்தேன்" என்றாள் சீதை, அமைதியாக.

"அவன் கேட்டானா?" என்று கத்தினாள் அகலிகை; அவள் மனசில் கண்ணகி வெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா?

ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?

இருவரும் வெகுநேரம் மௌனமாக இருந்தனர்.

"உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா?" என்று கூறி, மெதுவாகச் சிரித்தாள் சீதை.

"உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?" என்றாள் அகலிகை. வார்த்தை வறண்டது.

"நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா; உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும்; உலகம் எது?" என்றாள் அகலிகை.

வெளியிலே பேச்சுக் குரல் கேட்டது. அவர்கள் திரும்பி விட்டார்கள்.

சீதை அரண்மனைக்குப் போவதாக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது.

ரதம் உருண்டது; உருளைகளின் சப்தமும் ஓய்ந்தது.

கோதமன் நின்றபடியே யோசனையில் ஆழ்ந்தான். நிலைகாணாது தவிக்கும் திரிசங்கு மண்டலம் அவன் கண்ணில் பட்டது.

புதிய யோசனை ஒன்று மனக்குகையில் மின்வெட்டிப் பாய்ந்து மடிந்தது. மனச்சுமையை நீக்கிப் பழைய பந்தத்தை வருவிக்க, குழந்தை ஒன்றை வரித்தால் என்ன? அதன் பசலை விரல்கள் அவள் மனசின் சுமையை இறக்கிவிடாவா?

உள்ளே நுழைந்தான்.

அகலிகைக்கு பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர நாடகம், மறக்கவேண்டிய இந்திர நாடகம், மனத்திரையில் நடந்துகொண்டிருந்தது.

கோதமன் அவளைத் தழுவினான்.

கோதமன் உருவில் வந்த இந்திர வேடமாகப் பட்டது அவளுக்கு. அவள் நெஞ்சு கல்லாய் இறுகியது. என்ன நிம்மதி!

கோதமன் கைக்குள் சிக்கிக் கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானாள்.

மனச் சுமை மடிந்தது.

* * *

கைலயங்கிரியை நாடி ஒற்றை மனித உருவம் பனிப்பாலை வனத்தின் வழியாக விரைந்துகொண்டிருந்தது. அதன் குதி காலில் விரக்தி வைரம் பாய்ந்து கிடந்தது.

அவன்தான் கோதமன்......அவன் துறவியானான்.

# பால்வண்ணம் பிள்ளை

பால்வண்ணம் பிள்ளை கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா. வாழ்க்கையே தஸ்தாவேஜிக் கட்டுகளாகவும், அதன் இயக்கமே, அதட்டலும், பயமுமாகவும், அதன் முற்றுப்புள்ளியேதற்பொழுது 35 ரூபாயாகவும் அவருக்கு இருந்து வந்தது. அவருக்குப் பயமும், அதனுல் ஏற்படும் பணிவும் வாழ்க்கையின் சாரம். அதட்டல் அதன் விதி விலக்கு.

பிராணி நூல், மிருகங்களுக்கு, முக்கியமாக முயலுக்கு நான்கு கால்கள் என்று கூறுமாம். ஆனுல் பால்வண்ணம் பிள்ளையைப் பொறுத்தவரை அந்த அபூர்வப் பிராணிக்கு மூன்று கால்கள்தான். சித்த உறுதி, கொள்கையை விடாமை, இம்மாதிரியான குணங்கள் எல்லாம் படைவீரனிடமும், சத்தியாக்கிரகிகளிடமும் இருந்தால் பெருங்குணங்களாகக் கருதப்படும். அது போயும் போயும் ஒரு கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தாவிடம் தஞ்சம் புகுந்தால் அசட்டுத் தனமான பிடிவாதம் என்று கூறுவார்கள்.

பால்வண்ணம் பிள்ளை ஆபீஸில் பசு. வீட்டிலோ ஹிட்லர். அன்று கோபம். ஆபீஸிலிருந்து வரும்பொழுது—ஹிட்லரின் மீசை அவருக்கு இல்லாவிட்டாலும்—உதடுகள் துடித்தன. முக்கியமாக மேலுதடு துடித்தது. காரணம், ஆபீஸில் பக்கத்துக் குமாஸ்தா வுடன் ஒரு சிறு பூசல். இவர் மெக்ஸிகோ தென் அமெரிக்காவில் இருக்கிறதென்ருர். இவருடைய நண்பர் பூகோள சாஸ்திரம் வேறு மாதிரிக் கூறுகிற தென்ருர். பால்வண்ணம் பிள்ளை தமது கட்சியை நிரூபிப்பதற்காக வெகு வேகமாக வீட்டிற்கு வருகிருர்.

பால்வண்ணம் பிள்ளைக்கும் அவருடைய மனைவியாருக்கும் கர்ப்பத் தடையில் நம்பிக்கை கிடையாது. அதன் விளைவு, வருஷம் தவருது ஒரு குழந்தை. தற்பொழுது பால்வண்ண சந்ததி நான்காவது எண்ணிக்கை; பிறகு வருகிற சித்திரையில் நம்பிக்கை.

இப்படிப்பட்ட குடும்பத்தில் பால்வண்ணக் 'கொடுக்கு'கள் 'பேபி ஷோ'க்களில் பரிசு பெறும் என்று எதிர்பார்க்க முடியாது. பால்வண்ணம் பிள்ளையின் சகதர்மிணி, உழைப்பிலும் பிரசவத்திலும்

சோர்ந்தவள். தேகத்தின் சோர்விலும், உள்ளத்தின் களைப்பிலும் ஏற்பட்ட பொறுமை.

கைக்குழந்தைக்கு முந்தியது சவலை. கைக்குழந்தை பலவீனம். தாயின் களைத்த தேகம் குழந்தையைப் போஷிக்கச் சக்தியற்று விட்டது. இப்படியும் அப்படியுமாக தர்ம ஆஸ்பத்திரியின் மருந்துத் தண்ணீரும், வாடிக்கைப் பால்காரனின் கடன் பாலுமாக, குழந்தை களைப் போஷித்து வருகிறது. அந்த மாதம் பால் 'பட்ஜெட்'—எப்பொழுதும்போல்—நான்கு ரூபாய் மேலாகிவிட்டது.

இம்மாதிரியான நிலைமையில் பால் பிரச்சினையைப்பற்றி பால் வண்ணம் பிள்ளையின் சகதர்மிணிக்கு ஒரு யுக்தி தோன்றியது. அது ஒன்றும் அதிசயமான யுக்தியல்ல. குழந்தைகளுக்கு உபயோக மாகும்படி ஒரு மாடு வாங்கிவிட்டால் என்ன என்பதுதான்.

தெய்வத்தின் அருளைத் திடீரென்று பெற்ற பக்தனும், புதிதாக ஒரு உண்மையைக் கண்டுபிடித்த விஞ்ஞானியும், 'சும்மா' இருக்க மாட்டார்கள். சள சள வென்று கேட்கிறவர்கள் காது புளிக்கும்படி சொல்லிக் கொட்டிவிடுவார்கள். பால்வண்ணம் பிள்ளையின் மனைவிக்கும் அதே நிலை ஏற்பட்டது.

பிள்ளையவர்கள் வீட்டிற்கு வரும்பொழுது, அவர் ஸ்கூல் பைனல் வகுப்பில் உபயோகித்த பூகோளப்படம் எங்கு இருக்கிறது. மாடியி லிருக்கும் ஷெல்பிலா, அல்லது அரங்கிலிருக்கும் மரப் பெட்டியிலா என்று எண்ணிக் கொண்டு வந்தார்.

வீட்டிற்குள் ஏறியதும், "ஏளா! அரங்குச்சாவி எங்கே?" என்று கேட்டுக்கொண்டே மாடிக்குச் சென்று ஷெல்பை ஆராய்ந்தார்.

அவர் மனைவி சாவியை எடுத்துக் கொண்டு பின்தொடர்ந்தாள். அவளுக்குப் பால் நெருக்கடியை ஒழிக்கும் மாட்டுப் பிரச்னையை அவரிடம் கூற வேண்டும் என்று உதடுகள் துடித்துக் கொண் டிருந்தன. ஆனால் மெக்ஸிகோ பிரச்னையில் ஈடுபட்டிருக்கும் பால் வண்ணம் பிள்ளையின் மனம், இதை வரவேற்கும் நிலையில் இல்லை.

"என்ன தேடுதிய?" என்றாள்.

"ஒரு பொஸ்தகம். சாவி யெங்கே?"

"இந்தாருங்க, ஒங்ககிட்ட ஒண்ணு சொல்லணுமே! இந்தப் புள்ளைகளுக்கு பால் செலவு சாஸ்தியா இருக்கே! ஒரு மாட்டெத் தான் பத்துநூறு குடுத்து புடிச்சுப்புட்டா என்ன?" என்றாள்.

"இங்கே வரவேண்டியதுதான். ஒரே ராமாயணம். மாடு கீடு வாங்கமுடியாது. எம் புள்ளெய நீத்தண்ணியை குடிச்சு வளரும்" என்று சொல்லிவிட்டார். மெக்ஸிக்கோ வட அமெரிக்காவிலிருந்

தால் பிறகு ஏன் அவருக்குக் கோபம் வராது?

பால் பிரச்னை அத்துடன் தீர்ந்து போகவில்லை. அவர் மனைவியின் கையில் இரண்டு கெட்டிக் காப்பு இருந்தது. அவளுக்கு குழந்தையின் மீதிருந்த பாசத்தினால், அந்தக் காப்புகள் மயிலைப் பசுவும் கன்றுக்குட்டியுமாக மாறின.

இரண்டுநாட் கழித்து பால்வண்ணம் பிள்ளை ஆபீஸிலிருந்து வந்து புற வாசலில் கால் கை கழுவச் சென்ற பொழுது, உரலடியில் கட்டியிருந்த கன்று, வைக்கோல் அசை போட்டிருக்கும் மாட்டைப் பார்த்து 'அம்மா' வென்று கத்தியது.

"ஏனா?" என்று கூப்பிட்டார்.

மனைவி சிரித்துக்கொண்டே—உள்ளுக்குள் பயம்தான்—வந்தாள்.

"மாடு எப்பொழுது வந்தது? யார் வாங்கிக் கொடுத்தா?" என்றார்.

"மேல வீட்டு அண்ணாச்சி வாங்கித் தந்தாஹ. பாலு ஒரு படி கறக்குமாம்" என்றாள்.

"உம்" என்றார்.

அன்று புதுப்பால், வீட்டுப் பால் காப்பி, கொண்டு வந்து வைத்துக் கொண்டு கணவரைத் தேடினாள். அவர் இல்லை.

அதிலிருந்து பிள்ளையவர்கள் காப்பியும் மோரும் சாப்பிடுவதில்லை.

அவர் மனைவிக்கு மிகுந்த வருத்தம். ஒரு பக்கம் குழந்தைகள். மற்றொரு பக்கம் புருஷன் என்ற குழந்தை. வம்சவிருத்தி என்ற இயற்கை விதி அவளை வென்றது.

இப்படி பதினைந்து நாட்கள்.

மாட்டை என்ன செய்வது?

அன்று இரவு எட்டு மணி இருக்கும். பால்வண்ணம் பிள்ளையும் சுப்புக் கோனாரும் வீட்டினுள் நுழைந்தார்கள்.

"மாட்டைப் பாரும். இருபத்தஞ்சி ரூபா" என்றார்.

"சாமி, மாடு அறுபது ரூபாய் பெறுமே?" என்றான் சுப்புக் கோனார்.

"இருபத்தைந்துதான். உனக்காக முப்பது ரூபாய். என்ன? இப்பொழுதே பிடித்துக்கொண்டு போக வேண்டும்!"

"சாமி ராத்திரியிலா? நாளைக்கு விடியன்னே பிடிச்சுக்கிடுதேன்" என்றார் சுப்புக்கோனார்.

"உம். இப்பவே?"

மாட்டை யவிழ்த்தாய் விட்டது.

மனைவி 'மாடு எழுபது ரூபாயாயில்லே. குழந்தைகளுக்குப்

பாலாயிற்றே' என்று தடுத்தாள். மேலும் வரும்படிவேறு வருகிறதாம்.

"என் புள்ளெகள் நீத்தண்ணி குடிச்சு வளந்துக்கிடும்," என்றார் பிள்ளை.

சுப்புக்கோனார் மாட்டை அவிழ்த்துக்கொண்டு போகும்போழுது, மூத்த பையன், "அம்மா என் கண்ணுக்குட்டி" என்று எழுந்து உட்கார்ந்து கொண்டு அழுதான்.

"சும்மா கெட, சவமே!" என்றார் பால்வண்ணம் பிள்ளை!

# கயிற்றரவு

'கள்ளிப்பட்டியானுல் என்ன? நாகரிக விலாசமிட்டுத் தொங்கும் கைலாசபுரம் ஆனுல் என்ன? கங்கையின் வெள்ளம்போல, காலம் என்ற ஜீவநதி இடைவிடாமல் ஓடிக்கொண்டிருக்கிறது......ஓடிக் கொண்டே இருக்கும். தயிர்க்காரி சுவரில் புள்ளி போடுகிற மாதிரி, நாமாகக் கற்பனை பண்ணிச் சொல்லிக்கொள்ளும் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகள் எல்லாம் அடிப்படையில் ஒன்றுதானே. பிளவு—பின்னம் விழாமல் இழுக்கப்பட்டு வரும் ஒரே கம்பி இழையின் தன்மைதானே பெற்றிருக்கிறது. இல்லை—இல்லை. சிலந்திப்பூச்சி தனது வயிற்றிலிருந்து விடும் இழைபோல நீண்டுகொண்டே வருகிறது. இன்று—நேற்று—நாளை என்பது எல்லாம் நம்மை ஓர் ஆதார எண்ணுக வைத்துக்கொண்டு கட்டி வைத்துப் பேசிக் கொள்ளும் சவுகரியக் கற்பனைதானே. நான் என்ற ஒரு கருத்து, அதனடியாகப் பிறந்த நானல்லாத பல என்ற பேத உணர்ச்சி, எனக்கு முன், எனக்குப் பின், என்று நாமாக வக்கணையிட்டுப் போட்டுக் கொண்ட வரிகள்......இவை எல்லாம் எத்தனை தூரம் நிலைத்து நிற்கும்......நான் என நினைத்து, நினைக்கும், நினைக்கப் போகும் பல தனித் துளிகளின் கோவை செய்த நினைப்புத்தானே இந்த நாகரிகம்......கூட்டு வாழ்வு என்ற வாசனையை யொட்டி, மனசு இழைத்து இழைத்துக் கட்டும் மணற் சிற்றில்தானே இந்த நாகரிகம்......மகா காலம் என்ற சிலந்தியின் அடி வயிற்றிலிருந்து பிறக்கும் ஜீவநதியின் ஓரத்தில் கட்டிவைத்த மணற்சிற்றில்...... என்ன அழகான கற்பனை' என்று உச்சிப்போதில் பனைமூட்டி னடியில் குந்தி உட்கார்ந்திருந்த பரமசிவம் பிள்ளை நினைக்கலானுர்.

துவர்த்து முண்டில் அவர் கட்டியிருந்த ஒற்றைப்பிரி முண்டாசுக்குத் தப்பிய சிகைத் தலையில் வெயில் தாக்கியது. குனிந்து குந்தியிருந்த பனைநிழல் வாக்கில் வெயில் சற்றுப் படாதபடி ஒரு பக்கமாக நகர்ந்தார். முள்ளும் முனையுமாக நின்ற ஊவாஞ்செடி, கருவேலங் கன்று பெருந்துடையில் குத்தியது. மறுபுறமாக விலகிக் கொண்டார். குனிந்து கவனித்துக் கொண்டிருந்தவருக்கு நினைவு பிரபஞ்ச

யாத்திரை செய்ததென்றாலும், மலத்தில் மாண்ட குடல்புழு கண்ணில் விழுந்தது. 'மலப்பிறவி......பல ஜன்மம் பல மரணம், சீச்சீ......' மனம் குமட்ட வேறு ஒரு பனைமூட்டினடியில் போய் அமர்ந்தார், அது விடலிப் பனை. சற்றுத் தாழ்வாக இருந்ததனால் நிழலும் சுமாராக இருந்தது. முள் குத்தலும் இல்லை. ஆனால் சரல் குத்தியது.

மனமோ 'பிறவா நெறி' காட்டாமல் மீண்டும் மீண்டும் மலப்புழு மாதிரி உடற் கூறின் விளைவாக எழுந்த அவசங்களின்பால் விழுந்து குமைந்தது.

'மனம் என்ற ஒன்று உடம்பைவிட்டுத் தனியாக, அதன் அவசியம் இல்லாமலே இயங்கக்கூடிய ஒன்றா அல்லது நாதத்துக்கு வீணை என்ற சாதனம் அவசியமாக இருப்பது போலத்தானா......நான் பிறப்பதற்குமுன்......என்னைப்பற்றி எனக்குப் பிரக்ஞையுண்டா? என்னைப்பற்றி, இப்பொழுது என்னைப்பற்றியுள்ள சூழ்நிலைக்குத்தான் பிரக்ஞையுண்டா?

'இந்தப் பனை, இந்தப் பனை விடலியெல்லாம் என் பிரக்ஞைக்குள் பட்டது. இது முளைத்தது எனக்குத் தெரியும். இது முளைப்பதற்கு முன் இத்தக் கட்டாந்தரை, இந்த நிழல்கூட அற்று இருந்தது தெரியும். முந்திய ஆடிக் காற்றில் விழுந்ததே அந்தப் பனை. அது எங்கு நின்றது என்றுகூட நிதானிக்க முடியாமல் வரட்டுக் கட்டாந்தரையாகத் தானே கிடக்கிறது......நான் பிறப்பதற்கு முன்பு...... பரமசிவம் பிள்ளை என்ற ஒருவன் விருப்பு வெறுப்பு, ஆசை, துயரம், கவலை, பொறுப்பு முதலியவற்றுடன் கூடிய ஒரு ஜந்து, வாழையடி வாழை யாக வரும் விளையாட்டின் வித்தைகளை வாலாயமாகக் கற்று, அதற்கு இசைந்தோ இசையாமலோ விளையாடி......பிறகு பரமசிவம் என்ற பெயர் மட்டும் போகுமிடத்துக்கு வழி வைத்துவிட்டு, வந்த வழியைப் பார்த்துக்கொண்டோ அல்லது புது வழியிலோ, போய்விடும் ஒரு தோற்றம்......ஒரு பொம்மலாட்டம்! பொம்மலாட்டம் என்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்? சூத்திரக் கயிறு இழுக்கிறதா அல்லது சூத்திரதாரன் உண்டா? நிச்சயமாக எப்படி இருக்கிறது அல்லது இல்லையென்று இரண்டில் ஒன்று சொல்லிவிட முடியும்?......வருகிற வாசல், போகிற திசை இரண்டுந்தான் தெரிகிறது. வருகிறது ஒரு யோனித் துவாரம். போகிறது மற்றொரு யோனித் துவாரம்...... பிரகிருதி என்ற அன்னையிடந்தானா? அல்லது கருவூரிலிருந்து கருவூருக்குச் செல்லும் பாதைதான் மனித வாழ்வா? முடிவில்லா வித்தையா? முறையில்லாத் தந்திரமா?......'

கைலாசபுரத்து ஆற்றங்கரைப் பனைமூட்டடியிலே உட்கார்ந்த

பரமசிவம் பிள்ளையின் மனம் ‘ தான் ’ இல்லாத ஒரு காலத்தைச் சற்று சிரமத்துடன் கற்பனை பண்ணத் தொடங்கியது.

# 1

சுமார் அரை நூற்றாண்டுக்குமுன் கைலாசபுரத்திலும் சூரியோதயம், சூரியாஸ்தமனம் தெரிந்து கொண்டுதானிருந்தது. அப்பொழுது ஆற்றங்கரைக்கு வரும் பாதையில் அத்தனை காரைக் கட்டிடங்கள் கிடையாது. புழுதி கிடையாது. சுகமான மருத மர நிழல் உண்டு ; மாடு படுத்திருக்கும். மனித நாகரிகமே அந்தப் பிராந்தியத்தில் அப் பொழுது உட்கார்ந்து அசை போட்டுக்கொண்டிருந்த மாதிரிதான் தென்பட்டது. ஆனால் இயக்கம் இருந்து கொண்டுதானிருந்தது. ஞாயிற்றுக்கிழமை மடிந்து திங்கட்கிழமை பிறக்கிறது. எந்த வினாடிக்குள் என்று யாருக்காவது நிர்த்தாரணமாகச் சொல்ல முடியுமா ? நாமாக முடுக்கிவிட்ட கெடிகாரம் சொல்லுவதும், நாம் சொல்லுவதும் ஒன்றுதான். ஞாயிற்றுக்கிழமையாகவே இருந்து கொண்டு வந்தது, திங்கட்கிழமை என்று நாம் சொல்லும்படி யாகி விட்ட ஒரு தன்மைபோல், நாகரிகம் அங்கே உட்கார்ந்து அசை போட்டுக்கொண்டிருப்பது போலத் தென்பட்டதும் ஒரு தோற்றந் தான். அது அப்படியே உட்கார்ந்துகொண்டே இருந்தால், இப்பொழுது காரைக் கட்டிடங்கள் எப்படி முளைத்திருக்கும் ? மருத மரத்து நிழல் இன்னும் இருந்துகொண்டிருக்குமே ! அப்பொழுது காற்றடித்தது ; மழை பெய்தது ; நதியில் வெள்ளம் வந்தது. பனை மரங்கள் சாய்ந்தன ; விறகாயின......விட்டமாயின. விடலிகள் முளைத்தன. சூரியாஸ்தமனம்......சூரியோதயம்......ஆற்றங்கரைப் படிக்கல்லில் அழகியநம்பியா பிள்ளை வேட்டி துவைப்பார்...... உட்கார்ந்திருந்து அழுக்குத் தேய்ப்பார். ஆற்றில் மூழ்கிக் குளிப்பார். நின்று திருநீறு அணிவார். அனுஷ்டானுதிகள் செய்வார். படிமீது மருதமர நிழல்கள் கவிந்திருக்கும். ஆனல் இப்போது படிக்கல் சரிந்து விட்டது. பாதை உண்டு. மணலிலும் தெற்றுக்குத்தாக நிற்கும் படிகளை மறைத்தும் தண்ணீர் ஓடும். இப்பொழுது மருதமரம் இல்லை. வெயில் உண்டு ; கல் வழுக்கும்.

அன்று ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் கருவூரிலே வீரிய வெள்ளம் பிரவகித்தது. அதிலே விளைந்த அனந்தகோடி பீஜங்களிலே

ஒன்று நிலைத்தது. அனந்த ஜீவ அணுக்களிலே அதற்கு மட்டும் அதிர்ஷ்டம் என்பதா? அல்லது நிலைக்க வேண்டும் என்ற பூரண பிரக்ஞையுடன் அது நிலைத்ததா? எப்படியானாலும் இந்த அணு இல்லாவிட்டால் இன்னொன்று. நிலைத்தது; ஒன்றியது; உருவம் பெற்றது; உணர்வு பெற்றது. மீனாயிற்று. தவளையாயிற்று. வாலிழந்தது. குரங்காயிற்று, சமாதி நிலையிலே உறங்கலாயிற்று...... சிசுவாகி, கைக்கட்டை விரல்களை உள்ளங்கையில் மடக்கி விரல்களைக்கொண்டு மூடிக் குண்டுக்கட்டாகக் காத்திருந்தது......

கைலாசபுரத்திலே மரங்கள் மொக்கு விட்டன. பூ மலர்ந்தது. தேன் வண்டுகள் வரத்துப் போக்கு வைத்துக்கொண்டன. மரமும் சூலுற்றது......பிஞ்சுற்றது......

கருவூருக்கு வடக்கே உதாரபுரியிலேயிருந்து ஹுங்காரம் போன்ற அலறல் பிறந்தது. வேதனையிலே குரல் பிறந்தது. கைக்கட்டை விரல்களை உள்மடக்கிப் பிடித்துக்கொண்டு தலைகுப்புற வந்து விழுந்தது ஒரு பிண்டம்—ஒரு ஜன்மம். பிரக்ஞை வந்தது. கட்டு மலம் போயிற்று......ஜன்மம் வீறிட்டது. கைகளையும் கால்களையும் சுண்டி உதறிக்கொண்டு அழுதது. கருவூர்க் கயிற்றைக் கத்தரித்து விட்டார்கள். தனி ஜன்ம மாயிற்று. தனித் தன்மை பெற்றது. முலை சுவைத்தது...உறங்கியது...அழுதது...முலை சுவைத்தது......

கைலாசபுரத்திலே மரங்கள் காய்த்தன. கொத்துக் கொத்தாக, பச்சை பச்சையாகக் காய்த்துத் தொங்கின. மரத்தையே தரையில் இழுத்துக் கிடத்திவிடும் போலிருந்தது அந்த வருஷத்துக் காய்ப்பு.

## 2

நிலவொளியிலே நிலா முற்றத்திலே அழகிய நம்பியாபிள்ளை குழந்தையொன்றை வைத்துக் கொஞ்சுகிறார். குழந்தை கொஞ்சுகிறது.

"அப்பா யாரு?" என்று கேட்கிறார் அழகிய நம்பியா பிள்ளை.

குழந்தை தனது நெஞ்சைத் தட்டிக் காட்டியது.

"முட்டாப்பயலே; நான்தாண்டா அப்பா! நீ பரமசிவம்...... பரமசிவம் பிள்ளை!" என்றார் அழகிய நம்பியா பிள்ளை.

"அப்பா யாரு?" என்றார் அழகிய நம்பியா பிள்ளை

குழந்தை அவரது நெஞ்சைத் தொட்டுக் காட்டியது.

"பரமசிவம் யாரு?" என்று கேட்டார் அழகிய நம்பியா பிள்ளை.

"நான்" எனத் தனது நெஞ்சைத் தட்டிக்கொண்டது குழந்தை.

"போடு பக்காளி போடு! பத்துப் பக்காளி போடு!" எனக் குழந்தையை மெய்ம் மறந்து குதூ கலத்தில் பந்துபோல் தூக்கிப் போட்டு விளையாடினார்.

குழந்தையும் பரமசிவமாகி நான்—நீ—அவன் என்ற பேதா பேதப் பிரக்ஞையுடன் வாழையடி வாழையாக இருந்து வரும் விளையாட்டைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தது. அம்மா—அப்பா—தெரு—ஊர் எனப் பரிசய விலாசம் படிப்படியாக வளர்ந்தது. வாத்தியார், பிரம்படி, பிறகு கல்வி, சில்லறை அறிவு, பிரம்புக் கொட்டடியிலும் மற்றப்படி இனிக்கின்ற, அவசியமான, பிரியமான ஞானச் சரக்குகளை வேற்று அங்காடிகளிலும் பரமசிவம் பெற்றார். சீனி இனிக்கும்—நெருப்புச் சுடும்—அப்பா கோபிப்பார்—கடவுள் மன்னிக்க மாட்டார் என்ற நேர் அனுபவ, அனுபவ சூன்யக் கருத்துக்கள் எல்லாம் நான், என்னுடைய என்ற அடித்தளம் இட்ட ஒரு மனையில் சுவர் எழுப்பிக் கட்டிடம் அமைக்க ஆரம்பித்தது. பள்ளிக்கூடம்—பரமசிவம்—அடி—உதை—பலம்—பலீன் சடுகுடு முதலிய பாதைகளில் செல்ல, கிழமைகள் என்ற கால அமைதி தாராளமாக வசதி செய்து கொடுத்தது.

அழகிய நம்பியா பிள்ளையின் வேலைகளை மேற்கொள்ளும் கட்டம் வந்தது. பரமசிவம், பரமசிவம் பிள்ளையானார். உடல் வாட்ட சாட்டமாக அமைந்தது. உடம்பில் வலு, நெஞ்சில் உரம், மனசில் நம்பிக்கை, தைரியம். வீட்டிலே சமைத்துப் போட...... பிறகு வம்ச விருத்திக் களமாக்கிக்கொள்ள ஒரு யுவதி ...... உச்சுவாச நிச்சுவாசத்தை விட என்ன சுகம்...... போகம்...... உடலில் உள்ள வலு வீரியமாகப் பெருக்கெடுத்து ஜீவ தாதுக்களை அள்ளி விசிறியது. இப்பொழுது கிழமைக்கும் வாரத்துக்கும் மாதத்துக்கும் ஓடும் வேகந்தான் என்ன? கஷ்டம்—வருத்தம்—கசப்பு—ஏமாற்றம் - கடன் வாங்கி அதற்குள் ஐந்து வருஷங்களா ?......என்ன ஓட்ட மாக ஓடுகிறது. மணல் கூண்டு சரிகையில் கடைசி மணல் பொடி விரைந்து ஓடி வருவது மாதிரி என்ன வேகம் ?...... நிஜமாக, திங்களும் செவ்வாய்களும் இப்போதுதான் இவ்வளவு வேகமாக ஓடுகின்றனவா ?......அல்லது நான்தான் ஓடுகிறேனா ?...... நான் யார் ?......இந்த உடம்பா ?......தூங்கும்போது, பிறக்குமுன் இந்த நான் எங்கிருந்தது ?......இந்த நான்தான் ஓடுகிறதா ?......நான் தான் ஓடுகிறதா ? பெட்டியடிக் கணக்கு......இடுப் பொடிக்கும் உழைப்பு......குனிந்து குனிந்து இன்னொருவன் பணமூட்டைக்குத்

தலையை அண்டை கொடுத்து கழுத்தே சுளுக்கிக் கொண்டதே. முதுகிலே கூன் விழுந்துவிட்டது. பிறனுக்கு நலம் பார்த்து நாலு காசு சேர்த்து வைத்துக் கண்ணிலும் வெள்ளெழுத்து......வீட்டிலே பூனை படுத்திருக்கும்......பொய்மை நடமாடும்......வறுமையும் ஆங்கே பெற்றெடுத்த பிள்ளையுடன் வட்டமிட்டுக் கைகோத்து விளையாடும். மனையாளுக்கு கண்ணிலே இருந்த அழகு—ஆளைத் தூண்டிவிட்டு இழுக்கும் அந்த அழகு எங்கே போயிற்று? கையில் ஏன் இந்த வரட்சி? வயலோ ஒத்தி. வீடோ படிப்படியாக மூலப் பிரகிருதியோடு லயமாகிவிட யோக சாதனம் செய்கிறது. விட்ட மற்றுப் போனால் வீடும் வெளியாகும்...... அப்பொழுது அழகிய நம்பியாபிள்ளை எங்கே? அவர் மகன் பரமசிவம் எங்கே?......எல்லாம் பரம ஒடுக்கத்திலே மறைந்துவிடும். எத்தனை துன்பம்......எத்தனை நம்பிக்கைக்காக எத்தனை ஏமாற்று......எத்தனை கடவுள்கள்...... வாய்க்கு பசி கொடுக்க ஒரு கடவுள்......வயலுக்கு நீர் பாய்ச்ச ஒரு கடவுள்.... .வியாச்சியம் ஜயிக்க......சோசியம் பலிக்க, அப்புறம் நீடித்து, நிசமாக உண்மையில் பக்தியாய்க் கும்பிட. எத்தனையடா எத்தனை?......நான் தோன்றியபின் எனக்கு என்று கடவுள்கள் தோன்றினார்கள்?......எனக்கே இத்தனையென்றால் என்னைப்போன்ற அனந்தகோடி உயிர்—உடம்புகள் கொண்ட ஜீவ நதியில் எத்தனை? ......ஆற்று மணலைக்கூட எண்ணிவிடலாம். இந்தக் கடவுளர் களை—? ஒருவன் பிறந்தால் அவனுடன் எத்தனை கடவுளர்கள் பிறக்கிறார்கள். அவனுடன் அவர்கள் மடிந்து விடுகிறார்களா?...... 'நான்' மடிந்து விடுகிறதா?......அப்பொழுது ஒருவேளை அவர்களும் இந்த நாளோடு போய்விடக் கூடும்......இந்த நாளையும் மீறித் தங்கி விடுகிற கடவுளர்களும் உண்டு. அவர்கள்தான் மனம் என்ற ஒன்று கால வெள்ளத்துக்கு அருகே அண்டி விளையாடும் மணல் வீட்டைப் பந்தப்படுத்த முயலும் சல்லி வேர்கள்...... பரமசிவம், பரமசிவம்! உனக்கு ஏதுக்கடா இந்தச் சள்ளை! அதோ, காலடியில் பாம்புடா, பாம்பு......

கயிற்றரவு!

## 3

காலம் ஒரு கயிற்றரவு?

பரமசிவம் பிள்ளையைக் கட்டிலிலிருந்து எடுத்துத் தரையில் கிடத்திவிட்டார்கள். பாம்பு கடித்தால் பிழைக்க முடியுமா? போகிற

வருக்குப் புண்ணியம் சேர்க்கத் தலைமாட்டில் உட்கார்ந்து யாரோ தேவாரம் படித்தார்கள். பரமசிவம் பிள்ளை ஏறிட்டுப் பார்த்து சிரமத்துடன், 'தூரத்தில் இருந்து படித்தால் கேட்பதற்குச் சுகமாக இருக்கும் ......பக்கத்திலிருந்தால் காதில் வண்டு குடைகிற மாதிரி தொந்தரவாக இருக்கிறது' என்றார்......

கண்ணை முழுவதும் திறக்காமலும் முழுவதும் மூடாமலும் அரைக்கண் போட்டபடி உலகைப் பார்ப்பதிலே அவருக்கு ஓர் ஆனந்தம் இருந்தது. நிம்மதி இருக்கிறது. தூரத்திலே தேவாரம் தண்ணீரடியில் முங்கி உட்கார்ந்திருக்கும்போது கேட்கும் தூரத்து ரீங்காரம் மாதிரி சுகமாக இருக்கிறது. அதோ தெரிகிறது என் புஸ்தகம். ......என்னுடைய கால் கட்டைவிரல்தான்......இனி எத்தனை நேரம் எனக்கு இது தெரிந்துகொண்டிருக்கும்...... ஸ்மரணையில் கால் இருக்கிற மாதிரி தெரியவில்லையே. கண்ணுக்குத் தெரிந்தால் மட்டும் போதுமா? ஸ்மரணைக்குப் புலனாகை வேண்டாமா? கால் கட்டைவிரல் ரொம்ப தூரத்திலிருக்கிறதோ......இரண்டு மைல் தூரத்தில்......சீ......எட்டு மைலாவது இருக்க வேண்டும்......அதோ அந்தப் புஸ்தகம்—இப்பொழுது அதுவும் தூரத்தில் தெரிகிறதே...... அதில் என்ன எழுதிவைத்திருந்தேன்......கணக்கா......சுவடியா ......அழகியநம்பியைக் கூப்பிட்டுக் கேட்கவேண்டும்......எது இருந்தால்தான் என்ன?......நாம் செத்துப்போனால் இந்தக் கால் கட்டைவிரல் சாம்பலாகத்தானே......அது எவ்வளவு நேரம் எனக்குத் தெரியப்போகிறதோ......கொஞ்சம் நிம்மதியாகப் பார்த்துக் கொண்டே இருப்போமா......அதுவும் சுகமாகத்தானிருக்கிறது ......உறக்கம் வருகிறதோ......அசதியாக வருகிறதோ......நிம்மதியாகக் கண்ணை மூடினால்......அப்பா என்ன சுகம்......மூச்சு நின்றது......கைக் கட்டைவிரல்கள் உள்வாங்கின...... கட்டுமலம் வந்தது......நான் சுழன்றது...... ஸ்மரணை சுழன்றது...... உயிர் —ஆமாம்; உயிரும் அகன்றது......அன்று கருவூரிலே உருவற்று நிலைத்த பிண்டம் இன்று உருவுடன் வதங்கிக் கிடந்தது.

சாம்பல் காற்றோடு போச்சு; பெயர் பெயரோடு போச்சு...... மனித மனம் இம்மாதிரி அனந்தகோடி கூடுகளைக் கட்டிக் கட்டி விளையாடியது...... கைலாசபுரத்து மருதமரம் நிழல் கொடுத்தது. மரம் பூத்துக் காய்த்தது, பழுத்தது...... ஆற்றில் தண்ணீர் மணலிலும் படியிலும் தவழ்ந்து ஓடியது. கள்ளிப் பட்டியானால் என்ன, கைலாசபுரமானால் என்ன?—காலவெள்ளம் தேக்கற்று ஓடிக் கொண்டே இருந்தது......அதிலே வரையில்லை......வரம்பில்லை......

கோடுகூடத் தெரியவில்லை......கருவூரிலானுலென்ன ? காட்டூரிலானுலென்ன ? சமாதியோ ? ......பிரக்ஞையோ ? எதுவானுலென்ன ?......

நான் ஓடினுல் காலம் ஓடும். நான் அற்ருல் காலம் அற்றுப் போகும். காலம் ஓடுகிறதா ? ஞாயிறு—திங்கள்—செவ்வாய்—நான் இருக்கும் வரைதான் காலமும். அது அற்றுப்போனுல் காலமும் அற்றுப்போகும். வெறும் கயிற்றரவு !

பரமசிவம் பிள்ளை எங்கே ?

# ஞானக் குகை

அவன் ஓர் அதிசயப் பிறவி. பிறந்து பத்து வருஷங்கள் வரை ஊமையாகவே இருந்தான். மன்மத ரூபமாக இருந்து என்ன பயன்? வாயிலிருந்து எச்சில் அருவிபோல வழிந்த வண்ணமாக இருக்கும். ஆளை விழுங்கும் கருவிழிகள் தான்; ஆனால் உயிரின் சலனம் இருக்காது. பிரகாசம் இருக்காது. வெருகு விழித்த மாதிரி, அறிவு மங்கி விழித்துக்கொண்டிருக்கும் கண்கள்.

மதுரைச் சீமையில், குறுமலைக்கு அடுத்த சிற்றூரின் தலைமைக் காரத் தேவர் மகன். சொத்தையும் செல்வாக்கையும் ஆளவந்த ஏக புத்திரன். காசி, ராமேசுவர யாத்திரைப் பயன் என்பது அவன் தகப்பனார் எண்ணம்.

குழந்தை பிறந்ததும் தகப்பனாருக்கு மனம் இடிந்துவிட்டது. பத்திரகாளியையும் கூசாது எதிர்த்துப் பார்க்கும் அவர் கண்கள் தரையை நோக்கின. ஆகக்கூடி, உள்ளூர் ஜோசியனும், வைத்தியனும் இந்த அற்புதமான சிசுவைப் பற்றிச் சொன்னவை கூடப் பொய்த்துவிட்டன.

பிறந்தவுடனேயே தாயார் இந்த உலகத்தில் குழந்தைக்குத் தன் இடத்தைக் காலிசெய்து கொடுத்ததினால், அவளைப் பொறுத்தவரை அந்தக் கவலை நீங்கிற்று என்றே சொல்லலாம். தலைமைக்காரத் தேவர் பொறுப்பின் பளு தாங்க முடியாதது. மறவக்குறிச்சிப் பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்துகொண்டிருந்தார். அந்த அம்மையாருக்கு ஜாதகப்படி குழந்தை கிடையாது என்பதைத் தேவருடன் கூடிய ஐந்தாறு வருஷ வாழ்க்கை நிரூபித்தது. அதில் ஏற்பட்ட பொறாமை இந்த அசட்டுக் குழந்தையின்மீது பாய்ந்ததில் அதிசயம் ஒன்றும் இல்லை.

தேவரவர்களுக்கு இந்தக் குழந்தை என்றால் உயிர், கண்ணுக்குக் கண். பலசாலிகள் தங்கள் ஆசைகளை எல்லாம் பலவீனர்களின்மீது சுமத்துவது—தங்கள் வெறுப்பைச் சுமத்துவதுபோலவே—இயற்கை. அந்த இயற்கை, விதியையும் கடக்கவேண்டியதாயிற்று.

பத்து வருஷங்களாகத் தலைமைக்காரத் தேவரின் பூஜைகளும்,

நோன்புகளும் குழந்தைக்கு ' அப்பா ' ' அம்மா ' என்ற இரண்டு வார்த்தைகளைச் சொல்லும்படிதான் செய்ய முடிந்தன. ஓட்டை வாளியை வைத்துத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறவனுக்கு, பானையில் ஒரு சிரங்கை தண்ணீர் ஊற்ற முடிந்துவிட்டால் ஏற்படும் நம்பிக்கைக்கும் குதூகலத்திற்கும் எல்லையே இராது. தேவரவர்களுக்கு, தமது ஊமைப்பிள்ளையும் சகலகலா பண்டிதனுகி, நாட்டாண்மையைக் கம்பீரமாக வகிப்பான் என்ற அசட்டு நம்பிக்கையும் பிறந்தது.

குழந்தை ' அப்பா ' ' அம்மா ' என்று சொல்லும் சமயத்தில் தான் அதன் கண்களில் அறிவின் சுடர் சிறிது பிரகாசிக்கும். ஊர்க்காரர்களுக்குக் கூட அசட்டுத்தனம் என்று படும்படி தகப்பனுர் நடந்து கொண்டார். அவருடைய அசட்டுத்தனத்தின் சிகரம் என்னவென்ருல், பிள்ளையை உள்ளூர்த் திண்ணைப் பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் சென்றதுதான். "ஒத்தைக்கொரு பிள்ளை என்ருல் புத்திகூடக் கட்டையாப் போகுமா ?" என்று ஊர்க்காரர்கள்கூடச் சிரித்தார்கள்.

பள்ளிக்கூட வாத்தியாருக்கு அதிகமாக ஒன்றும் தெரியாவிட்டாலும், அவர் படிப்பு, ஊர்க்காரர்களைப் பிரமிக்கவைப்பதற்குப் போதுமானது. மேலும், அநுபவம் நிறைந்தவர். பையனுக்குப் படிப்பு வராது என்று சொல்லவில்லை. நளினமாக சமஸ்கிருதக் கதை ஒன்றைச் சொல்லி, மாடு மேய்த்தல் அறிவு விருத்தியாவதற்கு முதற் படி என்று சொல்லிவைத்தார்.

தலைமைக்காரத் தேவர் மகனுக்கா மாட்டுக்காரப் பிள்ளைகளின் துணை கிடைக்காமற் போகும் ? ஜாம் ஜாம் என்று எருமைச் சவாரி செய்து கொண்டு அவன் குறுமலைப் பிரதேசத்தைச் சுற்றிவர ஆரம்பித்தான். உபாத்தியாயர் சொன்னபடி உள்ளுணர்வு வளர்ந்ததோ என்னவோ, ஈசனுக்குத்தான் வெளிச்சம். ஆனுல், ஆந்தையையும், கோட்டானையும், சில்வண்டுகளையும் தேடியலையும் முயற்சியில் எப்படியோ அவன் ஈடுபட ஆரம்பித்தான். அதில் மனத்தைப் பறிகொடுத்தான் என்றே சொல்ல வேண்டும். அவனுக்கு வீட்டுக்கு வருவதென்ருலே வேப்பங்காயாகி விட்டது.

தேவருக்குப் பிரச்னை மேல் பிரச்னையைக் கொடுத்துப் பரிசோதிக்க வேண்டும் என்று, அவர் பிள்ளைக்காக வழிபட்ட கடவுளுக்கு ஆசையிருந்தது போலும் ! பையனை வீட்டுக்குத் திருப்புவது எப்படி என்ருகிவிட்டது.

நீண்ட யோசனையின்பேரில் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். என்ன

அசடனானாலும் பையன் ஒரு மனிதப் பிராணிதானே! அவனுக்குக் கலியாணத்தைச் செய்து வைத்தால் வீட்டுப் பற்று ஏற்படக்கூடும் என்று நினைத்தார்.

தேவருடைய வட்டாரத்திற்குள் பெண்ணா கிடைக்காமற் போய் விடும்? மருதையாத் தேவன் ஏழைதான். அதனால் அவன் மகள் அழகாக இருக்கக் கூடாதா? கருப்பாயி பேருக்கு ஏற்ற கறுப்பாக இருந்தாலும் நல்ல அழகி. அவள் தேவரின் கட்டளையின்பேரில் அவன் முன்பு தென்பட ஆரம்பித்ததிலிருந்து, தேவருடைய மகன் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கருப்பாயியைக் கண்டவுடன் அவன் முகம் அறிவுக்களையுடன் பிரகாசிக்கும். கருப்பாயிக்கும் தனக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்று அந்த இருண்ட சித்தத்தில் மின்வெட்டுக்கள்போல் தோன்றலாயிற்று.

அச்சமயத்தில் அவனுக்கு வயதுபதினைந்து. ‘அப்பா’ ‘அம்மா’ என்ற இரண்டு சொற்களுடன் இப்பொழுது ‘கருப்பாயி’ என்ற வார்த்தையும் தெரியும். குறுமலைக்குன்றின் காடுகளும் அவனுக்குத் தெரியும்.

## 2

குறுமலைச் சாரலில் பிரம்மாண்டமான விருட்சங்களும் கண்ணுக்கு ரம்மியமாகச் செழித்து நெருங்கிய புல்பூண்டுகளும் கிடையா. பெரிய நாய்க்குடைகள் ரூபத்தில் வளர்ந்த உடை மரம், கள்ளி, முட்புதர்களான குத்துச் செடிகள், இடையிடையே விழுது விட்ட ஆல், அதைச் சுற்றி வளரும் பனை, கண்ணுடிக் கொம்மட்டிக் கொடிகள்— இவைதான் குறுமலைக் காடு. முயலும், நரியும், கோட்டானும், ஆந்தையுந்தான் அங்குள்ள பயங்கரப் பிராணிகள். கல்லும் கள்ளி முள்ளும் நிறைந்து இடையிடையே குத்திப் பாறைகளைச் சுற்றிச் சுற்றிப் போகும் ஒற்றையடித் தடங்களில் மேய்ச்சலுக்குப்போகும் வழிகள் குறுமலைப் பிரதேசத்து மாடுகளுக்கும் மாட்டுக்காரப் பிள்ளைகளுக்குந்தான் தெரியும்.

இந்தக் காட்டில் சித்தர்களும், ஔஷத மூலிகைகளும் உண்டு என்பது ஐதீகம். மாட்டுக்காரப் பையன்கள் சொல்லிவரும் கதைகள் பிரத்யட்சப் பிரமாணமாகச் சொல்லப்பட்டு வந்தன. இடையிடையே ஜடாமுனிக் கதைகளும் ஊரார் பேச்சின் சுவாரஸ்யத்தை

அதிகப்படுத்தி வந்தன.

அன்று தலைமைக்காரத் தேவரின் மகனுக்குத் தாகம் அதிகரித்ததற்குக் காரணம், என்றுமில்லாதபடி சுட்டுப்பொசுக்கும் வெய்யிலின் கொடுமைதான். உச்சி வெய்யிலில் மாடுகள்கூட நிழலில் படுத்துவிட்டன. மலைச்சாரலில் நின்று சமவெளியையும் தூரத்தில் தெரியும் சிற்றூர்களையும் பார்த்தாலே, பூமி ஓர் அக்கினி லோகம்போல் தகதகவென்று கானலில் பிரகாசித்தது.

உயர வானத்தின் இரண்டொரு மூலைகளிலிருந்த பஞ்சு மேகங்களும் பார்க்கமுடியாதபடி கண் கூசும்.

குறுமலையில் ஒரே சுனைதான் உண்டு. இருண்ட ஊற்று என்றே அதற்குப் பெயர். உச்சி நேரங்களின் நாவரட்சியினால் செத்தாலும், மாட்டுக்காரப் பையன்கள் அந்தத் திக்கிற்குச் செல்லவே மாட்டார்கள்.

இந்த அசட்டுப் பிள்ளைக்குத் தாகம் அதிகரித்தது. அறிவு, சுடர் விளக்காகவும், பயத்தை விரட்டும் கருவியாகவும் இருக்கலாம். ஆனால் அறிவு, சலனம் இல்லாது இருண்டு விட்டால், பயம் என்பதே ஏன் தோற்றப்போகிறது?

பையன் இருண்ட குகைக்குள் சென்று இரண்டு சிரங்கை ஜலம் வாரிக் குடித்தான். என்ன தோன்றிற்றோ அந்த இருண்ட அறிவிற்கு? தண்ணீரில் குதித்து நீந்த ஆரம்பித்தான். அரைமணி நேரம் கழிந்தது. ஜில்லென்ற நீர் உடலை நடுக்க ஆரம்பித்தது. கரையில் வந்து, ஒரு பாறைமீது வெய்யில் படும்படியான இடத்தில், மரத்துக் கிளைகளைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

எவ்வளவு நேரம் சென்றதோ!

இருண்ட குகைக்குள்ளிருந்து திடீரென்று ஒரு வெளிச்சம் தோன்றியது. அது மெல்லப் மெல்லப் பரந்து, இருண்ட குகையிலும், அதனடியில் சிறிது அலையிட்டுக்கொண்டிருக்கும் ஜலத்திலும் மின்னியது. அதன் பின் திவ்வியமான வாசனை குகை முழுவதும் பரவியது.

இந்த அசட்டுப் பிள்ளைக்கு அது அற்புதமாகத் தோன்றியதோ என்னமோ-அது வேடிக்கையாக இருந்தது என்பதில் தடையில்லை. வெளிச்சத்தை நோக்கிச் சிரித்துக்கொண்டே இருந்தான்.

வெளிச்சம் அதிகமாகப் பரவியது. ஆளை மயக்கும்படி அதிகரித்தது. அச்சமயத்தில் குகையின் உள்மூலையிலிருந்து ஓர் உருவம் நடந்து வர ஆரம்பித்தது. உருவம் மிகவும் குள்ளமாக இருந்தாலும், வயதை மதிக்க முடியாதபடி இருந்தது. குழந்தையின் முகம், அதில்

பொன்னிறமான தாடி, இடையில் ஒரு லங்கோடு. கண்கள் கருத்து குகையின் நீர்போல்புரண்டு பிரகாசித்தன. அந்த உருவம் இயற்கை விதிகளுக்குப் புறம்பானதுபோல் ஜலத்தின்மேல் நடந்து வர ஆரம் பித்தது. அப்பொழுதும் இந்த ஊமைப் பிள்ளைக்குப் பயம் தோன்ற வில்லை.

அந்தத் தவ உருவம் குகையின் வாசலை நெருங்கியதும், இந்த அசட்டுக் குழந்தை பேசாமல் அவர் பாதத்திலே விழுந்து நமஸ்கரித்தது.

அந்தத் தவ உருவத்தின் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது. கண்களில் ஒரு கணம் சிந்தனை தேங்கியது. அசட்டுக் குழந்தையின் கண்களையே அது கூர்ந்து கவனித்தது.

ஸ்பரிசத்திலே புளகாங்கிதமடைந்த குழந்தையின் சிரிப்பு, படிப்படி யாக மறைந்தது. கண்களில் அறிவுச் சுடர் ததும்பியது.

"என்னுடன் வா!" என்று குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு வந்த வழியே திரும்பியது உருவம்.

குகையில் படிப்படியாக இருள் கவிய ஆரம்பித்தது. அமைதி குடிகொண்டது.

பழைய இருள், பழைய அமைதி.

## 3

தவ உருவமும் பையனும் நெடுந்தூரம் நடந்து சென்றார்கள்.

சுனையைத் தாண்டியதும் மணல். எவ்வளவு தூரம் சென்றார் களோ! குகை விரிந்து இரண்டு பிரமாண்டமான பாறைச் சுவர்க ளாயிற்று. எங்கோ, உயரப் பறவைகள் எட்டிப்பிடிக்கும் தூரத்தில், வானத்தின் துண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத் திரங்களைக் காண்பித்து வழி காட்டியது.

முனி உருவம் கத்திபோல் கதிக்கச் சென்றது. அசட்டுக் குழந்தை பாறையையும் வானத்தையும் பார்த்துச் சிரித்துக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்தது.

இருவரும் மணல் வழியின் கடைசியை அடைந்தார்கள். அங்கும் பாறைச் சுவர் வழியை மூடியிருந்தது.

அந்த மூலையில் ஒரு சுனை. அதன் பக்கத்தில் ஒரு பாறை.

பாறையின்மீது இருவரும் உட்கார்ந்தனர்.

முனிவர் குழந்தையைத் தன் முகமாக உட்கார வைத்து. அதன் கண்களில் நோக்கி மந்திரத்தை உச்சரித்தார்.

குழந்தையைச் சுற்றிலும் ஒரு தேஜஸ் ஒளிவிட ஆரம்பித்தது. அதற்குப் புதிய விஷயங்கள் தென்படலாயின.

எங்கு பார்த்தாலும் செங்குத்தாகவும் குறுக்கும் நெடுக்குமாகவும் கிடக்கும் மணிகள், பாறைகள்! அதில் தங்கங்களும் வெள்ளியும் கொடிபோலப் படர்ந்து மூடிக்கிடக்கின்றன. பவழத்தாலும், தங்கத்தாலும் கிளைகள் கொண்டு, வைரங்களாக மலரும் ஓர் அற்புதப் பூங்காவனம். ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு லோகம். அதன் மலர் அல்லது கனி பல வர்ணங்களில் பிரகாசிக்கும் வைர வைடூரியங்கள். கிளைகளிலிருந்து சுருண்டு தொங்கும் நாகசர்ப்பங்கள், கண்ணாடிகள் போல் பிரகாசிக்கும் மேல்தோலையுடைய பிரமாண்டமான விரியன்கள், விஷப்புகையைக் கக்கிக்கொண்டு திமிர்பிடித்தவைபோல் சாவதானமாக நெளிகின்றன. பல பல வகையில் ஒளிவிட்டுக் கண்களைப் பறிக்கும் மணலில் அங்கங்கே உலகத்து ஜீவராசிகளின் எலும்புக்கூடுகள் பாதி புதையுண்டு கிடக்கின்றன.

குழந்தையை அழைத்து வந்த சித்தரின் பிரதிபிம்பங்கள்போல் அச்சு அசல் மாருத உருவங்கள் ஒவ்வொரு மரத்தடியிலும் நிஷ்டையில் ஆழ்ந்து சலனமற்றிருக்கின்றன. அந்த இயற்கைக்கு விரோதமான உலகத்திலே, சுவையையும் பரிமளத்தையும் பெற்ற காற்று, உணவாகத் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

“தேவியைப் பார்” என்று இடி முழக்கமான குரல் ஒன்று கேட்டது. உடனே அந்தப் புதிய உலகம் மறைந்தது.

பழைய இருட்டில், அந்தப் பாறைச் சுவரின் முகட்டில், ஒரு கன்னக் கனிந்த இருள் உருவம்.

அந்த இருளுக்கே ஒரு பிரகாசம் உண்டு போலும்!

அவள்தான் தேவி!

பிறந்த கோலத்திலே வாலைக் கனிவு குன்ருத கன்னி உருவம்!

உயர இருந்தாலும் குழந்தைக்கு ஒவ்வொரு அங்கமும் நன்ருகத் தெரிந்தது.

அசைவற்று நிற்கும் உருவத்தின் முகத்தில் ஒரு புன்னகை! கொடூரமான, உயிரைக் கொல்லக்கூடிய—ஆனல் உடலில் உணர்ச்சி வேட்கையைப் பெருக்கக்கூடிய புன்னகை!

குழந்தை அவளையே நோக்கிக்கொண்டிருந்தது. வைத்த கண் எடுக்காமல் நோக்கிக்கொண்டிருந்தது.

மெதுவாகக் ‘கருப்பாயி’ என்ற வார்த்தை அதன் வாயிலிருந்து வெளிப்பட்டது.

சப்த உலகங்களும் மோதுவனபோல் ஒரு பேரிடி. உருவம் இரு கூறுகப் பிளந்து மறைந்தது. பாறைச் சுவர்கள் கவிழ்ந்து விழுந்தன. ஆயிரம் மின்னல்கள் குழந்தையின் நெஞ்சில் பாய்ந்தன.

ஒரே இருட்டு.

தலைமைக்காரத் தேவரின் குழந்தை கருகிக் கரிக்கட்டையாகச் சுனையில் மிதப்பதை மாட்டுக்காரப் பையன்கள் கண்டு, ஊராருக்குத் தெரிவித்தார்கள்.

# உபதேசம்

டாக்டர் விசுவநாதன், கூரிய ஆபரேஷன் கத்தியை பேசினில் வைத்துவிட்டு, கத்தரிக்கோலால் குடலின் கெட்டுப்போன பகுதியை கத்தரித்தார். லிண்டை வைத்து ரணமும் சீழுமான பகுதியைத் துடைத்துத் தொட்டியில் போட்டார். "நர்ஸ், ஊசி" என்றார். பக்கத்தில் ஸ்டெரிலைஸ் செய்த ஊசியை நர்ஸ் கொடுக்க, டாக்டர் கை மடமடவென்று சக்கிலியத் தையல் போட ஆரம்பித்தது.

கிளாஸ் மேஜையில் கிடத்தப்பட்டிருக்கிற வியாதிஸ்தன் சிறிது முனகினான்; பிரக்ஞை வருவதின் முன்னணி சமிக்ஞை!

"டாக்டர் வில்க்கின்ஸன், இன்னும் கொஞ்சம் குளோரபாரம்... ஒரு நிமிஷம் போதும்...ஹூம், வெற்றிதான், என்று நினைக்கிறேன்" என்று பேசினில் ஊசியைப் போட்டுவிட்டு, கைஉறைகளையும் முகமூடியையும் கழற்றி விட்டுக் கைகழுவ பேசினிடம் சென்றார் விசுவநாதன். "வியாதியஸ்தனுக்கு பிரக்ஞை வந்துவிட்டது; ஆனால் அளவு கடந்த முயற்சி. ஒரு மணி நேரம் கழித்துக் கொஞ்சம் குளுக்கோஸ் கொடுங்கள்..." என்று சொல்லிக்கொண்டே வாயில் சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு, ஆப்பரேஷன் தியேட்டரை விட்டு, டாக்டர் வில்க்கின்ஸன் தொடர இறங்கி நடந்தார். இவரது நரைத் தலையில் சூரிய ஒளிப் பிரகாசம் விழுந்தது இவர் முகத்திற்கு ஒரு விபரீதமான தேஜஸைக் கொடுத்தது.

விசுவநாத்துக்கு பல மேல்நாட்டுச் சர்வகலாசாலைகளின் பட்டம். நிறபேதம் பாராட்டும் பிரிட்டிஷ் வைத்தியக் கௌன்ஸில் இந்திய வைத்தியக் கௌன்சில்கள் இவரது அபாரமான கல்பனை முறைகளைக் கண்டு பிரமிக்கும். ரணசிகிச்சை என்றால் டாக்டர் விசுவநாத் என்று அர்த்தம். சென்னை வாசிகள் அகராதிக்கு மட்டுமல்ல. யூகோஸ்லாவிய இளவரசருக்கு வந்த விசித்திரமான வீக்கத்திற்குச் சிகிச்சை செய்த நிபுணர்களில் இவரும் ஒருவர். மண்டையில் வீக்கம். மற்றவர்கள் கத்தி எடுத்தால் பிராணஹானி ஏற்படுமோ என்று பயப்பட்டார்கள். ஏனென்றால் ஆப்பரேஷன் வெற்றியடைவது, அதைச் சீக்கிரம் செய்து முடிப்பதைப்

பொறுத்தது. ஒரு வினாடி அதிகமானால் இளவரசருக்குப் பிரேதப் பெட்டியை ஆர்டர் செய்ய வேண்டியதுதான்...ஆனால் விசுவநாத் கைகள், வேலையை குறைந்த நேரத்திற்கும் பாதியளவிலேயே செய்து முடித்தன. இப்பொழுது அவர் சௌகரியமாகப் பள்ளிக் கூடத்தில் வாசித்துக் கொண்டிருப்பதற்கு டாக்டர் விசுவநாத்தான் காரணம்.

சென்ற ஜெர்மன் சண்டையில் பேஸ்காம்புகளில் உழைத்ததினால், ஆப்பரேஷன் கத்தியை வைத்துக்கொண்டு யமன் வரவைத் தடுக்க, டாக்டர்கள் தப்புவழி என்று சொல்லக்கூடிய முறைகளில் எல்லாம் பரிசீலனை செய்ய இவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது.

டாக்டர் வில்க்கின்ஸன் இவரது சகா. அவரது அந்தரங்க அபிப்பிராயம் மற்ற இந்தியர்களைப் பற்றி என்னவாக இருந்தாலும், டாக்டர் விசுவநாத்திடம் கருப்பன் என்ற பிரக்ஞை யில்லாமலே பழகி வந்தார். நாஸ்திகத்தின் பேரில் இருவருக்கும் இருந்த அபார பக்தி இந்த நெருக்கத்திற்குக் காரணமாக இருக்கலாம். முப்பத்து முக்கோடி கருப்புத் தேவாதி தேவர்களும், மூன்றே மூன்று வெள்ளைத் தெய்வங்களும் இவர்களது கிண்டல்களை இரண்டு நாட்கள் கூட இருந்து கேட்டுக் கொண்டு இருந்தால், இவர்கள் கண் எதிரிலேயே தூக்குப் போட்டுக்கொள்ளும். ரூபமற்ற தெய்வங் களுக்கு அப்படிப்பட்ட அடி!

அன்று ஆப்பரேஷன் தியேட்டருக்கு கொண்டுவரப்பட்டவன் ஒரு ஹடயோகி; விஷங்களையும் கண்ணாடிச் சில்லுகளையும் கண் எதிரிலும் தின்று சாகாதவன். சித்தாந்தச் சாமி என்ற அவன், இந்த இரு டாக்டர்கள் முன்னிலையில்கூடத் தன் திறமையைக் காட்டி இருக்கிறான்.

அவன் ஏதொ திடீரென்று பிரக்ஞையற்றுக் கிடக்கிறான் என்ற தகவல் கிடைத்ததும், ஆம்புலன்ஸ் காரை அனுப்பி சத்திரத்தி லிருந்து அவனை எடுத்துவரச் செய்ததும் இவர்தான். ஹடயோகி யின் உட்புறம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்க இருவருக்கும் இருந்த ஆசை அளவில்லை. எக்ஸ்ரே பரீக்ஷையில் குடலில் ஒரு பகுதி பழுத்து அழுகிவிட்டது என்று கண்டனர். காரணம், குடல் சதையில் ஒரு கண்ணாடிச் சில் குத்திக் கொண்டிருந்ததே. ஹடயோகி ஏதோ முறை தப்பிச் செய்ததின் விளைவு.

சித்தாந்தச் சாமிக்கு இரண்டு ஸ்பெஷல் நர்ஸ்கள்; மூன்று மணி நேரத்திற்கு ஒரு தரம் டாக்டர் பரிசோதனை எல்லாம்...!

மறுநாட் காலையில் டாக்டர் வில்க்கின்ஸன் கேட்ட செய்திகள்

அவரைத் திடுக்கிட வைத்தன. ஒன்று ஆஸ்பத்திரியில் கிடத்தப் பட்டிருந்த சித்தாந்த சாமியைக் காணும் என்பது. மற்றென்று டாக்டர் விசுவநாத் காஷாயம் வாங்கிக் கொண்டார் என்பது. முதல் விஷயத்தில் டாக்டர் வில்க்கின்ஸனுக்கு அவ்வளவு சிரத்தை யில்லை; அது போலீஸ் கேஸ். டாக்டர் விசுவநாத்திற்கு மூளைக் கோளாறுதான் ஏற்பட்டிருக்கு மென்று முதலில் நம்பி, அதற்கு வைத்தியம் செய்ய வேண்டுமென்று நினைத்தார்.

உடனே தமது மோட்டார் காரில் டாக்டர் விசுவநாத் பங்களா விற்குச் சென்றார். தலைமொட்டை; இடையில் ஒரு காவி வேஷ்டி; காலில் குப்பிப்பூண் பாதக்குறடு; இந்த அலங்காரத்தைக் கண்டதும் டாக்டர் வில்க்கின்ஸனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "எப்படி யாகுலும் இந்தியர்கள் இந்தியர்கள்தான்" என்று நினைத்துக் கொண்டார்.

"என்ன டாக்டர்! இது என்ன ஜோக்? என்றைக்கு உமது தெய்வங்கள் உம்மைப் பேட்டி கண்டன? தவடையில் கொடுத்து ஏன் அனுப்பவில்லை" என்று சிரித்தார்.

"வில்க்கின்ஸன்! சிரிக்காதே; இது ஒரு புதிய பரிசீலனை. எனது சித்தாந்தம் ஒரு முடிவு கட்டப்படவில்லை. பரிசீலனை செய்துதான் பார்க்க வேண்டும்" என்றார் டாக்டர் விசுவநாத். இவர்களிடத்தில், பாசறை ஆஸ்பத்திரி வாழ்க்கையில் தோன்றிய வெறி காணப் பட்டது.

டாக்டர் வில்க்கின்ஸனுக்கு ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. 'வெல்! குட்லக்!' என்று சொல்லிவிட்டுத்தான் திரும்ப முடிந்தது.

* * *

ஐந்து வருஷங்கள் கழித்து கைலாச பர்வத சிகர யாத்திரைக் கோஷ்டியில் டாக்டர் வில்க்கின்ஸனும் ஒருவராகச் சென்றார். அப்பொழுது பிளான் போடப்பட்ட பாதையே புதிது. இதுவரை யாரும் அந்த வழியில் சென்றதில்லை. திபேத்திய சர்க்கார் கொஞ்சம் தில்லு முல்லு செய்ததால் யாத்திரைக் கோஷ்டித் தலைவர் கடைசி நேரத்தில் வகுத்தது. கோஷ்டியில் பலத்த எதிர்ப்பு இருந்தாலும், யாத்திரைக்காரர்கள் விட்டுக் கொடுக்க மனமில்லாமல் ஒத்துக் கொண்டனர்.

யாத்திரை ஆரம்பித்து இருபதாவது நாள். ஒன்றும் முளைக்காத உறைபனிப் பாலைவனத்தின் வழியாகச் செல்லுகின்றனர். மணல் பாதைதான். அருகில் அரைமைல் தூரத்தில் பனிச் சிகரம்.

கோஷ்டியின் நடுவில் நடந்து சென்று கொண்டிருந்த டாக்டர் வில்க்கின்ஸனுக்குச் சித்தாந்தச் சாமியாரின் அடையாளங்களுடன் ஒரு மனிதன் பனிக்கட்டி உச்சியில் நிற்பதுபோலத் தெரிந்தது.

" அதோ பாருங்கள் அந்த மனிதனை ! அவனை எனக்குத் தெரியும். அவன் ஒரு சாமியார் " என்று தனக்கு முன்னே செல்லுபவரிடம் சொன்னார்.

முன்னே சென்ற ஜேக் ஆல்பர்ட்ஸன், ஆல்ப்ஸ் கிளப் நிரந்தர அங்கத்தினர். தூரதிருஷ்டிக் கண்ணாடியைத் திருப்பி வைத்துப் பார்த்து, " மனிதன் மாதிரித்தான் தெரிகிறது......ஆனால் ....." இவர் பேசி முடிக்குமுன் வில்க்கின்ஸன், பக்கத்திலிருந்த பாறையில் தாவி, பனிச்சிகரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார். ஜேக் ஆல்பர்ட்ஸனும் துணிந்தவர் ; அவரைப் பின்பற்ற முயற்சிக்கையில், கோஷ்டித் தலைவர் தடுத்து, " இருட்டி விட்டது ; அங்கு போய்த் திரும்புவதென்றால் காம்ப்புக்குப் போய்ச் சேர முடியாது " என்றார்.

" அந்த மனிதன் தனியாகப் போகிறான் ; அவனைச் சாக அனுப்புவதா ?" என்று கோபித்துக் கொண்டார் ஆல்பர்ட்ஸன். அப்பொழுதுதான் வில்க்கின்ஸன் போனது கோஷ்டித் தலைவருக்குத் தெரிந்தது.

வேறு வழியின்றி, " அடையாளத்திற்குத் தீ வளர்த்து வைக்கிறேம் ; சீக்கிரம் வாருங்கள் " என்று சொல்லிவிட்டுக் கோஷ்டியை அழைத்துச் சென்றார் தலைவர்.

ஜேக் ஆல்பர்ட்ஸனும் பாறைகளில் தாவித் தாவி வில்க்கின்ஸனைத் தொடர்ந்து சென்றார். பனிப்பாறை நெட்ட நெடுகலாக செங்குத்தாக இருந்ததால், அவர்கள் நின்ற இடத்திலிருந்து பார்க்கும்பொழுது உச்சி தெரியாது. இரண்டு பாறைகளின் இடுக்கு. அதைத் தாண்டி எதிரில் நீட்டிக்கொண்டிருக்கும் உறைபனிக் கட்டிமீது கால் வழுக்காது எட்டி வைத்து நின்றுகொண்டால், அதன் வழியாகவே பனிச் சிகரத்தின் உச்சியை அடையமுடியும். ஜேக் ஆல்பர்ட்ஸனும், வில்க்கின்ஸனும் ஒருவர் பின் ஒருவராக இடுக்கு வழியாக நுழைந்தனர். அந்த இடுக்குக்கு அப்புறம் பாதாளம். ஒரே குதியில்தான் பனிப்பாறைமீது குதிக்க வேண்டும். வில்க்கின்ஸன் மூச்செடுத்துத் தாவினார். கால் வழுக்கப் பார்த்தது. நல்லகாலம், ஐஸ் கோடரியை ஊன்றிக் கொண்டார். " நாரோ சேவ் " என்று சொல்லிக்கொண்டு. (மயிரிழை தவறினால்......என்று அர்த்தம்.)

ஜேக் பின்தொடர்ந்தார்.

இருவரும் பனித்தளத்தின்மீது வளைந்து செல்லும் பாதையில் நடக்கலாயினர். பனிக்கட்டிக்கிடையில் செங்குத்தாகக் கருங்கல் லிங்கம்போல் செதுக்கியிருந்தது, அதன் தலையில் காஷாய வஸ்திர மூட்டை !

ஜேக், அதை எடுத்துப் பிரிக்கையில், "வில்க்கின்ஸன் ! இங்கே பாரும் !" என்று கூறினர்.

வில்க்கின்ஸன் திரும்பிப் பார்த்தார். செங்குத்தாக சுவர்போல் நிற்கும் உறை பனிக்கட்டிக்குள் மனித உருவம்; டாக்டர் விசுவநாத் ! பத்மாசனமிட்டு நிஷ்டையில் உட்கார்ந்த பாவனையில்.

"அய்யோ பாவம், இவருக்கு இந்த முடிவா? பெரிய டாக்டர்," என்று தலையைக் குனிந்து வணங்கினர்.

பின்பு மூட்டையைப் பிரித்தார். அதில் ஒரு தோல்ப் பர்ஸ், டைரி, அதைத் திறந்ததும்......

" நண்பன் வில்க்கின்ஸனுக்கு,

நீ இங்கு வருவாய் என்று எனக்குத் தெரியும். நான் சாகவில்லை; நீ என்னை எந்த நிலையில் பார்த்தாலும் சாகவில்லை என்று நம்பு. நமது உயிர் நூல் சாஸ்திரங்களைக் கிழித்தெறிந்து விட்டு வேறுமாதிரி யாக எழுத வேண்டும். அஸ்திவாரமே தப்பு.

இப்பொழுது வெளியில் சொல்லாதே. நீ பயித்தியக்காரனுக்கப் படுவாய்......அந்தச் சாமியார் லேசான ஆசாமி யல்ல........." என்றிருந்தது. மூட்டையைக் கட்டிப் பழயபடி வைத்துவிட்டு 'ஜேக், திரும்புவோமா?' என்றார் டாக்டர் வில்க்கின்ஸன்.

"பின், வேறு என்ன செய்வது?" என்றார் ஜேக்.

# அன்று இரவு

## 1. அரிமர்த்தன பாண்டியன்

நான்மாடக்கூடலில் அன்றிரவு மூவர் உறங்கவில்லை. அதில் ஒருவன் சொக்கேசன். மனிதனுடன் மனிதனாக நடமாடி, அவர்களுடைய சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டு, வளையல் விற்று, சாட்சி சொல்லி, சங்கப்புலவர்கள் கருவ மடக்கி, வாழையடி வாழையாக ஆண்டுவரும் பாண்டியர்களுக்கு மந்திரியாய், நல்லாசிரியனாய், தெய்வமாய்க் கைகொடுத்து வரும் சொக்கேசன், அழகன் உறங்கவில்லை. பிறவா நெறி காட்டுவானுக்கு உறக்கம் ஏது? ஊண் ஏது? அடுத்த ஆள் ஓர் அரசன்; பாண்டியன், அரிமர்த்தன பாண்டியன். இமையா நாட்டம் பெற்றவன் போல, சயனக்ருஹத்தில் மஞ்சத்தில் அமர்ந்து நினைவுக் கோயிலில் நடமாடி வந்தான். அறிவை அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் சரக்கூடம் போட்டன; நடைபெற்ற நிகழ்ச்சிகளை வாலுடன் தலையிணைத்துக் காட்டி நகரின் வரம்பமைத்த பாம்பு மாதிரி அறிவு சக்கரவியூகம் போட்டது.

பிரகாசம் கண்ணைக் குத்தித் தூக்கத்துக்கு ஊறு விளைவிக்காமல் இருப்பதற்காக அமைத்த நீலமணி விளக்கு, அவனது மார்பில் கிடந்த ஆரத்தில் பட்டு, சற்று அசையும்போது மின்னியது. கை விரல் மோதிரத்தை நெருடிக்கொண்டே சாளரத்தின் வழியாகத் தெரிந்த சிறிய துண்டு வாண்வெளியை நோக்கிக் கொண்டிருந்தான். அன்றிரவு கிருஷ்ணபட்சத்துச் சந்திரன்; அது உதயமாக இன்னும் இரண்டு சாமம் கழியவேண்டும். சாளர வரம்புக்கு உட்பட்ட தாரகைகள் ஒன்று இரண்டு, தீர்க்கதரிசிகளின் அறிவு வரம்புக்குள் அடைபட்ட பிரபஞ்ச ரகசியங்கள் ஒரு குறிப்பிட்ட கோலத்தில் அமைந்து, மனித உயிர் நாடும் வேட்கைக்குச் சாந்தி தரும் சமயம் என்ற ஒரு குறிப்பிட்ட கோலத்தைக் காட்டுவதுபோல, ஜோதிடவிற்பன்னர்கள் வகுக்காத ராசிமண்டலங்களை அமைத்துக் காட்டியது.

சாளரத்தின் உச்சியிலிருந்து, வானத்துக்கு நேர்கோட்டில் ஆணி

யடித்து வைரம் பதித்தது மாதிரி, அல்ல மஞ்சள் கலந்த சிவப்புக் கல் பதித்த மாதிரி, ஒரே ஒழுங்கில் அமைந்து நின்று அசைந்து கண் சிமிட்டியது. மன்னன் மனம், அன்றைய நிகழ்ச்சிகளை ஒரு விநாடி மறந்து தாரகைக் கூட்டத்தில் லயித்தது. மனம் ஒன்ற ஒன்ற, இருட்டுக்குள் இருளுக்கு வரம்புபோட்ட மாதிரி கோபுரமும் கலசமும் திரண்டு உருவாயின; அதன் மத்தியில் அந்த விளக்குகள் என்ன, நம்மூர்க் கோயிலைக்கூடவா, நாம் தினம் கும்பிட்டு மன உளைச்சல் என்ற சுமையை இறக்கி வைக்கும் சுமைதாங்கியான கோயிலைக் கூடவா மறந்துவிட்டோம் என்று நினைக்கிறான் பாண்டியன். தன்னை அறியாமல் மீசையை நெருடிக்கொண்டே சிரிக்கிறான். கோபுரத்தைத் தாண்டி ஒண்டித் தெரியும் துண்டு வானத்தில் ஒரு நட்சத்திரமும்கூடச் சிரிக்கிறது.

'முப்பது வயசுக்குள் எவனாவது திடீரென்று மாறிப் பரம் ஒன்றே என்ற நினைப்புடன் நடமாட முடியுமா? குதிரை வாங்கப்போன மந்திரி திரும்பிவரும் பொழுது, விழுந்து கும்பிடு என்று என் மனமே சொல்லும்படி எப்படி மாறிவிட முடியும்? கொண்டுபோன பணத்தை என்ன செய்தான்? விரயம் செய்து போகத்தில் ஆழ்வதென்றால் அவன் உடம்பு அதைக் காட்டியிருக்குமே.'

அரிமர்த்தனன் மனசிலே அன்று பிற்பகல் பட்டி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன:

அமாத்தியன் திருவாதவூரன், பகல் முழுவதும் கால்கடுக்க நடு வெயிலில் நின்று கல் சுமந்து கசையடிபட்ட தன் சோர்வு சற்றும் காட்டாமல், வந்தபோது பூத்து அலர்ந்த புன்சிரிப்போடு நிற்கிறான். அரசன் அரிமர்த்தன பாண்டியன் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறான்.

"அமாத்தியரே, குதிரைகளுக்குக் கொடுத்தனுப்பிய தொகை எங்கே?"

"அவனைத் தவிர இவ்வுலகில் கொடுப்பவர் யார்? கொள்பவரார்?"

"வாதவூரரே, அப்படியானால் பணம் வாங்கவில்லை என்று மறுக்கிறீரா?"

"குதிரை வரும் என்று சொல்லுகிறேன்."

"குதிரையைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். பணத்தை என்ன செய்தீர், சொல்லிவிடும்; உம்மை மன்னித்துவிடுகிறேன்."

"அரசே, வாதவூரர் கொண்டுசென்றது அரசாங்கப்பணம்; அதை விரயம் செய்யத் தங்களுக்குக்கூட உரிமை கிடையாது என்பதைத் தாங்கள் எத்தனை முறை இந்த வாதவூரர் முன்னிலையிலேயே

சொல்லியிருக்கிறீர்கள் ; மன்னிப்பது என்றால் பாண்டியன் தனது ஆட்சியை அழிப்பது என்பதே பொருள் " என்று இடைமறிக்கிறார் ருத்திரசாத்தனார் என்ற மந்திரி.

" பணம் வந்துவிட்டால் போதுமா ? சமயத்தில் குதிரைகள் கிடைக்காததனால் நாம் எவ்வளவு ஆபத்தான நிலையில் இருந்தோம்? சோழன் திரட்டிய சேனை நம்மீது விழுந்திருந்தால் நாடு என்ன கதியாகும் ? களப்பிரர்கள் சோழ நாட்டைச் சூறையிடாதிருந்தால் இன்று மீன் கொடியில் ரத்தக்கறைகள் அல்லவா படிந்திருக்கும் ? தோல்வி என்பது நமக்கு இல்லை. சொக்கேசன் உள்ளவரை, பாண்டியன் உள்ளவரை, அந்நியன் தலை மண்ணில் உருளத்தான் செய்யும். இருந்தாலும்......" என்கிறார் ஏனாதியான பகைக்கூற்றச் சித்திரனார்.

" வாதவூரரே, என்ன சொல்லுகிறீர் ? தொகை எங்கே ? " என்கிறான் அரிமர்த்தனன்.

" கொடுத்தவன் வாங்கிக்கொண்டான் ; குதிரைகள் வரும் " என்கிறார் வாதவூரர்.

" அரசே, வாதவூரருக்கு வயசு முப்பதுதான். திருக்கோவை யாரைப் பாடியவர் என்பதற்காக, அவரை நாம் சிறிது காலம் பார்க்காமல் இருந்துவிட்டதற்காக, ஜீவன்முக்தராகிவிட்டார் என்று நினைப்பது தவறு. சங்கரனார் நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்ற நாடு இது. சங்கரருக்கே அப்படி யென்றால் வாதவூரருக்கு மட்டும் என்ன இளக்காரம் ? " என்கிறார் ருத்திர சாத்தனார்.

" வாதவூரரே, என்ன சொல்லுகிறீர் ? சித்தர்கள் போலப் பரிபாஷையில் பேசி ராஜாங்க நேரத்தைக் கழிக்க வேண்டாம். குதிரைகள் வரும் என்கிறீரே ; எப்போது வரும் ? "

வாதவூரன் கண்கள் ஏறச் செருகிவிட்டன. நின்ற நிலையிலேயே உள்ளோடு ஒன்றிவிட்டான்.

உதடுகள், " குதிரைகள் — குதிரைகள் — குதிரைகள்......" என முணுமுணுக்கின்றன.

பாண்டியன் மனசிலும், " குதிரைகள், குதிரைகள், குதிரைகள் " என்ற வார்த்தைகள் எதிரொலிக்கின்றன.

பட்டிமண்டபத்துக்கு வெளியே சடபட வென்று ஆர்ப்பாட்டமான சத்தம். காவலர்கள் இருவர் ஓடிவருகிறார்கள். " குதிரைகள் வந்துவிட்டன ! அரசே ! குதிரைகள் வந்துவிட்டன ! " என்று நமஸ்கரிக்கின்றனர்.

“என்ன, குதிரைகளா! எங்கே!” என்று எழுந்திருக்கிறான் மன்னன். சபையும் திரண்டு எழுந்திருக்கிறது. வீரக்கழல் முழங்க, அரசன் மிடுக்குடன் வாசலுக்குப் போகிறான். மந்திரி பிரதானிகள் பின்தொடர்கிறார்கள். பட்டி மண்டபத்திலே ‘குதிரைகள் குதிரைகள்’ என்று தம்மை மறந்து ஜபிக்கும் வாதவூரரையும் சிலரையும் தவிர யாரும் இல்லை.

குதிரைகள்தாம் எத்தனை! பத்து அக்குரோணிக்குப் போதுமானவை; அவ்வளவும் வெள்ளை. குதிரை நோட்டம் தெரிந்த கணக்காயர்கள் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்கள்; ஒரு சுழி இருக்க வேண்டுமே. அத்தனையும் உயர்ந்த ஜாதிக்குதிரைகள்.

குதிரைப்பாகன்தான் கண்கொள்ளாக் காட்சி. அவனை அழைத்துச் சென்று அப்படியே முடி சூட்டிவிடலாமா என்று கூட நினைத்தான் அரிமர்த்தனன். என்ன அசட்டுத்தனமான நினைப்பு! அவன் துருஷ்கனா, யவனனா, சோனகனா? கண்களிலேதான் அம்மம்ம, என்ன பயங்கரம்! சாட்டையைக் கொண்டு சிமிட்டாக் கொடுக்கிறான். அத்தனை குதிரைகளும் அணிவகுத்து நிற்கின்றன!

“பெற்றுக்கொண்டு சீட்டைக்கொடும்; போகவேண்டிய வழி கணக்கில் அடங்காது” என்கிறான் குதிரைப்பாகன். குரலில் இனிமையும் பயங்கரமும் கலந்திருந்தன.

அரசன் முறிச்சீட்டில் கையெழுத்திட்டுத் தருகிறான். பாகன் வாங்கிக்கொண்டு வணக்கங்கூடச் செய்யாமல் போய்விடுகிறான்.

மன்னனும் மந்திரிப் பிரதானிகளும் பட்டிமண்டபத்துக்குள் திரும்ப வருகிறார்கள். வாதவூரன் முகத்தில் சோகம் தேங்க, “நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே, வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்” என்று தழுதழுத்தபடி உருகி நிற்கிறார்.

“வாதவூரரே, என்னை மன்னிக்கவேண்டும்; நான் ராஜ்யத்தைச் சுமக்கிறவன்.”

“அரசே, நான் உலகின் துயரத்தை, வேதனையைச் சுமக்கிறவன்.”

“வாதவூரரே, அப்படி மனம் நொந்துகொள்ளக் கூடாது. தாங்கள் பழையபடி எனக்கு அமைச்சராகவே இருக்கவேண்டும்; தாங்கள் இல்லாவிட்டால் இத்தனை குதிரைகள் கிடைக்குமா?”

“அமைச்சன் மருத்துவனைப்போல இருக்கவேண்டும் என்பதை நான் தங்களுக்குச் சொல்லவேண்டுமா?” என்கிறார் ருத்திர சாத்தனார்.

"பகையை விரட்டப் படைபலம் வேண்டாமா?" என்கிறார் ஏனாதி.

அரிமர்த்தனன் மனசு மறுபடியும் அந்தக் குதிரைகள் மீது, அந்த வெள்ளைக் குதிரைகள் மீது சவாரி செய்கின்றது. பகைவர்கள் தலைமீது நடமிடும் குதிரைகள். வாதவூரன் கொடுத்த குதிரைகள் அல்லவா? என்ன அறிவு, என்ன தூய்மை! தெய்வாம்சமாக, தெய்வமாகக் குதிரைப்பாகனைப்போலவே நின்றானே!

நடுச்சாமத்தைப் புள்ளியிடச் சங்கு விம்முகிறது. அலறுகிறது, முழங்குகிறது; அதன் ஓசையும் மடிகிறது.

அது என்ன சத்தம், தனி நரி ஊளையிடுகிறமாதிரி! அதன் குரல் ஒடுங்கும் சமயத்தில் ஆயிரம் ஆயிரமாக நரிகள் ஊளையிடுகின்றன. நான்மாடக்கூடலில் நரிகளா? குதிரைப்பந்தி இருக்கும் திசையிலிருந்து அல்லவா கேட்கிறது? அரிமர்த்தனன் எழுந்து நிலாமுற்றத்துக்குச் செல்லுகிறான். காதுகளை ஈட்டியிட்டுக் குடைவது போன்ற இரைச்சல். இருட்டில் கண்கள் துழாவுகின்றன. இருட்டைத்தவிர, வேறு எதுவும் தெரியவில்லை.

மன்னவன் வீரக்கழல் ஒலிக்க, உத்தரியம் தரையில் புரள, மறுபடியும் சயனக்கிருஹத்தில் நுழைகிறான். மஞ்சத்தருகில் சாய்த்து வைத்திருந்த உடைவாளுடன் அறையை விட்டு விலகுகிறான். வாசலில் தூக்கமும் மருட்சியும் கண்களில் தேங்க, குழலும் மேலாக்கும் சரிய துவண்ட நடையில், விளக்கெடுத்து முன்செல்லுகிறார்கள் பணிப்பெண்கள். அந்த மங்கிய ஒளியில்தான் அவர்கள் என்ன அழகு!

அரசன் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறான். "குதிரை லாயத்தில் நரிகள் புகுந்துவிட்டன. அரசே, அவை நகருக்குள்ளும் பிரவேசித்துவிடும்போலத் தெரிகிறது......" என்று கும்பிடுகிறார்கள் குதிரைப் பந்தியின் காவலர்கள்.

மூன்று ஜோடிக் கழல் ஒலிகள் இருட்டில் படிப்படியாக மங்கி ஓய்ந்தன.

திடீரென்று இருட்டையே கூர்ங் கத்திகொண்டு கிழிப்பதுபோல ஒரு தனி அலறல். பீதியில் வெருண்டு உயிருக்குப் போராடி மடியும் குதிரையின குரல் அது. அதைத்தொடர்ந்து ஆயிரம் பேய்கள் கெக்கலிகொட்டி நகைப்பது போன்ற நரி ஊளை. போர்க்களத்தில் கவந்தங்கள் ஆடுவதையும் அச்சிற்று விழும் தேரில் அடிபட்டு நசுங்கும் குதிரைகள், யானைகள் போடும் கூச்சல்களையும் கேட்டவன்தான் அரிமர்த்தன பாண்டியன். ஆனால் அன்று கேட்ட

அந்தத் தனிக் குதிரையின் சப்தம், அவனிடம் அபயம் கேட்டு ஏமாந்து உயிர்விடுவது போல இருந்தது. நான் மாடக்கூடலில் இந்த இருட்டுப் பேய்க்கூச்சல் ஜனங்களை எழுப்பிவிட்டிருக்கக் கூடும். அவர்கள் இரட்டைத்தாழிட்டு வீட்டுக்குள் அமர்ந்து விட்டனர்.

குதிரைக் கொட்டடியின்முன் காவலர்கள் கதவைத் தாழிட்டுக் காவல்காத்து நின்றனர்.

"உள்ளே மருந்துக்குக் கூட ஒரு குதிரை இல்லை, நமது லாயத்தில் நின்ற பழைய குதிரைகளைக்கூட, ஒன்று பாக்கிவிடாமல் கொன்று கிழித்துவிட்டன" என்றார்கள் காவலர்கள்.

"புதுக் குதிரைகள்?"

"அவை மறைந்த மாயந்தான் தெரியவில்லை. உள்ளே நரிகள் நின்றுதான் ஊளையிடுகின்றன. அவை வெளியே வந்துவிடாம லிருக்க, கதவை இழுத்துச் சாத்தி வைத்திருக்கின்றோம். நாங்கள் சாத்து முன்பே பெரும் பகுதி வெளியே ஓடிவிட்டன."

"அரசே, குதிரைப் பந்திக்குள் நரிகள் ஊளையிடுகின்றனவே; புதுக் குதிரை ஒன்றுகூட இல்லையே" என்று பக்கத்தில் ஒரு குரல் கேட்டது.

அரசன் திரும்பிப் பார்க்கிறான். அமாத்தியர் ருத்திரசாத்தனார் நின்றுகொண்டிருந்தார்.

"ஆமாம், புதுக்குதிரைகளைக் காணவில்லையாம்" என்றான் அரி மர்த்தனன்.

"நானும் அப்படித்தான் எதிர்பார்த்தேன். தங்கள் மந்திரியின் சித்து விளையாட்டாக இருக்கலாம். நீங்கள் கவனித்தீர்களோ, குதிரைகள் வந்தபோது அவரது நிலையை? நான் வரும்போதே மீண்டும் அவரைக் கைது செய்யும்படி உத்திரவிட்டுவிட்டு வந்தேன்."

"சீ! அப்படி இருக்காது. மேலும் நீதி வகுக்க நாம் யார்?"

"அரசே, தாங்களுமா?"

"குதிரைப்பாகன் எங்கு மறைந்தான் என்பதுதான் தெரியவில்லை. நேற்று நமது கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் சென்று படுத் ததைத்தான் சிலர் பார்த்ததாகத் தெரிகிறது. ஒற்றர்கள் கிரகித்த தகவல் இதுதான்" என்றது மற்றொரு குரல். ஏனாதி பகைக்கூற்றச் சித்திரனார்தாம்.

"பாகனைப் பிடித்தால் காரியம் தெரியும்."

## இடைவெட்டு

**அடியார்க்கு நல்லார் :**

நான்தான் அப்பொழுதே சொன்னேனே; குதிரைகள் நிச்சயமாகவரும் என்று, எனக்குத் தெரியாதா வாதவூரனை !

**சேனுவரையர் :**

வாதவூரன் பொய்யன் என்று நான் எப்பொழுதும் சொன்னதுண்டா ?

சமயத்துக்கு வராத குதிரைகள் இனி வந்து என்ன, வராமல் என்ன ?

இப்பொழுது வெகு சிரேஷ்டமான பரிகள் கிடைத்தாலும், அவை நரிகளுக்குத்தான் சமம். மானம்கெட்டுப்போய் அரசனும் அவற்றை ஏற்றுக்கொண்டானே !

**இளம்பூரணர் :**

புரைதீர்ந்த நன்மைபயக்கும் என்றால் எதுவும் பொய்யே அல்ல.

இன்று அரசன் ஏற்றவை நரிகளாகவே இருந்தாலும் அவை பரிகளே.

வாதவூரனுக்கு வயசு முப்பது என்பதற்காக வாயில் வந்தபடியெல்லாம் பேசுவதா ?

**ஒற்றன் :**

குதிரைகள் கொண்டுவந்தானே, அவனை நீங்கள் எங்காவது கண்டீர்களா ?

**அடியார்க்கு நல்லார் :**

சொக்கேசன் ஆலயத்து வசந்த மண்டபத்துக்குள் போய் உட்கார்ந்தான். நான் என் கண்களால் கண்டேன்.

**சேனுவரையர் :**

நான் பார்க்கும்பொழுது அவன் வசந்த மண்டபத்தில் இருந்தான், என்று சொல்லும். அவன் இப்பொழுது எங்கும் இருக்கலாம். அவனது கழுத்தில் கிடந்த மறுவைப் பார்த்தீர்களா ? ஆலாகல விஷம் மாதிரி அல்லவா இருந்தது ? உன்மத்தன்போல் அல்லவா, நிதான புத்தியுடன் நடந்துகொள்ளச் சிரமப்படும் உன்மத்தன்போல் அல்லவா, அவன் விழித்தான் ?

**இளம்பூரணர் :**

மறு இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லாருக்கும் அதிருஷ்டந் தான். அவன் அதிருஷ்டசாலிதான் என்பது நிச்சயமில்லை. வாதவூரன் நிச்சயமாக அதிருஷ்டசாலிதான்.

* * *

## 2. வாதவூரர்

**வா**தவூரன் மனசும் அறிவும் தட்டு மறித்து விளையாடின. யாருக்கு யார் பதில் சொல்லுகிறார்கள் என்ற நினைப்பின்றி யாரோ மனசில் சொன்னதை, தாம் நாவால் சொன்னதாகவே வாதவூரருக்குப் பட்டது! குதிரைகள் வாங்க வேண்டும் என்ற நினைப்பே அற்றுப் போகும்படி தம்மை இழுத்து உட்கார்த்திவிட்ட பெரியார் தம்மிடம் என்னத்தைக் கண்டுவிட்டார் என்பதுதான் முடிவில்லாப் புதிராக அவரை மலைக்க வைத்தது.

கல்லால நிழலில் அமர்ந்த தட்சிணாமூர்த்தத்துக்கு, கண்கூடாகக் கண்டு, ஸ்பரிசித்துப் பேசக்கூடிய ஒரு ரூபம் இருக்குமாகில் அது அவர்தாம். என்னை ஆட்கொள்ளுவதற்காக அம்மையப்பனே அப்படி வந்தானோ! சீ! நான் யார்? எனக்குத் தகுதி என்ன! மனசில் அவன்மீது நாட்டம் இருந்துவிட்டால் போதுமா? கால் எடுத்துவைக்க முடியாமல், அறிவுதான் அடிக்கு நூறு வேலிகள் கட்டுகிறதே, அப்படிப்பட்ட அறிவு என்னை ஆட்கொண்டு என்னை அளந்து நிற்கும்போது, அவனால் தான் வர முடியுமா, என்னால்தான் அவனிடம் போகமுடியுமா?

பாண்டியனிடம் சமத்காரமாகப் பேசிவிட்டதால் நான் செய்த காரியம் சரியாகிவிடுமா? அவன் கொடுத்தானாவது! அவன் வாங்கிக் கொண்டானாவது! அவன் அரிமர்த்தனனாக வந்து கொடுத்த பொழுது அரிமர்த்தனனாக நிற்கும் அவனிடம் கணக்கு காட்டுவதை விட்டு, வேதாந்தம் பேசி என்னை நான் பொய்த்துக் கொண்டேனே! என்னைவிட நெஞ்சறி கள்வன் எவன்? என்னை யும் நம்பி, பணத்தைக் கொடுத்தானே பாண்டியன். பாண்டியன் பணம். பாண்டியன் பணம் கரையும் பொழுது காலம் நின்றதே, களனே அழிந்ததே. அந்தப் பெரியாரை நான் திரும்பவும் பார்க்க வேண்டுமே. அவர் அருகில் இருந்தால், தாய் மடியில்

இருப்பது போலல்லவா இருந்தது? அவர் என்னிடம் என்ன சொன்னார். என்னத்தைத்தான் சொல்லவில்லை? அவர் சொன்னதை வேதமும், வேதாந்திகளும், சங்கரனும் சொல்லத்தான் செய்திருக்கிறார்கள். அவர் சொன்னதன் நுட்பம் வார்த்தைக்குள் இல்லையே. குரலிலா? கண்ணிலா? அவர் எதைக்கொண்டு என்னை இழுத்து விட்டார்? எனக்குத தெரிந்ததைத்தான் சொன்னார். ஆனல், தெரிந்தது என நம்பி இருந்ததற்கு எவ்வளவு உள்ளுரை கொடுத்துவிட்டார்? "தாமே குதிரைகள் வரும்; நீ உன் குதிரைகளை அடக்கக் கற்றுக்கொள்" என்றுரே சிரித்துக்கொண்டு. அப்பொழுது பாண்டியனும் அவனுடைய குதிரைகளும் அவனுடைய குதிரை வேட்கையும் இந்தப் பிரபஞ்ச லீலையில் எவ்வளவு அற்பமாக, துச்சமாகப் பட்டன; நமது பார்வைக்குள் படவேண்டாத ஒன்றுகப் படும்படி செய்துவிட்டாரே. நானு பணத்தை எடுத்துக் கொடுத்தேன்? இந்தப் பிரபஞ்சமே எடுத்துக் கொடுத்தது. அதற்குப் பாண்டியன் என்னை வெயிலில் நிறுத்த வேண்டும், கசையடி கொடுக்க வேண்டும், கண்ணைப் பிடுங்க வேண்டும், யானையைவிட்டு என் தலையை இடற வேண்டும், இவை எல்லாம் அற்பத்துக்கு அற்பமான காரியங்கள். பாண்டியனது குதிரை வேட்கை மாதிரி பிரபஞ்சத்தின் பார்வையில் படவேண்டாத ஒன்று. என்னுடைய கட்சியும் பாண்டியன் கட்சி போன்றதுதான். மதுரை அதிருஷ்டம் பெற்ற ஊர்தான். பாண்டியநாடு அதிருஷ்டம் பெற்ற நாடுதான். என்னை எப்படியாவது நீதியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பதற்காக என்ன என்ன பாடு பட்டான்! அவனுக்குக் குதிரையைப் பற்றிக்கூட அக்கறை இல்லைபோல் இருக்கிறது. நீதி என்ற ஒன்று திருப்தியடையும்படி நான் பதில் தந்துவிட்டால், என்னைப் பாதுகாத்து மறுபடியும் இந்த மாதிரி உத்தியோக விலங்கை மாட்டிவிடுவதில் அவனுக்கு என்ன ஆசை! அரிமர்த்தனனும் அதிருஷ்டசாலிதான். என் உயிருக்கு உயிரான ருத்திரசாத்தனும் ஏனுதியும் சத்திர வைத்தியர்கள் போல அல்லவா நடந்து கொள்ளுகிறார்கள்? மனிதவம்சம் அநாதி காலந்தொட்டு இன்றுவரை, இனிமேலும் அறுகு போலப் படர்ந்து கொண்டே இருக்க, கண்களைக் கட்டிக்கொண்டு நடக்கும் நீதியின் பின்புறமாக, தம் மனதைச் செப்புக் கோட்டைக்குள் சிறை செய்து நடந்தார்களே, அவர்கள் அல்லவா மந்திரிகள்? மந்திரிகள் என்று உலகத்தில்வேடமிட்டால் மந்திரியாகவே நடிக்கவேண்டும். இடையிலே வேஷத்தைக் கலைத்துக்கொள்ளலாமா? அது மனுதர்மமாகாது; உயிர்த் தருமம். உயிர்த் தருமத்துக்கு அரசனது பட்டி

மண்டபத்தில் இடங்கொடுக்க முடியுமா? கொடுத்தால் பட்டி மண்டபத்தில் வௌவாலும் குறு நரியும் கொண்டாடி நடக்குமே..... என்ன? .........

குதிரைகளா? பாண்டியனுடைய பணியாளர்கள் அல்லவா வந்து சொல்லுகிறார்கள்...? குதிரைகள்! குதிரைகள் வந்துவிட்டனவோ? குதிரைகளாவது வருவதாவது! பணம் போன திக்கில் குதிரைகள் ஏது? உன்னை ஆட்கொண்ட ஐயன், அன்று கல்லாலின் அடியில் உன்னையே உருக்கிவிட்டவன், உன்னைக் காப்பாற்றக் குதிரைகளைக் கொண்டு வந்து விட்டானா? என்ன ஆபத்து? எனக்காக, என் பொய்க்காக, என்னுடைய நிலையில்லா மனசுக்காக என்னுடன் சேர்ந்து தெய்வமே, என்னுடைய குருதேவனே, அந்தப் பொய்யை நிலைநாட்டத் துணிந்தானா? நான் கொடுக்காத தொகைக்குக் குதிரைகளா? எனக்காக, என்னுடைய அற்ப ஜீவனைப் பற்றுவ தற்காக, சகல லோகங்களுமே திரண்டு நின்று எனது பொய்யை நிலைநாட்ட வருவதா? களங்கமற்ற தர்மமானது, என்னுடைய சிற்றறிவின் கொடுக்கல் வாங்கல்களின் அற்ப நடத்தைகளுக்கு. அகந்தைக்குத் துணைவருவதா? உலகத்தையே பொய்ப்பிக்கும் பொய்யை உண்டாக்கிய நான், அதமன் அல்லவா? சர்வேசுவர னுடைய லீலை என்னுடைய பொய்க்கும் துணை நின்று அதை மெய்ப்பிக்க அதலபாதாளத்தில் இறங்குமாகில் அது......அது...... எனது நா எழவில்லையே......!

வாதவூரரின் உடலிலிருந்து விலங்குகள் கழற்றப்படுகின்றன. அவருக்குப் பழைய மரியாதைகள் செய்யப்படுகின்றன. ஆனால் அவை மெய்யான பார விலங்குகளாக ஊனையும் உயிரையும் உணர் வையும் அதற்குப் பின்புறமாக உள்ள மகா சூட்சுமமான கரணங் களின் சேர்க்கைக் கோப்பையும் அழுத்தின. அவரது நெஞ்சு உலர்ந்தது. வறண்டது, சுழன்றது, பொங்கியது, குமுறியது; சுழித்து நுரைத்துக் கொப்புளித்துப் பொய்ம்மை என்னும் வேதனை யைக் கக்கி விக்கித் தடுமாறியது. அவருடைய வேதனை உலகத்தின் வேதனை ஆயிற்று. மதுரை மூதூரின் வேதனையாக உருவெடுத்தது; பெருக்கெடுத்தது. பிரவாகமாகச் சுழித்துக் குறியற்றுக் குறிக்கோள் அற்று விம்மிப்புடைத்து ஓடியது. கரைகள் என்ற பிரக்ஞை இல்லாமலே மதுரை மூதூரை நனைத்தது, முழுக்கியது, ஆழ்த்தியது. பஞ்சணை மெத்தையில் அமர்ந்திருந்தது வாதவூரன் உடல், அவருடைய வேதனை உலக வியாபகமாக, மதுரையையும் அதற்கும் அப்பால் உள்ள அண்டங்களையும் தன்னுள் ஆக்கியது......

நடுநிசியில் ருத்திரசாத்தனுடைய சேவகர்கள் அவருடைய உடலில் விலங்கிட்டனர். விலங்குகள் ஏறின என்ற உணர்வும் அற்றுப்போன சமயம் அது. வேதனை வெள்ளம் அவரையும் அவரது பிரபஞ்சத்தையும் அமுக்கித் தன்னுள் ஆக்கித் தடந்தெரியாமல் செய்துவிட்டது.

## இடைவெட்டு

**சேனாவரையர் :**

வைகை நதியிலே வெள்ளம் இப்படி வந்தது என்று சொன்னால் நம்புகிறவர்கள் யார்? சில சமயங்களில் கண்ணால் காணும் விஷயங்கள் கூட நிஜமா என்ற சந்தேகம் தோன்றுகிறது. நீர் அந்தப்பக்கமாக ஒரு கூடை மண்ணை அள்ளிப்போடும்.

**இளம்பூரணர் :**

பரிகள் நரிகளுக்குச் சமம் என்றீரே, உமக்கு யக்ஷிணி உபாசனை உண்டோ? சொன்ன மாதிரி பாண்டியன் குதிரை லாயத்திற்குள் நரிகள் எப்படிப்புகுந்தன? தலையாலங்கானத்துப் போரில் கவந்தங்கள் ஆடினவாம். கூளிகளும் பேய்களும் கூழ் அட்டனவாம். அன்றுகேட்ட பேரிரைச்சல்கூட இன்றைய நரி ஒன்றின் சத்தத்துக்கு ஈடாகாதே, அலறல் கால பாசம்போல் அல்லவா உயிரை நாடித் தடவியது! நரிச் சத்தம் கேட்டே நகரத்தில் சாவுக்குக் கணக்கு இல்லையாம்.

**அடியார்க்கு நல்லார் :**

பேசிக்கொண்டே நிற்காதீர். முழங்கால் பரியந்தம் தண்ணீர் சுற்றுவது தெரியவில்லை? இன்று வையையில் வெள்ளம் எப்படி உண்மையோ அப்படி நரிகளும் உண்மை. இவை கண்ணுக்குத் தெரிந்தவைகள். இவற்றிற்கும் மேலாக ஏதோ ஒன்று, ஆதி காரணமான ஒன்று... ..

**ஒற்றன் :**

ருத்திரசாத்தன் உத்தரவுப்படி வாதவூரனை விலங்கிட்டு விட்டார்கள். அவனைப் பிடித்தால் போதாது. குதிரைப்பாகனையும் பிடிக்கவேண்டும்.

**மூவரும் :**

மன்னவன் ஆக்ஞை அல்ல அது. அவன் அப்படி உத்தரவு போடமாட்டான். ஐயோ, வெள்ளம் பொங்குகிறதே! நுரைகள் புரள்வதைப் பாருங்கள், சிவனுடைய சிரிப்புமாதிரி......

## 8. சொக்கன்

ஆலவாய்மெய்யன், உலகத்தைத் தன்வசம் இழுக்கும் சொக்கன் விளையாடினான். ஜீவாத்மாவின் வேதனையை உணராது விளையாடினான். அங்கயற்கண்ணியின் கண்ணில் பாசமும் கன்னத்தில் குழிவும் தோன்ற அவன் விளையாடினான். பெரியவராக வந்து, பெரிய ஞானோபதேசம் செய்வது போலப் பாவனை செய்து, தெரிந்ததையே சொல்லி, ஏற்கனவே தன் பாசத்தில் சிக்கிய ஜீவனை இன்னும் ஒரு பந்தனம் இட்டு வேடிக்கை பார்த்தான். ஈசன் விளையாடினான். வாதவூரன் அவனுடைய விளையாட்டுப் பொம்மையானான். ஈசனுக்குப் பிரபஞ்சமே வாதவூரனாயிற்று. பிரபஞ்சத்துக்கு உடைமையான அவனது பார்வை வாதவூரன் மீது மட்டும் விழுந்தது. பிரபஞ்சமும் அண்டபகிரண்டமும் அனந்த கோடி ஜீவராசிகளும் யோகநித்திரை போன்ற தாமஸ நித்திரையில் ஆழ்ந்துள்ள நிலைப்பொருள்களும் ஏகோபித்து ஏற்றுச் சுமக்க வேண்டிய அவனது பார்வை அனைத்தையும் விட்டு அதில் ஒன்றான மகா நுட்பமான வாதவூரன் என்ற தோற்றத்தின்மீது, ஓர் உருவ வரம்புக்கு உட்பட்ட தனிச் சாகையின் மீது விழுந்தால் அது சுமக்குமோ ?

ஆமாம், அதனால்தான் வாதவூரன் நெஞ்சிலே வேதனை பிறந்தது. சொக்கன் திடுக்கிட்டான். விளையாட்டு விபரீதமாயிற்று. அவன் மனசையும் அந்த வேதனை கவ்வியது. அங்கயற்கண்ணியின் கண்கள் வாளையைப்போலப் புரண்டு சிரித்தன. கன்னங்கள் குழிவுற்றன. கோவைக் கனிக்கு நிறமும் மென்மையும் கற்பிக்கும் அவள் அதரங்கள் மலர்ந்தன. கொங்கைகள் பூரித்தன. காம்புகள் விம்மின. செல்வி சிரிக்கத் தொடங்கிவிட்டாள், அண்ணல் தன் செயல் கண்டு. பித்தாடும் சொக்கன் வேதனை கொண்டு சிரிக்கலானான். சிரிப்பு நாபிக் கமலத்திலிருந்து கொப்புளித்துப் பொங்கியது.

ஈசன் மனசிலோ வேதனை. ஈசன் வாதவூரனாகிவிட்டான்.

அவன் துயரம் இவன் துயரமாகியது. ஜீவனுடைய பொறுப்புக்குள் உட்பட்டு, அதன் அற்பத்திலும் அற்பமான கொடுக்கல் வாங்கல் பேரங்களின் சிக்கலை நன்குணர்ந்து அதன் சுமைகளைத் தாங்கலானான். ஈசன் கழுத்துத் தள்ளாடியது. என்ன சுமை! என்ன பாரம்! கண்கள் ஏறச் செருகின.

அவனது வேதனையைக் கண்டு அங்கயற்கண்ணி சிரிக்கிறாள். அண்ட பகிரண்டமும் ஏகோபித்து அவளுடன் சேர்ந்து ஈசனைப் பார்த்துச் சிரிக்கின்றன.

வாதவூரனாக ஈசன் வேதனை கொண்டான். அவன் மனம் என்ற சர்வ வியாபகமான காலம் கொல்லாத சர்வ மனம் நைந்தது. குமுறியது. கொப்புளித்தது. வாதவூரனாகக் கிடந்து வெம்பியது. குதிரை எனக்காட்டி ஏமாற்றி வந்துவிட்ட செயலுக்காக, தானும் அந்த மனிதனைப்போலச் சிட்சை பெற்றால்தான், ஆறும்; வாதவூரன் தன் அருகில் வந்தால், அவனருகில் தான் இருக்க லாயக்கு என நினைத்தான்.

வேதனை சுமந்த கழுத்துடன் ஆலவாய்க் கர்ப்பக்கிருகத்திலிருந்து வெளிவந்தது ஓர் உருவம். ஈசன் வெளிவந்தான். சுற்று முற்றும் பார்த்தான். எங்கே பார்த்தாலும் வெள்ளம். மதுரை மூதூரை ஊர் என்று அறியமுடியாதபடி ஆக்கிவிட்டது வெள்ளம். ஈசன் நடந்தான். ஈசன் சிரித்தான். ஈசன் வெள்ளத்தில் நீந்தி விளையாடி முக்குளித்துக் கும்மாளி போட்டுக்கொண்டிருந்தான்.

அங்கயற்கண்ணி சிரித்தாள். வெள்ளம் இன்னும் உக்கிரமாக நுரை கக்கிப் பாய்ந்தது.

மனிதவம்சம் துயரத்திலும் வேதனையிலுமே ஒன்றுபட்டு வரும். தன்னை அறியாமலே முக்திநிலை எய்தும். அன்றிரவு அவ்வூரின் நிலை அது. யானையும் காளையும் மனிதனும் மதிலும் மண்ணும் அரசனும் ஆண்டியும் அன்று வெள்ளத்தைத்தடுக்க, மறிக்க, தேக்கி நகரத்தைக் காப்பாற்ற, காரிருட்டில், அருகில் இருப்பவன் என்ன செய்கிறான் என்பதை அறியாமல் மண்வெட்டிப் போட்டுப் போட்டு நிரப்பினர். மண் கரைந்தது. மறுபடியும் போட்டனர். கரைந்தது. மறுபடியும் போட்டனர்.

அன்றிரவு இரண்டு ஜீவன்கள் வெவ்வேறான துயரத்தில் வாடின. வாதவூரன் தன் பொய்யை நிலைநாட்டிய தெய்வத்தின் கருணையைச் சுமக்கமுடியாமல் வேதனைப்பட்டான். மண் வெட்டி வெட்டிப் போடும் அனந்த கோடி ஜனங்கள் முயற்சியை அவனது வேதனை கரைத்தது. உழைத்து உழைத்துச் சோர்வடைகிறவர்களுக்குப்

பசியாற்ற ஒரு கிழவி, பந்தமற்ற நாதியற்ற கிழவி பிட்டு அவித்து அவித்துக் கொட்டி விற்று வருகிருள். அவள் கிழவி. அவளுக்கு நாதி இல்லே. பந்தம் இல்லே. பிட்டும், பிட்டுக் குழலுந்தான் பந்தம். தணிக்கை பண்ணிவரும் கணக்கர்கள் பசி போக்கப் பிட்டுக்காரியிடம் வந்தார்கள். அவளது அடுப்பில் எரிந்த நெருப்பில் கொஞ்சம் எடுத்து அவளது வயிற்றில் கொட்டிவிட்டுப் போஞர்கள். மதுரைவாசிகள் எல்லாரும் கரைக்கு மண்போட வேணுமாம். அவளது பங்குக்கும், தச்சுமுழம் நாலு அளந்து போட்டிருக்கிறதாம். அவள் என்ன செய்வாள்? பிட்டுக்குழலேப் பார்ப்பாளா, அடுப்பைப் பார்ப்பாளா, அந்த இருட்டில் ஆள் தேடிப்போவாளா?

இருட்டிலே "ஆச்சீ" என்ற குரல் கேட்டது. அதிலே எக்களிப்பும் பரிவும் கலந்திருந்தன. வேதனே வெள்ளத்தில் முக்குளித்த ஈசன் குரல் அல்லவா?

"யாரப்பா, புட்டு வேணுமா? என்று கேட்டாள் ஆச்சி.

"என்ன ஆச்சீ, புட்டா அவிக்கிருய்? புட்டு நன்ருக இருக்குமா?" என்கிருன் ஈசன்.

"என்னப்பா, இப்படி வா. உன்னே வெளிச்சத்தில் நல்லாப் பார்க்கட்டும். என் பேரன் மாதிரி இருக்கியே; வா இப்படி உட்காரு. உன் பங்கை நிரப்பிவிட்டியா? எனக்கு நாலு மொளம் அளந்திருக்காங்களாம். நீதான் ரெண்டு கூடை மண்ணேப் போடேன். உனக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்ருள் கிழவி.

"எனக்கு என்ன கொடுப்பாய் ஆச்சி?"

"என்னிடம் காசு பணம் ஏது? இப்பவரை சாப்பிட்டவங்க கணக்குச் சொல்லிவிட்டுப் போயிட்டாங்க. உனக்கு வேணும்னு, புட்டுத் தாரேன்."

"ஆச்சி, அப்படியெல்லாம் நீ ரொம்ப ஏழையா?"

"இதென்ன கூத்தா இருக்கு! உங்க ஊர்லே பணக்காரங்களா புட்டுச் சுட்டுப் பொழைக்கிருங்க?" என்று சிரித்தாள் கிழவி. நாலு புறமும் நரிகள் ஊளேயிடும் வனந்திரத்தில் சிக்கிக்கொண்ட ஜீவனின், நிர்க்கதியாகத் தவிக்கும் உயிரின் துயரம் அந்தச் சிரிப்பிலே இழையோடியது.

"நீயோ பரம ஏழை. எனக்கோ பசி சொல்லி முடியாது. போனுப் போகிறது. புட்டு உதிர்ந்துபோனுல், அதைமட்டும் எனக்கு எடுத்து வைத்திருந்து கொடு. நான் போய் உன் பங்குக்கு மண்போடுகிறேன். ஆனுல் எனக்குப் பசி அதிகம். ஒரு கூடை போட்டால், உடனே ஓடி வருவேன்."

“ இந்தா...... ”

“ இப்ப வேண்டாம் ஆச்சி. போட்டுவிட்டு வருகிறேன்...... ”

ஈசன் மறுபடியும் வெள்ளத்தில் முக்குளித்து விளையாடினான். கரையேறினான். மறுபடியும் தண்ணீரில் குதிக்க ஆசை. ஆனால் பிட்டு ருசி நாக்கைச் சுழற்றியது. ஒரு கூடை மண் எடுத்துப் போட்டான்.

பாதிவெள்ளம் படக்கென்று வற்றியது. ஆனால், ஜலம் மனித வெள்ளம் இட்ட மண் கரைமேல் மோதிக் தத்தி அலம்பி வழிந்து கொண்டிருந்தது.

“ ஆச்சீ, ஒரு கூடை போட்டுவிட்டேன். பசிக்கிறது, புட்டுப் போடு. ”

“ பேரப்பிள்ளை, தெய்வமேதான் உன்னை இங்கே அனுப்பியிருக்கு. நீயும் அதிட்டக்காரன்தான். நீ போனதுலே இருந்து எடுக்கிற புட்டு எல்லாம் உதுந்துதான் போகுது. இதோ பார், எத்தனை பேர் காத்து உட்கார்ந்திருக்கிறார்கள். ”

“ அது கெடக்கட்டும். இந்த முந்தித் துணியிலே புட்டெப் போடு. நேரமாச்சு. மண்ணைப் போட்டுக் கரையை அடைக்க வேண்டாமா?”

“ ஆமாம், ஆமாம். நேரமும் விடியலாச்சு. ராசா வந்தா......”

“ ஆமாம், ஆமாம். ”

ஈசன் ஒரே அமுக்கில் பிட்டை விழுங்கிவிட்டான். என்ன ருசி! பேரின்பம்! ஒரே ஓட்டமாக ஓடி, கூடையை விட்டெறிந்துவிட்டு, வெள்ளத்தில் குதித்து விளையாடினான்.

அசுரப் பசிபோலச் சுழித்தோடும் வெள்ளத்தில் மீன்போலப் புரண்டு, முழுகி முக்குளித்து விளையாடினான். வெள்ளத்தில் படம் விரித்துச் சீறிக்கொண்டு நீந்திச் செல்லும் நாக சர்ப்பம் மாதிரி எதிர்த்து நீந்துவான். ஆனந்த வெள்ளத்தில் மிதக்கும் யோகியைப் போலச் சுகாசனமிட்டு வெள்ளத்தின் போக்கில் மிதந்து வருவான். திரும்பவும் வாலடித்துத் திரும்பும் முதலையைப் போலக் கரை நோக்கி வருவான். பிறகு மீன் கொத்திப் புள் மாதிரி கைகளைத் தலைக்கு மேல் வீசிக் கோபுரம் போலக் குவிய நீட்டிக்கொண்டு உயரப் பாய்ந்து தலைகுப்புற ஜலத்தைக் கிழித்துக்கொண்டு மறைந்து விடுவான். ஜனங்கள் செத்தானோ என்று பயப்படும்போது மறு கரையில் தலை தெரியும். பிறகு சீறிவரும் பாம்பு மாதிரி நீந்தித் திரும்புவான்.

வெளிச்சம் வர ஆரம்பித்தது. வெள்ளத்தின் பீதி குறைய, ஜனங்களும் கரைகளில் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

சூரியனுடைய முதல் கிரணங்கள் வெள்ளத்தின் நுரைகளில் வான வில்லிட்டன. அரிமர்த்தன பாண்டியனுடைய மணிமுடிமீதும் பட்டத்து யானையின் வைரமிழைத்த முக படாம் மீதும் பட்டுத் தெறித்து மின்னி விளையாடின.

அரசன் கரையோரமாகப் பட்டத்து யானைமேல், ஜனங்களிட்ட கரையைப் பார்த்துக் கொண்டு, கணக்கர்கள் கணக்கு ஒப்பிக்க வந்து கொண்டிருந்தான். தூரத்திலே அவன் கண்ணில் ஒரு பகுதி மட்டும் உடைத்துக்கொண்டு வெள்ளம் பாய்வது தெரிந்தது. மீசை துடிக்க அந்த இடத்துக்கு யானையை விரட்டி ஓட்டும்படி சொல்லுகிறான். பாகன் அங்குசத்தினால் குத்துக் குத்தி, செவியின் புறத்தில் விரல்களால் இடிக்கிறான். அடுத்த கணம் யானை அந்த இடத்துக்கு வந்து நிற்கிறது.

அரிமர்த்தன பாண்டியன் தரையில் குதிக்கிறான்.

மேல்மூச்சு வாங்க ஓடிவந்த கணக்கர்கள், அவசர அவசரமாக ஏடுகளைப் புரட்டி, " பிட்டு வாணிச்சி பங்கு " என்கிறார்கள்.

கூடியிருந்த ஜனக் கும்பல், " தண்ணீரில் கும்மாளி போடுகிறவன் கடமை " என்கிறது.

அரசன் கைதட்டிச் சைகை செய்து கரைக்கு வரும்படி அழைக்கிறான்.

ஈசன் நாக சர்ப்பம்போலக் கரைக்கு நீந்தி வந்தான். கரையேறி ஈரம் சொட்டச் சொட்ட நிற்கிறான்.

கோபாவேசமாக, " ஏன் மண்ணைப்போடாமல் பொழுதைக் கழிக்கிறாய்? சோம்பேறி?" என்று கேட்கிறான் அரசன்.

ஈரச் சிகையை அண்ணாந்து உலுப்பிக்கொண்டு ஈசன் வாய்விட்டு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். கண்டத்தில் நனைந்த மறு, சூரிய ரேகை பட்டு மின்னியது. ஈசன் சிரித்தான்.

அரசன் கோபித்தான். கூட்டத்தை விலக்குவோர் வசம் இருந்த பொற்பிறம்பை வெடுக்கெனப் பிடுங்கி ஓங்கி ஓர் அடி கொடுத்தான். பொற்பிரம்பு ஈசன் முகத்திலும் நெஞ்சிலும் ரத்த விளிம்பு காட்டியது.

அரசன் சினம் அவியவில்லை. மீண்டும் ஓங்கினான்.

ஈசனது அசட்டுக் சிரிப்பு அதிகமாயிற்று. வெருண்டவன்போல ஜலத்தில் பாய்ந்தான்.

அரசன் சினம் அவிந்தது. ஈசனைக் காப்பாற்ற அவனைத் தாவி எட்டிப்பிடித்தான். ஈசனது முடிப்பிட்ட முந்தி கிழிந்து கையுடன்

வந்தது. ஈசன் ஜலத்தில் முக்குளித்து மறைந்துவிட்டான். அரசனும் தொடர்ந்து குதித்து மறைந்துவிட்டான்.

வெள்ளம் மடமடவென்று வற்றியது. நுங்கும் நுரையுமாகக் கொப்புளித்த பிரளயம் சர்வேசனது ஹிரண்ய கர்ப்பத்தில் ஒடுங்கியது.

ஈரச் சகதியிலே மன்னவன் அரிமர்த்தன பாண்டியனது சடலம் கிடந்தது.

உலராத சகதியிலே, முகத்தில் சிவந்த வடுவுடனும் சொல்லில் அடங்காத பொலிவுடனும் மன்னவன் பாண்டியனது சடலம் கிடந்தது.

மடங்கி இறுகப் பற்றிய கைக்குள், முன்றுனைக்குள் பந்தகமிட்ட ஓலை நறுக்கு ஒன்று இருந்தது.

ஈசனுக்குக் குதிரைகள் பெற்றுக் கொண்டதாக எழுதித் தந்த அந்த முறிச்சீட்டு.

## இடைவெட்டு

**இளம்பூரணர் :**

அவன் மண் சுமப்பவன் என்ருல் என்ன? நெஞ்சில் தைரியம் இருந்தால் தண்ணீரில் நீந்தக்கூடாதா? மதுரை நகரத்தில் எத்தனை வீரர்கள் உண்டு! அவர்கள் காலில் உள்ள வீரக் கழல்களின் ஓசை எவ்வளவு! அவ்வளவு பேரும் மண்ணை வெட்டித்தானே போட்டுக் கொண்டிருந்தார்கள்! அவன் ஒருத்தன்தானே தனக்குள் வெள்ளம் அடக்கம் என்பதுபோல அதன்மீது பாய்ந்து நீந்தினுன்? அவனை அடிக்கலாமா?

**அடியாக்கு நல்லார் :**

இருட்டில் இருந்த பயம் நமக்கு இப்பொழுது இல்லை. வெள்ளமும் வற்றிவிட்டது. வெள்ளத்தில் வரம்பு தெரிகிறது. அவன் எங்கே? அரிமர்த்தன பாண்டியன் எங்கே?

**சேனுவரையர் :**

பரிகள் எங்கேயோ, வெள்ளம் எங்கேயோ, வெள்ளத்தில் நீந்தியவன் எங்கேயோ அங்கே அரிமர்த்தன பாண்டியன்.

# 4. அங்கயற்கண்ணி

மதுரைமூதூரின் கர்ப்பக்ருகத்திலே மணியூசலிலே கருங்குயில் ஒன்று உந்தி ஆடிக்கொண்டிருந்தது. விளக்கற்ற வெளிச்சத்திலே புலன்களுக்கு எட்டாத ஒளிப்பிரவாகத்திலே மணியூசல் விசையோடு ஆடியது. அளகச் சுருள் புலன் உணர்வு நுகரும் இருட்டுடன் இருட்டாகப் புரள, கால் விசைத்து உந்திச் சுழி குழிந்து அலைபோல உகள, கொங்கைகள் பூரித்து விம்மிக் குலுங்க, அன்னை, மணியூசல் ஆடினாள். ஆலவாய் ஈசன், அழகன் சொக்கன் வருகை நோக்கி மணியூசலாடினாள். தோள் துவள அவள் சங்கிலிகளைப் பற்றி அமர்ந்த பாவனை, சொக்கனை ஆரத்தழுவ அகங்காட்டும் செயல் போல அமைந்திருந்தது. அங்கயற்கண்ணியின் அதரத்திலே கீற்றேடிய புன்சிரிப்பு; மருங்கிலே துவட்சி; கண்ணிலே விளையாட்டு; நெஞ்சிலே நிறைவு. செல்வி மணியூசல் ஆடினாள். அண்ட பகிரண்டங்களையும் சகல சராசர பேதங்கள் யாவற்றையும் தன்னுள் அடக்கும் ஆலிலை வரிவிட்டுப் புரண்டு விளையாடியது.

அந்த ஒளியில், அந்த இருட்டில், அந்த நிறைவில் சொக்கன் வந்தான். முகத்திலே வடு. மார்பிலே வடு. நெஞ்சிலே நிறைவு. விளையாடச்சென்ற ஈசன் வீடு திரும்பினான். விளையாட்டின் பலன் ஏற்று ஈசன் வீடு திரும்பினான்.

அன்னை அகங்குழைய நெஞ்சம் பூரிக்க அண்ணலை நோக்கினாள். அந்தப் பார்வை அகிலத்தை இழுக்கும் சொக்கனை இழுத்தது. தானாக, தன்னில் ஓர் அம்சமாகப் பிரபஞ்சத்தைக் கொண்ட ஈசனது அகன்ற மார்பில் அன்னை துவண்டாள். மணியூசலிலே வேகமும் கனலும், வேட்கையற்ற வேட்கையும், இரண்டு நாகசர்ப்பங்கள் உயிர்ப் பாசத்தினால் பின்னிப் புரளுவதுபோல, ஏதோ ஒரு தோற்றந் தான் அந்த இருட்டில் தெரிந்தது. அன்னையின் நெஞ்சு சுரந்தது; ஈசனின் வேதனை அவிந்தது.

மணியூசல் விசை கொண்டு உயர்ந்து பொங்கியது. வாமபாகத்தில் தன்னில் ஓர் அம்சமாக அன்னையை அமர்த்தி, வலக்கரம் கொண்டு சங்கிலியைப் பற்றி விரல்கொண்டு ஊன்றி ஆடினான்.

பாதத்தினடியில் முயலகன் முதுகு சற்று வளைந்து கொடுத்தது. கொடுமை என்ற அவனது கோரப் பற்களிடையிலும் புன்சிரிப்பு என்ற எழில் நிலாப் பொங்கியது.

வாமபாகத்தமர்ந்த அன்னை இடக்கரம் ஒரு சங்கிலியைப் பற்றியது. அவளது பெருவிரல் ஈசனது பெருவிரலில் பின்னிப் பிணைந்து உந்தியது.

"அடித்ததற்குப் பலன் அரியணைக்குப் பதில் அரன்மடிபோலும்" என்றாள் அன்னை.

அவர்களது மடிமீது அரிமர்த்தன பாண்டியன் அமர்ந்திருந்தான், சிசுவைப் போல. கவலை இல்லை; எதுவும் இல்லை.

"வாதவூரன் நெஞ்சில் வெள்ளம் அடங்கவில்லை. வழிநடையும் துரந்தான்" என்றான் ஈசன்.

## பொற்பிரம்பு

ஈசன் முகத்தில் விழுந்தது பொற்பிரம்பின் அடி. அவனது மார்பில் விழுந்தது. அப்புறத்து அண்டத்தின் முகடுகளில் விழுந்தது. சுழலும் கிரகங்களின்மீது விழுந்தது. சூலுற்ற ஜீவ ராசிகள்மீது விழுந்தது. கருவூரில் அடைபட்ட உயிர்கள்மீது, மண்ணின்மீது, வானத்தின்மீது, மூன்று கவடாக முளைத்தெழுந்த தன் மீது, முன்றிலில் விளையாடிய சிசுவின்மீது, முறுவலித்த காதலியின்மீது, காதலின்மீது, கருத்தின்மீது, பொம்மையின்மீது, சத்தியத்தின்மீது, தருமத்தின்மீது, அந்த அடி விழுந்தது.

காலத்தின்மீது விழுந்தது. தர்மதேவனுடைய வாள்மீது விழுந்தது. சாவின்மீது, பிறப்பின்மீது, மாயையின்மீது, தோற்றத்தைக் கடந்தவன்மீது, வாதவூரன்மீது, வாதவூரன் வேதனையின்மீது, அவன் வழிபட்ட ஆசையின்மீது, அவனது பக்தியின்மீது அந்த அடி விழுந்தது.

# வாடாமல்லிகை

அவள் பெயர் ஸரஸு; ஒரு பிராமணப் பெண். பெயருக்குத் தகுந்ததுபோல் இருக்க வேண்டும் என்று நினைத்தோ என்னவோ பதினேழு வயதிற்குள்ளேயே சமூகம் அவளுக்கு வெள்ளைக் கலையை மனமுவந்து அளித்தது, அவள் கணவனுக்குக் காலனுடன் தோழமை ஏற்பட்டு விட்டதால். அதற்குச் சமூகம் என்ன செய்ய முடியும்?

ஸரஸு ஓர் உலாவும் கவிதை. இயற்கையின் பரிபூரணக் கிருபையில் மலரும் பருவம்; காட்டிலே ரோஜா யாருமின்றி உதிர்ந்தால் அதைப் பற்றிப் பிரமாதமாக யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் நந்தவனத்திலே, மனத்தின் களிப்பில் குலாவக்கூடிய இடத்திலே தனிமை என்ற விதி ஏற்பட்டால் அதைப் பற்றிப் பிரதவிக்காமல் முடியுமா? இயற்கையின் போக்கைத் தடைசெய்துகொண்டு அவள் தியாகம் செய்கிருள்; அவள் பரிசுத்தவதி என்று சமூகம் களித்துக்கொண்டு இருப்பது அதன் ரத்த வெறிதான். அவளுக்கு இந்தச் சமூகத்தில் உரிமையே கிடையாதா? அவள் நிலைமை என்ன? சாம்ராஜ்யப் பிரஜையின் நிலைதானு? சமூகம் என்ன செய்ய முடியும்? வேதம் சொல்லுகிறது. தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது என்று பேத்திக்கொண்டிருக்கும்......?

ஸரஸுவுக்கு இதெல்லாம் தெரியாது. அவள் ஒரு ஹிந்துப் பெண். வாயில்லாப் பூச்சி. பெற்றேரையும், புருஷனையும் முன்னேரையும் நம்பித்தான் உயிர் வாழ்ந்து வந்தாள். பெற்றேர் கலியாணம் செய்துவைத்தார்கள். புருஷன் வாழ்க்கையின் இன்பத்தைச் சற்று காண்பித்துவிட்டு, விடாய் தீருமுன் தண்ணீரைத் தட்டிப் பறித்தமாதிரி, எங்கோ மறைந்துவிட்டான். அவனை இந்த உலகத்தில் இனிக் காணமுடியாது. பிறகு......கண்டால்தான் என்ன? அது போகட்டும். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி வைத்துவிட்டுப்போன முன்னேர்கள் கணவன் சென்றவிடத்தில் இருக்கிருர்கள். ஸரஸு பெற்றேரைத் தட்டியது

கிடையாது. பிறகு, முன்னேர்களை எப்படி எதிர்க்க முடியும்? அவளும் பெண்தானே! அச்சம் என்பது அவளுக்கு அணிகலன் என்று சமூகம் சொல்லுகிறதே. பிறகு அவள் வேறு என்னவாக இருக்க முடியும்? அவள் 'உயர்தர'ப் படிப்புப் படித்த பெண்ணு? நாலு விஷயங்களைத் தானுக ஆராய்ச்சி செய்துகொள்ள அவளுக்குத் திறன் ஏது? இயற்கையின் தேவை கட்டுக்கடங்காமல் மீறி ஒரு மிருகத்தின் முரட்டுத் தைரியத்தைக் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால், அவளைச் சமூகம் தூற்றுவதற்குத் தயார்.

எந்த அமைப்பிலேயும் விதிவிலக்குகளான சிறுபான்மையோர் கஷ்டப்படத்தான் வேண்டுமென்று தத்துவம் பேசலாம். தத்துவம் நன்ருகத்தான் இருக்கிறது! ஸரஸுவின் உணர்ச்சிக்கு உரிமையில்லை—அவள் விதிவிலக்கு.

ஸரஸு எப்பொழுதும் மாடியின்மேல் காலை ஏழு மணிக்கே தலையை உலர்த்த வருவாள். அப்பொழுதே ஸ்நானமாகிவிடும். பெற்ருேரின் பாசம், அவளைச் சமணமுனி மாதிரி, பெண்மையின் கோரமாக்கத் துணியவில்லை. அதை எடுத்திருந்தாலும் அவள் கவலைப்பட்டிருக்க மாட்டாள். வாழ்க்கைக்கே வசதியில்லாமலிருக்கும்பொழுது சிகை போவதுதானு பிரமாதம்?

அவளைப் பார்த்தால் யாருக்கும் கண் கலங்கும். அவள் கண்களிலே நிரந்தரமான துயரம், போக்க வழியில்லாத துன்பம் குடிகொண்டிருக்கும். அவள் சிரிக்கத்தான் செய்கிருள். குதூகலமாகப் பேசத்தான் செய்கிருள். இவை யாவற்றிற்கும் பின் சோகந்தான் நிலவும்.

பிரம்மச்சாரியாக, உண்மையான பிரம்மச்சாரியாக நீ இருந்து பார்த்திருக்கிருயா? வேறு ஓர் உயர்ந்த இலட்சியம் உனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, உன்னை அப்படியே விழுங்கி விடாவிட்டால் பிரம்மச்சரியம் உன்னை மிருகமாக்கி உனது உள்ளத்தைப் பேயாகச் சிதற அடித்துவிடும். ஆனுல் கட்டாயத்தின் பேரில் இப்படிக் கன்னிகையாகக் காலங் கழிக்கவேண்டிய நிலைமையை என்ன சொல்லுவது?

அன்று ஸரஸுவின் தம்பி துரைசாமிக்குச் சாந்திக் கலியாணம். முதலிலே ஸரஸுக்குத் தாங்க முடியாத குதூகலம்—தங்கள் வீட்டில் விசேஷம் வருகிறது என்றுதான், தம்பியின்மீது இருந்த ஒரு ஹிந்துத் தமக்கையின் அளவுகடந்த பாசத்தினுல்.

அன்று பகல் வந்தது.........

அன்று இரவு வந்தது. ஊரில் இருள். வீட்டில் ஒளி.

வீட்டில் ஒளி; ஸரஸுவின் உள்ளத்தில்?—

அவளுக்கு என்னென்னவோ நினைவுகளெல்லாம் குவிந்தன. அப்படித்தானே மூன்று வருஷங்களுக்குமுன் முதல் முதலாக அவருக்கு......என்னென்னவோ தோன்றின. நேரமாக நேரமாக, அவள் மனத்தில் அந்த மூன்று வருஷங்களுக்கு முந்திய சந்தோஷகரமான, வாழ்க்கையை ஓர் இன்ப ஒளியாக்க முயன்ற அந்த இரவின், ஒவ்வொரு சிறு சம்பவமும்......அவர் முதலில் என்ன கூச்சப்பட்டார்! பிறகு அந்த உரிமை என்ற தைரியம்தானே......இவ்வளவு சீக்கிரம் அவள் வாழ்க்கை இருட்டிவிடும் என்று அப்பொழுது கண்டாளா? என்னவோ சாசுவதமான அழியாத நித்திய வஸ்துவென்றல்லவோ—

துரைசாமியையும் அவன் மனைவியையும் அழைத்துக்கொண்டு சென்றனர். கூச்சலும் அமளியும் அவளுக்குப் பொறுக்க முடியவில்லை.

தன்னை மீறிய கட்டுக்கடங்காத ஓர் ஆவேசம் அவளைப் பிடர் பிடித்துத் தள்ளியது. பின்புறம் புழக்கடைக்குச் சென்றுவிட்டாள்.

நானும் பின்தொடர்ந்தேன். அவள் நிலைமை எனக்கு ஒருவாறு தெரிந்தது. அவள்மீதும் ஒரு பரிதாபம். அதனால்......

புழக்கடையில் ஒரு பெண் தேம்பிக்கொண்டு இருந்த சப்தம் கேட்டது.

நெருங்கினேன், அவள்தான்!

"ஸரஸு......!"

பதில் இல்லை.

இன்னும் நெருங்கித் தோளில் கையை வைத்தேன். உணர்ச்சியற்ற கட்டைபோல் இருந்தாள்—உடல் தேம்புவதினால் குலுங்கியது.

"ஸரஸு! நான் இருக்கிறேன், பயப்படாதே" என்றேன்.

"நான் ஒரு ஹிந்துப் பெண்!" என்று கூறிவிட்டுச் சடக்கென்று உள்ளே சென்றுவிட்டாள்.

நான் திகைத்து நின்றேன். ஹிந்துப் பெண் என்றால் உயிர் வாழ உரிமையில்லையா?......

நான் எவ்வளவு நேரம் நின்றேனோ!

மறுபடியும் அவள் வந்தாள்.

"ஸரஸு! என்னை மன்னித்துவிடு. நான் கூறியது வேறு. நீ அர்த்தம் பண்ணிக்கொண்டது வேறு. நான் உன்னை மணம் செய்து கொள்கிறேன்!" என்றேன்.

"கொள்கைக்காக நீர் தியாகம் செய்துகொள்ள முயலுகிறீர்; அது

வேண்டாம்—மிஞ்சினல் நான் உமக்குப் போகக் கருவியாகத்தான், உமது தியாகத்தின் பலிபீடமாகத்தான் நீர் கருதுவீர். அது எனக்கு வேண்டாம். நான் காதலைக் கேட்கவில்லை. தியாகத்தைக் கேட்க வில்லை. நான் தேடுவது பாசம்......"

"அது என்னிடம் இருக்கிறது" என்றேன். அவளிடம் இவ்வளவு எதிர்பார்க்கவில்லை.

"அப்படியானல் திருமணம் வேண்டாம்......பாசம் இருந்தால் போதும்" என்று சொல்லித் தலை குனிந்தாள்.

"என்ன ஸரஸு இப்படிச் சொல்லுகிருய்—இரகசியம் பாபம் அல்லவா ? கலியாணம் இதை நீக்கிவிடுமே !"

"எனக்கு உமது தியாகம் வேண்டாம். உமது பாசம் இருந்தால் போதும் !"

"நீ ஒரு பரத்தை !"

"உமது தியாகத்திற்கு நான் பலியாக மாட்டேன்—அதில் எப்பொழுதும் உமக்கு இந்தக் காலத்து நன்மதிப்பு ஏற்படும். தைரியசாலி என்பார்கள். அதை எதிர்பார்க்கிறீர். நான் பரத்தை யன்று—நான் ஒரு பெண். இயற்கையின் தேவையை நாடுகிறேன் !" என்ருள்.

எனது மனம் கலங்கிவிட்டது. வெளியேறினேன்......

மறுநாள் அவள் பிரேதம் கிணற்றில் மிதந்தது. அதன் மடியில், "நான் எதிர்பார்த்தபடியே" என்று எழுதிய ஒரு நனைந்த கடுதாசி இருந்தது.

# கருச் சிதைவு

டெலிபோன் மணி காதை அறுத்தது.

ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை பம்பாய் சர்க்கார் மின்சாரத்திட்ட அறிக்கையில் மூன்றாவது பக்கத்தில் நான்காவது பாராவை மொழி பெயர்த்து எழுதி, 'இருக்கிறது' என்று போட்டு முடித்தார்.

டெலிபோன் மணி விடவில்லை. காதை அறுத்துக்கொண்டிருந்தது.

மேஜையிலிருந்து எழுதின கடுதாசிகளைக் கம்போஸிங் ரூமுக்கு எடுத்துச் சென்றுகொண்டிருந்த வடிவேலு ஓடிவந்து, ரிஸீவரைக் காதில் எடுத்து வைத்துக்கொண்டு "ஹலோ! யாரது?" என்ற சந்தேக வார்த்தைகளைக் கக்கினான்.

"இந்த மகத்தான திட்டம் பம்பாய் மாகாண வாசிகளுக்கு மட்டுமல்லாமல்......" என்று எழுதியபடி மங்கிய டைப் கடுதாசிகளில் கண்ணைச் செருகிக்கொண்டிருந்த ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளை அவர்களிடம், "டெலிபோன், ஸார்!" என்றுகொண்டே ரிஸீவரைக் கையில் கொடுத்தான்.

பிள்ளையவர்கள் சாவதானமாகப் பேனாவை மேஜை மேல் வைத்தார். சொருகு பலகைமேல் சாய்த்து வைத்தெழுதிய அட்டையை மேஜை மேல் வைத்தார். ஒருபக்கமாகச் சாய்ந்து தமது ஜோல்னாப் பையைத் தேடிப் பிடித்து அதில் கைக்குட்டையைத் தேடி, அங்கில்லாமல் 'பேப்பர் வெய்ட்' அடியிலிருந்த அதை எடுத்து நெற்றியைத் துடைத்துக்கொண்டார். ஷர்ட் கைகளைத் தள்ளிவிட்டுக்கொண்டு, "என்ன டெலிபோனா?" என்று ரிஸீவரை வாங்கிக்கொண்டு, "யாரது? ஓஹோ நீங்களா? என்ன இரண்டு மூணுநாளா இந்தப் பக்கத்திலேயே காணலியே......அப்படியா? என்ன, கதையா? அதுக்கென்ன? இன்னிக்கு சாயங்காலமா? ரெடின்னு வச்சுக்குங்க!" என்று சொல்லிவிட்டு, பம்பாய் மாகாண மின்சாரத் திட்டத்தில் ஈடுபட்டார். மும்முரமாக ஈடுபட்டால் டைப் கடுதாசிகள் எத்தனை நேரந்தான் மேஜைமேல் நிற்க முடியும்? நேராகக் குப்பைக் கூடையில் ஐக்கியமாயின.

"வடிவேலு புருப்!" என்று காயதாப் பண்ணிவிட்டு, மேஜைக்குள் இருந்த வெற்றிலைச் செல்லத்தை,—வர்ணம்போன மசாலா டின்னுக்கு, அவர் செல்லமாக இட்டிருக்கும் பெயர்—எடுத்துச் சாவதானமாக வெற்றிலை போட ஆரம்பித்தார்.

அவருக்கு வெற்றிலை போடுவது வெறும் சம்பிரதாயமல்ல—மகாயக்ஞம்.

யந்திரம் எழுதி இந்த இந்தத் திக்கில் இன்னின்ன தேவதைகளை நிறுத்திவைக்க வேண்டும் என்றிருப்பது போல, அவருடைய செல்லத்தில் இன்னின்ன சரக்குகள் இன்னின்ன இடத்தில் இருக்க வேண்டும் என்பது நியதி; ஆனால் இருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. எப்பொழுதும் எல்லாம் இருக்காது என்பதைப் பொது விதியாகக் கொள்ளுவதால் ஸ்ரீ சுந்தரம் பிள்ளை தம்மைத் தவருக அர்த்தப்படுத்திக் கொண்டதாகக் கருதமாட்டார்.

தென்புலத்தில், அதாவது யமன் திசையில் சுண்ணும்பு மட்டிலும் எப்பொழுதும் இருக்கும்—காறைக்கட்டியாகவாவது, அதைச் சூரணமாகவோ அல்லது அவகாசமிருந்தால் மத்தித்து அதன் பூர்வாசிரமத்திற்கு அதைக் கொண்டு வந்தோ, வைத்துக்கொண்டபின், வெற்றிலையை ஒவ்வொன்ருக எடுத்து, காம்புகளைக் கீறிவிட்டுச் சுண்ணும்பைத் தடவுவார். பிறகு அதில் சீவல் பாக்கோ அல்லது அது இருந்த இடத்தில் கிடக்கும் தூசு தும்பட்டமோ, அதைச் சுமை எற்றிப் பொட்டலமாக மடித்து ஒரே கவளமாகப் போட்டுக் கொள்ளுவார்.

பிறகு புகையிலை தேடு படலம். சாதாரணமாக அது அருகில் இருக்கும் நண்பருடைய பிரதேசத்தில் ஆக்ரமிப்பாகவே இருக்கும். வாய்மொழியாக 'புகையிலை யிருக்கிறதா?' என்று மரியாதைக்கு எச்சரித்துவிட்டு, பொட்டலத்தை எடுத்துக்கொண்டு வந்து மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்தபின், புகையிலை சுற்றியிருந்த கடுதாசியை மட்டும் எறிந்துவிட்டு, மீதியை ஒரு தடவைக்கு உபயோகித்துவிடுவார்.

இது அவர் பொதுவாக அனுஷ்டிக்கும் விதி.

அன்று அவர் தமது சகபாடியின் மேஜைக்கு அருகில் சென்ற பொழுது அவரும் அதே விருத்தியில் ஈடுபட்டிருந்தார்.

"என்னப்பா வந்துட்டியா, எங்கிட்ட ஒரு தரத்துக்குத்தான் இருக்கும்!" என்று அங்கலாய்த்தார் அவருடைய நண்பர். புகையிலையை வாயில் ஒதுக்கிக்கொள்ளும் வரை பிள்ளை அதைக் கேட்கவில்லை.

"என்ன, இல்லையா? நான் வாங்கிக் கொண்டுவரச் சொல்லுகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே தம் மேஜைக்கு வந்தவர், ஒரு புஸ்தகத்திற்குள் ஐக்கியமானார்.

"ஸார், கொஞ்சம் புரூப் பார்த்துக் கொடுங்கோ! பேஜ் போடணுமாம்!" என்று குழைந்தான் வடிவேலு. அவனுடைய குழைவுக்கு மரியாதை என்று அர்த்தம்.

"புரூப் எங்கே? கொண்டுவந்தால்தானே!" என்று புஸ்தகத்தின் மீதுள்ள கவர்ச்சியால் சீறினார் பிள்ளை.

"அப்பவே கொண்டுவந்து வச்சுட்டேன்" என்று சொல்லிக் கொண்டே எடுத்துக் கையில் கொடுத்தான் வடிவேலு.

பிள்ளைவாள் அவசரத்தில் 'காலி' 'காலி' யாகத் தாவி, மெய்யெழுத்துக்களையும் ஒற்றுக்களையும் கார்வார் செய்து, கையெழுத்திட்டு வடிவேலு கையில் ஒப்பபடைத்துவிட்டு, மறுபடியும் புஸ்தகத்தில் சரணாகதி யடைந்தார்.

மணியும் மூன்றாயிற்று. மறுபடியும் டெலிபோன் மணி யடித்தது.

"ஹலோ! யாரது?......நீங்கள்தானா? இன்னும் ஒரு மணி நேரத்தில் பையனை அனுப்புங்கோ......எத்தனை பக்கம்? நாலு பக்கமா? வரும் வரும்...... லெடவுட் பண்ணிடுங்கோ......அப்பன்னா நானே கையிலே எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்; பையன் புறப்பட்டு விட்டானா? அப்படின்னா இங்கியே இருக்கேன்" என்று சொல்லி விட்டுப் பேனாவையும் கடுதாசியையும் எடுத்தார்.

பேனாவைத் திறந்து வைத்துக்கொண்டு வெள்ளைக் கடுதாசியைப் பார்த்தபடியே பேனாவை எழுதும் பாவனையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தார்.

சரிப்படவில்லை. மேஜையின்மீது அட்டையையும் பேனாவையும் வைத்துவிட்டுக் கைகளைச் சுடக்குவிட்டார். பிறகு சாவதானமாகக் கொட்டாவி விட்டார்.

மேஜையிலிருந்த பேனாவும் அட்டையும் கையிலேறிவிட்டு, மறுபடியும் புறப்பட்ட இடத்திற்கே போய்ச் சேர்ந்தன.

மேஜையின் சொருகை உருவித் திறந்து நிதானமாக வெற்றிலை மடித்துப் போட்டுக்கொண்டார் ஸ்ரீ பிள்ளை.

புகையிலைக் கட்டத்திற்கு வரும்பொழுது சுறுசுறுப்புத் தட்டியது. மேஜையிலிருந்த எழுத்துச் சாதனங்கள் கையிலிறங்கின.

"ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தான்......" என்று எழுதி விட்டுப் பேனாவை மூடி மேஜைமீது வைத்துவிட்டார்.

சிறிது நேரம் பேந்தப் பேந்தச் சுற்றுமுற்றும் பார்த்து விழித்துக் கொண்டிருந்தார்.

அப்புறம் சில நிமிஷங்கள் கழித்து...... "அவன் ஒரு கதைப் பைத்தியம். சண்டைக்கு வந்த எதிராளி ராஜாவிடம், "உனக்குக் கதை சொல்லத் தெரியுமா?" என்று ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்பிக் கேட்டுவிட்டானும்......"

சுந்தரம் பிள்ளை, மேஜையில் பேனு முதலிய சில்லறைத் தொந்தரவுகளை வைத்துவிட்டு வெளியே வராந்தாவிற்குச் சென்று வெற்றிலையைத் துப்பிவிட்டு வாயைக் கொப்பளித்தார். ஒரு டம்ளர் ஜலம் குடித்துவிட்டு வந்து உட்கார்ந்துகொண்டு மறுபடியும் பேனுவை எடுத்தார்.

"......அவனுடைய மந்திரிக்குக் கதை என்றுலே பிடிக்காது. கதை கேட்பதால் தன்னுடைய ராஜ்யத்தின் மீதிருந்த ஆதிபத்திய உரிமையை இழந்து வெறும் சிற்றரசனுகப்போன ராஜாவுக்குப் புத்தி சொல்லிக்கொடுக்க ஒரு யோசனை செய்தான் மந்திரி.

"சர்க்கார் சம்பிரதாயப்படி அதற்கு ஒரு திட்டம் வகுக்க ஒரு விசேஷக் கமிட்டி ஏற்படுத்துவது என்று முடிவு கட்டப்பட்டது......"

மறுபடியும் பேனுவை மூடி வைத்துவிட்டு, மோட்டு வளையைப் பார்த்து யோசனையிலாழ்ந்தார் ஸ்ரீ பிள்ளை.

"......இந்த விசேஷக் கமிட்டிக்கு பிரிட்டனிலிருந்து சட்ட அநுபவம் வாய்ந்த ஒரு நிபுணரையும், கதாசாஸ்திரத்தில் பாண்டித்தியம் பெற்ற ஒரு பிரபலஸ்தரையும், பிரிட்டிஷ் ராயல் வைத்திய சங்கத்தைச் சேர்ந்த ஒரு வைத்திய நிபுணரையும் தருவிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது."

"இந்த விசேஷச் செலவுக்கு சமஸ்தான கஜானுவில் போதுமான பணம் இல்லாததினுல், ஒரு புதிய வரி போடுவதா, அல்லது ஒரு கடன் பத்திரம் பிரசுரிப்பதா என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது."

"அதற்குள் இந்தச் சமாசாரம் பெரிய ராஜாவுக்குத் தெரிந்துவிட, இவ்வித முயற்சிகள் செய்யச் சிற்றரசருக்கு சன்னதின் ஷரத்தின் படி உரிமை கிடையாது என்று ஓலை அனுப்பினுன்."

"நாலுவிதமாகவும் யோசித்துவிட்டு இந்த யோசனைகளை அப்படியே ஒதுக்கிவிடுவதுதான் நன்மை என்று மந்திரி நினைக்கலானுன்."

"மந்திரியின் நினைப்பு காரியாம்சத்திற்கு வருமுன் ராஜாவுக்கு சஷ்டிஅப்தபூர்த்தி விழா வந்துவிட்டது. பெரிய ராஜா இந்தச் சிற்றரசனுக்கு வெகுமதியாக ஒரு பெரிய கதைப் புஸ்தகத்தை

அனுப்பினுன். அது ஒரு லக்ஷத்திச் செல்வானம் பக்கங்கள் கொண்டது.''

"புஸ்தகத்தைக் கண்டதும் அதைப் பூராவும் படித்து முடிப்ப தற்குத் தமக்கு ஆயுசு இருக்குமோ என்று நினைத்து, சிற்றரசன் சிம்மாசனத்திலிருந்து கொண்டே கண்ணீர் விட்டான்.''

"மந்திரி பிரதானிகளும் பிரஜைகளும் ராஜாவைத் தனியாக அழ விட்டுவிடுவதா என்று நினைத்து அனுதாபம் காட்டி கூட அழுதார்கள்.''

"இந்தச் சமயத்தில் பிரதம மந்திரிக்கு அழுகை வரவில்லை. நெடு மரம்போல நின்முன்......''

"நெடுமரம் போல நி......'' என்று மறுபடியும் அடித்துவிட்டு எழுதினுர் சுந்தரம் பிள்ளை.

கதை தானுகவே, தன்னிஷ்டம் போலவே, பின்னிக்கொண்டு போவதைக் கண்டு பயந்துபோன சுந்தரம் பிள்ளை, இந்த நெடுமரம் என்ற மதில் சுவர் வந்ததும் நிம்மதியுடன் பெருமூச்செறிந்தார்.

கதை—வண்டியைத் தமக்குப் புரியும் வழியில் திருப்புவதற்காக, அந்த அழாத பிரதம மந்திரியைச் சிரச்சேதம் செய்தார்.

அந்த வேலை முடிந்தபின் கதைக்கு உயிர் சந்தேகமின்றி அகன்று விட்டது என்பதை நாடி பிடித்துப் பார்த்தவர்போல நிச்சயப்படுத் திக்கொண்டு, அவனை உயிர்ப்பிக்கப் பரமசிவனைக் கூப்பிடலாமா, அல்லது வெறும் மந்திரவாதியைத் தருவித்து அவனுக்கு ராஜா மகளைக் கட்டிக்கொடுத்துக் கதையை மேளதாளத்துடன் மங்களமாக முடித்துவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கையில், "என்ன ஸார், முடிந்து விட்டதா?'' என்றுகொண்டே நுழைந்தார் சுந்தரம் பிள்ளையிடம் கதை கேட்ட ஆசிரியர்.

"பையனை அனுப்புகிறேன் என்றீர்களே'' என்று சொல்லி எழுந்தார் ஸ்ரீ பிள்ளை.

"பையனிடம் கடுதாசி அனுப்பிவிட்டால் என்றுதான்......'' என்று சிந்தித்துக்கொண்டே மேஜையிலிருந்த கடுதாசிகளை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார் ஆசிரிய நண்பர்.

"இதுதானு நாலு பக்கம்?—போஸ்டர் எழுத்தில் போட்டாக்கூட நாலு பக்கம் வருமோ என்னமோ? இதற்கு என்ன அர்த்தம்?'' என்முர்.

"நீர்தான் சொல்லுமே!''

"சரி வாருங்க, காபி சாப்பிட்டு வரலாம்!'' என்முர் நண்பர்.

“வருவது எதற்கு, நேரா வீட்டுக்குப் போவோமே?” என்றார் சுந்தரம் பிள்ளை.

“அங்கே போனால் எழுதுவீரா?” என்றார் நண்பர்.

“போன பிறகு பார்த்துக் கொள்ளலாம், நீங்க எழுந்திருங்க!” என்று கொண்டு மேஜையை எடுத்துப் பூட்ட ஆரம்பித்தார் பிள்ளை.

துண்டை எடுத்து உதறி மேலே போட்டுக்கொண்டு புறப்பட்டார் நண்பர்.

“கொஞ்சம் இருங்க, வெற்றிலை போட்டுக்கொண்டு வருகிறேன்” என்று உட்கார்ந்து கொண்டார் ஸ்ரீ பிள்ளை.

வெற்றிலை போட்டு முடிந்தது.

“ஸார், ஒரு நிமிஷம்!” என்று சொல்லிக் கடைசி வரியை எழுதினார், பிள்ளை.

“தான் படித்த அத்தனை கதைகளையும் படிக்க வேண்டும் என்று ராஜா அந்த மந்திரிக்குத் தண்டனை அளித்தான்.” என்று எழுதி, “இப்படி முடித்து விடலாமா” என்றார்.

“எப்படியாவது முடிந்தால் போதும்; என்னிடம் குப்பைக் கூடை இருக்கிறதை மறந்து விட்டீரா?” என்றார் நண்பர்.

“அது என்னிடமே இருக்கிறதே!” என்று சொன்னார் பிள்ளை.

ராஜாவும் மந்திரி பிரதானிகளும், இங்கிலீஷில் கசங்கும் மாகாண மின்சாரத் திட்டத்துடன் கிடந்து நசுங்கினர்.

# ஒருநாள் கழிந்தது

"கமலம், அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே? வச்சது வச்ச இடத்திலேயே இருந்தால்தானே?" என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாத தால், அது நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக்கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால், முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலைபெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க, ஒரு துண்டையோ, அல்லது மனைவியின் புடவையையோ, அல்லது குழந்தையின் பாவாடை யையோ, எதையாவது எடுத்து மேலே விரிக்க வேண்டும்.

முருகதாசரைப் பொறுத்தவரை—அது அவரது புனைபெயர்—அது இரண்டுபேர் செய்யவேண்டிய காரியம்.

மறுபடியும், "கமலா!" என்று கூப்பிட்டார்.

சமையல்+உக்ராண+ஸ்நான அறை, மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால், இவருடைய பாய் விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை.

சென்னையில் 'ஒட்டுக் குடித்தனம்' என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன், குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும் 'திருக்கழுக்குன்றத்துக் கழுகு' என்று நினைத்துக் கொள்ளுவாரோ என்னமோ!

'குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி' என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித்தான் முருகதாசர் வீடு—வேட்டை யின்போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப் புறம், எங்கோ பல கட்டுகள் தாண்டி, மற்றொரு அறை. அதுதான்

சமயல் வகையராவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலுபேர் வந்தால் பேச—இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். முதலில், முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே, அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனுல், தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை; மேலும் அவர், யோசிக்கக்கூடிய வரும் அல்லர்.

பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு, அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானுர்.

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப்பிரதேசம், அடுத்த பகுதிக்காரர் விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வேயை' எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகை மயம். 'கமலம்!' என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக் கொண்டு, உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, "வீடோ லட்சணமோ' விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக்கொண்டு வந்தியளே! ஒங்களுக்கிண்ணு தண்ணீலே முக்கிக் குடுத்தாரு? எரியவே மாட்டுதில்லே! இங்கே என்ன இப்பொ? விறகு வாங்கின சீரைப் பாத்து மகிழ வந்திட்டியளாக்கும்!" என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

"தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!" என்று நடைப்பக்கமாகப் பின்நோக்கி நடந்தார்.

"இங்கே குச்சியுமில்லே, கிச்சியுமில்லே! அலமுவெத் தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன். மண்ணெண்ணெய் விளக்கெ நீங்கதான் துடைச்சுக்கொள்ளணும்!" என்ருள் கமலம்.

"குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச்சையே, நான் வந்த பிறகு வாங்கிக்கொள்ளப்படாதா" என்று அதட்டினுர் முருகதாசர்.

"ஆமாம், சொல்ல மறந்தே போயிட்டுதே......செட்டியார் வந்து விட்டுப் போனுர்; நாளை விடியன்னை வருவாராம்!" என்ருள் கமலா.

முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை.

"வந்தா, வெறுங் கையை வீசிகிட்டுப் போகவேண்டியதுதான்! வர்றதுக்கு நேரம் காலம் இல்லை?" என்று முணுமுணுத்துக்கொண்டே வெளியேற முயற்சித்தார்.

"அங்கே, எங்கே போயிட்டிஹ, ஒங்களைத்தானே! கொஞ்சம் நல்லெண்ணை வாங்கிக்கிட்டு வாருங்களேன்!"

"எங்கிட்ட இப்பொ துட்டுமில்லெ, காசுமில்லே!" என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

"அதுவும் அப்படியா! இன்னு இந்த மிளவொட்டியிலே மூணு துட்டு இருக்கு; அதை எடுத்துக்கிட்டுப் போங்க!

"வந்ததுக்கு ஒரு வேலையா? அங்கே ஒருபாடு எழுதித் தொலைக்கணும்; இங்கே உனக்கு இப்பதான் எண்ணெ புண்ணுக்கு—பகலெல்லாம் என்ன செய்திக்கிட்டு இருந்தே? இருட்னப்பொறவா எண்ணெ வாங்றது! எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கலாம்!"

"சோம்பல் வந்தா சாத்திரமும் வரும், எல்லாம் வரும். ஏன், அண்ணைக்குப்போய் வாங்கிட்டு வரலியா—எல்லாம் ஒங்களுக்குத் தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்துவிட்டுப் போறான்; பிரியமா சாப்பிடுவேளென்று சொன்னேன். பின்னே அந்தச் சின்னக் கொரங்கே என்ன இன்னும் காணலே! போறுப் போனதுதான்; நீங்கதான் சித்தப் பாருங்களேன்!"

இவ்வளவிற்கும் அவர் இருந்தால்தானே! விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டிவிட்டார். புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்றாகிவிட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையில் ஒரு விசித்திரம் என்னவென்றால், சென்னை யில் 'லைட்டிங் டைம்' அட்டவணையைக்கூட மதிக்காமல், அது இருண்டுவிடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில், அந்த அறைக்குத்தான் முதலில் இராத்திரி. ஆனால், எண்ணெய் நெருக்கடிக் காலங்களில் சிவபிரானின் ஒற்றைக் கண் போன்ற அந்த அறையின் சன்னல் எதிர்ப்பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்தி லிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும், கார்ப்போ ரேஷன் தயவு வரும்வரை, ஸ்ரீ முருகதாசர், வேறு வழியில்லாமல், தெருநடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாற்று.

முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமர்த்தர்; 'சாகா வரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தை யளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டது. அதனால் அவர், வீர புருஷர்களை யும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டுவிட்டு, சோயாபீன்ஸ் முதல், மெழுகுவர்த்தி வரையிலும், வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை

இயற்றிக் கொண்டிருக்கிறார். 'டபாஸா' வீரிய மாத்திரையின்மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுயசரிதையும், அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக்காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்துவிட்டன. அதற்காகத்தான் அந்த முப்பது ரூபாய்.

வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக் கொண்டும் பிள்ளையவர்களால் அலமுவைக் கண்டுபிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம்—எல்லாம் அவரது மனத்தில் கவலையைக் கொண்டு கொட்டின. நடையிலிருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலைவரை சென்று பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை, அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்து பவர். பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனாகிவிட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றுமில்லை. கவலையில்லாமல் ஏதோ சாப்பிட்டோம், வேலை பார்த்தோம், வந்தோம் என்று இருக்கவேண்டும் என்பதற் காக, எத்தனையோ வித்தைகளை யெல்லாம் செய்துவிட்டார். அவருடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தை மட்டிலும், அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை. நிதிமந்திரியாக இருந்தால், பட்ஜட்டில் துண்டுவிழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம். கவலையில்லாமல், கொஞ்சம் உடம்பில் பிடிக்காமல், கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச் செலவு என்றால், சர்க்கார் செலவாகுமா?

கவலை இருக்கப்படாது என்ற உறுதியின்பேரில்தான் நம்பிக்கை என்ற இலட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகா வரம் பெற்ற' கதைகளை எழுதுவதைக் கொஞ்சம் கட்டிவைத்துவிட்டு, இந்த 'லிப்டன் தேயிலை', காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான் மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால், அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாகவே மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கைக் காலத்தில், ஏதோ நினைத்த தைக் கிறுக்கிவைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபீசில் வேலை. ஆனால், இப்பொழுது

காசு கொடுத்து வாங்கா விட்டால் முதுகில்தான் எழுதிக்கொள்ள வேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி; அதனால்தான் முதுகில் எழுதிக்கொள்ளவில்லை. யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும்; தமது தூர இலட்சியத்தைப்பற்றி அவரிடம் ஐந்து நிமிஷமாவது பேசாமல் அவரை விடமாட்டார். நண்பர்கள் எஸ்.பி.ஸி.ஏ. (ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்) யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையையும் சகித்துக் கொண்டிருப்பார்கள்...

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது.

"ஏட்டி, என்ன! நீயோ உன் லட்சனமோ!" என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி. ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெலி மாதிரி, ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது போலும்!

"ஏட்டி!" என்றார் முருகதாசர் மறுபடியும்.

"இல்லையப்பா! நீ இனிமெ என்னை அலமுன்னு கூப்டு வேன்னியே!" என்று சொல்லிக்கொண்டே, வண்டியிலிருந்து இறங்கப் பிரம்மப் பிரத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

"தீப்பெட்டி எங்கட்டீ?" என்றார் முருகதாசர்.

"கடைக்காரன் குடுக்கமாட்டேங்கறான், அப்பா!"

"குடுக்காதெ போனா நேரெ வீட்டுக்கு வாரது! இங்கே என்ன இருப்பு?"

"அப்படிக் கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமே சொல்லிப் பார்த்தேனுங்க. வீட்டுக்கு வண்டியிலே கொண்டாந்து வுடனுமுன்னு மொண்டி பண்ணுதுங்க. எனக்குக் காலுலே சுளுக்கு அந்தச் சின்னம்பயலே காணும்...." என்று நீட்டிக் கொண்டே போனான் ரிக்ஷாக்காரன்.

"அப்பா, அவன் பங்கஜத்தெ மாத்திரம் கூட்டிக்கிட்டே போறானே" என்றாள் அலமு. பங்கஜம் எதிர்வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும்! மோட்டாரிலும் போகும். அந்த விஷயம் ரிக்ஷா வுக்குத்தான் புரியுமா, குழந்தைக்குத்தான் புரியுமா?

"அலமு! ராத்திரிலெ கொழந்தைகள் ரிக்ஷாவிலெ போகப் படாதுட்டீ! எறங்கி வா!" என்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு, வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டு முன்பே, கடைக்காரன் "சாமி! இந்தமாதிரி யிருந்தாக் கட்டுமா? போனமாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்துடுங்க! எனக்குக் குடுத்துக் கட்டாது. நான் பொழைக்க வந்தவன்!" என்றான்.

"நானும் பிழைக்க வந்தவன்தான். எல்லாரும் சாகவா வருகிறார்கள்! மின்னெ பின்னெதான் இருக்கும். நான் என்ன கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறேனா?"

"போங்க சாமி அது ஒண்ணுதான் பாக்கி! ரூ. 2-5-4 ஆச்சு; எப்ப வரும்?"

"தீப்பெட்டியெக் குடு சொல்றேன்!"

"பெட்டிக்கென்ன பிரமாதம்! இந்தாருங்க. எப்ப வரும்?"

"எப்பவா? சம்பளம் நாளைக்குப் போட்ருவாங்கன்னு நினைக்கிறேன்! நாளை இல்லாவிட்டால் திங்கக்கிழமை."

"திங்கக்கிழமெ நிச்சயந்தானே? நான் சீட்டுக் கட்டணும்!" என்றான்.

"சரி பார்க்கிறேன்!" என்று திரும்பினார் தாசர்.

"பார்க்கிறேன்னு சொல்ல வேண்டாம். நிச்சயமாக வேண்டும்!"

ஒரு கவலை தீர்ந்தது... அதாவது திங்கட்கிழமை வரை.

பாதி வழியில் போகையில், "அப்பா!" என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக்கொண்டிருந்ததால், தன்னையறியாமல் கொஞ்சம் கடினமாக, "என்ன!" என்றார்.

"நீதான் கோவிச்சுக்கிறியே, அப்பா! நான் சொல்லமாட்டேன், போ!"

"கோவம் என்னட்டி, கோவம்! சும்மா சொல்லு!"

"அதோ பார், பல்லு மாமா!"

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை, வெளியே நீண்டு கொண்டு, தமது இருப்பை அனுவசியமாக உலகத்திற்கு அறிவித்துக்கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப் பெயர் அது.

"எங்கட்டி!"

"அதோ பார், வீட்டு நடேலே! என்னை எறக்கிவிடப்பா!" என்று, அவரது கையிலிருந்து வழுகி விடுவித்துக்கொண்டு, வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

"மெதுவா! மெதுவா!" என்றார் பிள்ளை! குழந்தையா கேட்கும்?

"மாட்டேன்!" என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம்.

பாவாடை தடுக்கியதோ என்னமோ, அலமு வலுக்கட்டாயமாக அங்கப் பிரதக்ஷணம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளையவர்கள் ஓடிப்போய்க் குழந்தையை வாரி எடுத்தார். ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப, அங்கு குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

"தோளுக்கு மேலே தொண்ணூறு. தொடச்சுப் பாத்தா ஒண்ணுமில்லே!" என்று பாடிக்கொண்டு குழந்தை எழுந்தது.

"என்ன ஸார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?" என்று சொல்லிக்கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

"என்ன ஸார், செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளியே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக்கொண்டு பின்னோடே பத்துப் பேர். இவளைக் கடைக் கனுப்பிச்சுட்டா தாயார். இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோடே தர்க்கம்—என்ன செய்கிறது! வாருங்கள் ஸார், உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்."

குழந்தை அலமு அதற்குள் வீட்டிற்குள், "பல்லு மாமா வந்து விட்டார்!" என்று மெதுவாக உச்சஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடிவிட்டாள்.

"குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக்கூடாதா" என்றார் நண்பர்.

"ஆமாம் ஸார், தொந்தரவு சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளணும். வயசு கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன்" என்றார் முருகதாசர், விளக்குத் திரியை உயர்த்திக்கொண்டே.

"நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பாாத்தேன்..." என்று ஆரம்பித்தார் சுப்பிரமணிய பிள்ளை.

"அந்த ராஸ்கல் வந்துட்டானா! என்றைக்கும் அவன் தொல்லை தான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபீஸுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடரது... மின்னே வந்தப்போ என்ன எழவு சொன்னானோ, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே, அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்..." என்று படபடவென்று பேசிக்கொண்டே போனார் முருகதாசர்.

"அப்படிப் பார்த்தா உலகத்திலேயே யார்தான் ஸார் நல்லவன்! அவன் உங்களைப்பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்துகொண்டிருக்கிறான்?"

"சவத்தெத் தள்ளுங்க, ஸார்! பேன் பார்த்தாலும் பார்க்கும்,

காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம் . . . நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள் ? ”

“ அதுதான், உங்களைப் பத்தித்தான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தான் . . . ”

“ இவ்வளவுதானு ! கதையை எழுதரேன், அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன், இவனுக்கென்ன . . . ? ”

அதே சமயத்தில் வெளியிலிருந்து, “ முருகதாஸ் ! முருகதாஸ் ! ” என்று யாரோ கூப்பிட்டார்கள்.

“ அதுதான் ! அவன்தான் வந்திருக்கிருன் போலிருக்கிறது ! பயலுக்கு நூறு வயசு . . . ”

“ சைத்தான், நினைக்குமுன்னுல் வந்து நிற்பான், என்பதுதான் ! ” என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி, “ யாரது?” என்ருர்.

“ என்ன ! நான்தான் சுந்தரம். இன்னும் என் குரல் தெரியவில்லையா ? ” என்று உரத்த குரலில், கடகடவென்று சிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

“ என்ன, சுந்தரமா ? வா ! வா ! இப்பொத்தான் உன்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நீயும் வந்தாய் ! காப்பி போடச் சொல்லட்டுமா ? அலமு ! அலமு ! ” என்று உரக்கக் கூவினுர் முருகதாசர்.

எங்கிருந்தோ, “ என்னப்பா ! ” என்று அலமுவின் குரல் வந்தது.

“ அம்மாவை மூணு கப் காப்பி போடச் சொல்லு. சீக்கிரம் ஆகணும் ! ”

“ நீ என்ன பத்திரிகையை விட்டுவிட்டாயாமே ! இப்பத்தான் கேள்விப்பட்டேன்.”

“ வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன ? சீலைப்பேன் குத்துகிறதும் ஒரு ‘ பிஸினஸ் ’ ஆக இருந்தது. அதில் ஒரு ‘ சான்ஸ் ’ கிடைத்தால், அதையும் விட்டா வைக்கிறது ? நான் பத்திரிகையை விட்டுவிட்டா, கதை எழுதாமல் இருந்துவிடுவேனு ? ஒரு பெரிய நாவலுக்குப் ‘ பிளான் ’ போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் ‘ சென்ட்ரல் ஐடியா ’ என்ன தெரியுமா ? . . . ”

“ நீங்க நேற்றுப் பொருட்காட்சிக்குப் போனீர்களாமே ? ” என்று பேச்சை மாற்ற முயன்ருர் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்

தைத் தொட்டுவிட்டால், முருகதாசர், கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி, விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்!

"அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!" என்று சொல்லிக்கொண்டு, நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்டவண்ணமாய், ஒற்றைக்காலை ஓட்டிக்கொண்டு நின்றாள் அலமு.

"அம்மா எங்கே?"

"அம்மா சாதத்தெ வடிச்சிக்கிட்டிருக்கா, அப்பா!"

"சரி! இதோ வாரேன், போ!"

"வாயேன்!"

"வர்ரேன்னு, போட்டீ உள்ளே!"

"காப்பி ஆறிப்போயிடும், அப்பா!"

"இதோ, ஒரு நிமிஷம்!" என்று சொல்லிக்கொண்டு, உள்ளே சென்றார்.

"மாமா! நீ என்ன கொண்டாந்தே?" என்று கேட்டுக்கொண்டு சுப்பிரமணிய பிள்ளை மடியில் உட்கார்ந்து கழுத்திலிருக்கும் நெக்டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

"அதெப் பிடித்து இழுக்காதே! மாமாவுக்கு கழுத்து வலிக்கும்!" என்றார் சுந்தரம் பிள்ளை.

"வலிக்காதே!" என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும், மேல் துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம், உள்ளே நுழைந்தார்.

"என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?"

"உனக்கென்னடீ இங்கே! அம்மாகூடப் போய்ச் சாப்பிடு."

"மாட்டேன்" என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக்கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார்.

சுந்தரம் வாங்கி மடக் மடக்கென்று மருந்து குடிப்பதுபோல் குடித்துவிட்டு, "காப்பி வெகு ஜோர்" என்று சர்டிபிகேட் கொடுத்தான்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது.

"மாமா! எனக்கில்லையா!" என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

“வாடி, நாம் ரெண்டுபேரும் சாப்பிடுவோம்” என்றார் முருகதாசர்.

“மாமாகூடத்தான்!” என்றது குழந்தை. சுப்பிரமணிய பிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.

பாதியானதும், “போதும்!” என்றது குழந்தை.

“இந்தாருங்க ஸார்!” என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

“வேண்டாம் வேண்டாம்! இதுவே போதும்!” என்றார் சுப்பிரமணிய பிள்ளை.

“நான்சென்ஸ்!” என்று சொல்லிவிட்டு, குழந்தை எச்சிற் படுத்தியதைத் தாம் வாங்கிக்கொண்டார் தாசர்.

“நேரமாகிறது, மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்கவேண்டும்!” என்று எழுந்தார் சுந்தரம். “அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக்கொண்டு போகலாம்!” என்றார் முருகதாசர்.

“கையில் எடுத்துக்கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்!” என்று சொல்லிக்கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன், தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக்கொண்டார் சுப்பிரமணிய பிள்ளை.

தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, “சுப்பிரமணியம், உங்களிடம் ஏதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!” என்றார் முருகதாசர்.

“ஏது அவசரம்?”

“சம்பளம் போடலே; இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது... திங்கட்கிழமை கொடுத்துவிடுகிறேன்!”

“அதற்கென்ன...?” பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு, “இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!” என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

“இது போதாதே!” என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக் கொண்டார் முருகதாசர்.

“அப்போ ...” என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

“பார்ப்போம்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது” என்று சுப்பிரமணியமும் விடைபெற்றுச் சென்றார்.

முருகதாசர், தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப்பாயில் உட்கார்ந்துகொண்டு, அந்த எட்டணாவைத்

திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"அங்கு என்ன செய்யறீங்க?" என்ற மனைவியின் குரல்.

"நீதான் இங்கே வாயேன்!"

கமலம் உள்ளே வந்து, "அப்பாடா" என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு, "இதேது?" என்றாள்.

"சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!"

"உங்களுக்கும்... வேலையில்லையா?" என்று முகத்தைச் சிணுங்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக்கொண்டு, "ஆமாம், இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடி இல்லை. அதெ வச்சு வாங்கிவாருங்களேன்!" என்றாள்.

"அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்துவிட்டால்?"

"திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!"

"அதற்கென்ன இப்பொழுது?"

"போய்ச் சீக்கிரம் வாங்கிவாருங்கள்!"

"திங்கட்கிழமைக்கு?"

"திங்கட்கிழமை பார்த்துக்கொள்ளுகிறது!"

# பொன்னகரம்

**பொ**ன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக்கொண்டு நியாயம் என்று சமாதானப் படவேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்'களுக்காக, இம்மையில் பயனைத்தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனிக்களுக்கு, உண்மையில் ஒரு பொன்-கரந்தான் அது.

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அதுதான் அங்கு 'மெயின்' ரஸ்தா. கைகோத்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம்-எதிரே வண்டிகள் வராவிட்டால். இதற்குக் கிளையாக உள்வளைவுகள் உண்டு. முயல் வளைவுகள்போல.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்கவேண்டுமானால், சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும்பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக முனிசிபல் கங்கை-அல்ல; யமுனை தானே கறுப்பாக இருக்கும்? அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி; அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வேத் தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக்—கூடுகள்—ஆமாம், வசிப்பதற்குத்தான்.

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை—சாதாரண எண்ணெய் விளக்கு. அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றிவைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்தியாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? 'போனால்' பெற்றோருக்குத்தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன 'கிளாஸ்கோ' 'மெல்லின்ஸ்பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போகமுடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று "குட்மார்னிங் சார்!" என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகலவென்று உயிர்பெற்று இருக்கும். அப்பொழுதிருந்து அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்க வரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்.

இளவயதில் நரைத்ததுபோல் பஞ்சு படிந்த தலை. மாசடைந்த கண்கள்—விடிய விடிய மின்சார 'ஸ்பின்டில்'ப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள் தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிரிமிகள். காலரா இத்தியாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான்; அவைகளும் அவனைக் கொன்றன; அவனும், அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமை அற்று, வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை. அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு—வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப்பற்றி அங்கு அதிகக் கவலை இல்லை. அது வேறு உலகம், ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்குமேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான். சொந்த வண்டிதான். அம்மாளு முருகேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை—ஆக நபர் ஐந்து சேர்ந்து அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு—(குதிரை உட்பட). வீட்டு வாடகை, போலீஸ்

'மாமுல்', முருகேசன் தம்பி திருட்டுத்தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு—எல்லாம் இதற்குள்தான். எல்லோரும் ஏகதேசக் குடியர்கள் தான். 'டல் ஸீசனில்' பசியை மறக்க வேறு வழி? பசி! ஏயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்து போம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே! அங்கு நீர் ஒருநாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி. அவனும், அவன் குதிரையும் 'தண்ணி' போட்டுவிட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டுவந்து போடும் பொழுது பேச்சுமூச்சில்லை. நல்லகாலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலிதெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினுள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்றுப் பேசினுன். அவனுக்குப் பால்—கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுக்குக் கூலி போட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிருள்.

'கும்'மிருட்டு, பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வர வேண்டும், ஆனுல் அது மேகத்தில் மறைந்து கொண்டால், முனுசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித் தாய்விட்டது. திரும்பி வருகிருள்.

சந்திரன் பக்கத்தில் ஒருவன்—அம்மாளுவின்மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிருர்கள். அம்மாளும் முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம். புருஷனுக்குப் பால்—கஞ்சி வார்க் கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!

# நினைவுப் பாதை

மேலச் செவல் வைரவன் பிள்ளை என்ற பாலசுப்பிரமணிய பிள்ளையின் மனைவி வள்ளியம்மை யாச்சி நேற்றுத்தான் இறந்துபோனாள். தம்பதிகள் இருவரும், ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்குமேல், வாழ்க்கையின் மேடுபள்ளங்களையெல்லாம் ஒன்றாகவே கடந்து வந்திருக்கின்றனர். வள்ளியம்மை யாச்சி இறந்துபோனாள். ஏதோ தெய்வ சங்கற்பம் அப்படி. இன்று காடேற்று (இரண்டாம் நாள் கிரியை). நீண்டநாள் வியாதி ஒன்றுமில்லை. போன சனிக்கிழமை புழக்கடையில் கால் வழுக்கி விழுந்தாள். இடுப்பிலும் விலாவிலும் ஊமையடி. அதில் படுத்தவள்தான், எழுந்திருக்கவேயில்லை.

வயதில் மூத்தவர் இறந்தால், அழுகைக்கும் ஓரத்திற்கும் குறைவில்லாவிட்டாலும், வருத்தமிருக்காது. பெண்கள் ரஸித்து அழுவார்கள்—வார்த்தைகள் முத்து முத்தாய்க் கோவையாக வந்து விழும். அத்துடன் ஓரிரண்டு துளி கண்ணீரும் கலந்திருக்கலாம். ஆனால் அது அழுகிறவர்களின் சொந்த அந்தரங்க வருத்தத்தைப் பற்றியதாகவே யிருக்கும்.

அன்று இன்னும் விடியவில்லை. விடிவெள்ளி எதிர்வீட்டுக் கூரைக்கு ஒரு முழ உயரத்தில் தொங்குவதுபோல் தெரிகிறது. வாசல் தெளிக்கும் சப்தங் கூடக் காலையின் வரவை எதிரேற்கவில்லை. ஏன், 'துஷ்டிக்காக' (இழவுக்காக) அழுகிறவர்கள் கூட எழுந்திருக்கவில்லை என்றால்......

வைரவன் பிள்ளை வளைவின் வெளிக் குறட்டில், கோரைப் பாயின் மீது முழங்காலைக் கட்டிக்கொண்டு ஓர் உருவம் உட்கார்ந்திருக்கிறது. வேறு யாருமில்லை, அவர்தான். அன்று அவ்வீட்டில் தூங்காதவர் அவர் ஒருவர்தான். முழங்காலைக் கட்டியபடி, மேலே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். குறிப்பாக எதன்மீதும் பார்வையை உபயோகிக்கவில்லை. வெளியே, வாசலில் விசிப் பலகையின்மேல் முழுதும் போர்த்த உடலங்கள், சமயா சமயங்களில் குறட்டை விட்டு, உயிர் இருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றன.

வைரவன் பிள்ளை மனது, அண்டசராசரங்கள் எல்லாவற்றையும்

பார்வையிட்டுவிட்டு, மறுபடியும் மறுபடியும் வள்ளியம்மை யாச்சியின் கிடத்தப்பட்ட கற்பனைப் பிரேதத்தின் மீது வந்து கவிகிறது......

ஏறக்குறைய இந்த ஐம்பது வருஷ காலத்தில் அவர் வள்ளியம்மை யாச்சியைப்பற்றி அவ்வளவாக—முதல் பிரசவத்தில் தவிர—பிரமாதமாக நினைத்தது கிடையாது. மனைவி என்பது நூதன வஸ்துவாக இருந்து, பழகிய பொருளாகி, உடலோடு ஒட்டின உறுப்பாகிவிட்டது. ஒவ்வொருவரும் தமக்கு ஐந்து விரல் இருப்பதை ஒவ்வொரு நிமிஷமும் நினைத்துக்கொண்டா இருக்கிறார்கள்? விரல் ஒன்று போனால் ஐந்தென்ற நினைப்புப் பிறக்கும். அப்பொழுது அவர் மனக்கண் முன் வள்ளியம்மை யாச்சி புதுப்பெண் கோலத்தில் தம் கைபிடித்து வந்த காட்சி நின்று தோன்றியது.

வைரவன் பிள்ளை தூங்குவதற்காக உட்கார்ந்த இடத்தருகில் ஒரு சிறு ஜன்னல்—பனங் கம்பு 'அழி' வைத்தது. உள்ளிருந்து குசுகுசு என்ற சப்தம்.

"ஏட்டி, அஞ்சு கொத்துச் சவடி (சங்கிலி) உனக்குன்னு தானேட்டி சொன்னு, பேச்சியம்மை கேக்கதுக்கு மின்னே நீ போய் உங்க தாத்தாக்கிட்டே கேட்டு வாங்கிக்க!"......

"ஆமாம்......எனக்குத் தூக்கம் வருதுங்கே—என்னைப் போட்டுப் படுத்தாதே!" என்று வெடுக்கென்னும் ஓர் இளம்பெண் குரல்.

"உடனே 'வீல்' என்று தொட்டிலில் அழும் குழந்தைக் குரல்.

"சவமெ, நீயும் ஆரம்பிச்சிட்டியா?......ஒன் வாய் ஓயாதா?..... செத்த ஒரு நிமிட்டு சும்மா இரியாதா? எனக்குன்னுதான் வந்திட்டு தம்மா......!" என்ற அங்கலாய்ப்பு.

"அதாரது பாப்பாத்தியா......!" என்று நினைத்தார் வைரவன் பிள்ளை. அவள்தான் பிள்ளையின் நாற்பது வயதான முதல் புத்திரி பாப்பாத்தியம்மாள். அவளுக்கு, வயதுவந்த ஒரு பெண்ணும், நான்கு வயதுச் சிறுவனும், பத்துமாதக் கைக்குழந்தையும் உண்டு.

இதைக்கேட்ட வைரவன் பிள்ளைக்குக் கைக்குழந்தை பாப்பாத்தி, சமைந்து (பருவமெய்தி) சடங்கு நடக்கும்போது அவள் நின்ற கோலம்......அப்புறம் மனப் பந்தலில் அவள் நின்ற காட்சி...... எல்லாம் அவர் மனக்கண்முன் சலனப்படமாக விரிந்தது. பாப்பாத்தி எப்பொழுதும் அப்படித்தான். ஆமாம், அவள் பிறக்கும்போது தானே கடைமுறிந்து நாலு பக்கமும் பணமுடை......கஷ்டத்தில் வளர்ந்த பெண்—காசில் இருந்த கருத்து அளவுக்கு மீறி வளர்ந்துவிட்டது—அவள் மகளுக்கென்று சொல்லியிருந்தால், அவள் மகளுக்குத்தானே. அதற்குள் எதற்கு இந்தச் சின்னப்புத்தி.

"ஏட்டி, இந்த வெத்திலையைத் தட்டு" என்று எடுத்த வாய்—அதிகாலையில் எழுந்திருந்ததும் அவர் போட்டுக்கொள்வதற்காகத் தயாராக வெற்றிலையை இடித்து வைத்தல் அவரது பல் போனதிலிருந்து தட்டாது நடந்துவரும் பழக்கம்—சடக்கென்று நின்றது. உள்ளத்தின் குழப்பம் புதிய மாறுபாட்டில் மேலும் குழம்பியது.

வீட்டின் பக்கத்தில் நின்று குடிமகன் சுடலை ஊதிய இரட்டைச் சங்கின் அலறல் மறுநாள் வந்ததைப் பிள்ளையவர்கள் பிரக்ஞைக்குக் கொணர்ந்தது .....அதேசமயத்தில் உள்ளிருந்து பெண்களின் அழுகைக் குரல், சங்கத்தின் ஏக்க அலைகளுடன் தொடர்ந்து மனப் பாரத்தை அதிகப்படுத்தியது......வைரவன் பிள்ளையின் பார்வை விடிவெள்ளியை நாடியது......அது அவர் கண்ணில் தென்படவில்லை......எதிர்வீட்டுக் கூரை, முன்பே அதை விழுங்கிவிட்டது... கூரையின் உச்சிக்கோடுதான் வானத்திற்கு ஓர் எல்லை காட்டியது.

தெருக்கோடி முனையில் 'ஜல் ஜல்' என்ற மாட்டுச் சலங்கைகளின் சப்தம்......சிறிது நின்றது. யாரோ இறங்கினர்......தெருக்கோடியிலிருந்தே......" என்னைப் பெத்த தாயாரே !"......என்ற பிலாக்கணம் ......பார்வதியும் வந்து சேர்ந்துவிட்டாள் என்ற திருப்தி வைரவன் பிள்ளைக்கு .....பார்வதி கடைக்குட்டிப் பெண்......தூரத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கிருள் ......

அப்பொழுது விசிப்பலகை ஒன்றிலிருந்த உருவம் எழுந்து, சடசடவென்று சோம்பல் முறித்தவண்ணம், "சம்போ மகாதேவா !" என்று கொட்டாவி விட்டுக்கொண்டே, "பாட்டையா, நல்லத் தூங்கினியளா ? அதாரது ?" என்று சொல்லிக்கொண்டே, வண்டி வந்த திசையை நோக்கியது......

அதற்குள் வண்டியும் மெதுவாக வாசற்படியில் நின்றது...... முன்னல் பார்வதி நெஞ்சிலடித்துக்கொண்டே உள்ளே நுழைந்தாள் ......உள்ளே அழுகைக்குரல் பலமாற்று......

"கரிசங்கொளத்து மாப்பிள்ளை வாராஹ !" என்று சொல்லிக்கொண்டே பக்கத்துவீட்டுக் கள்ளர்பிரான் பிள்ளை—அவர்தான் மற்றொரு பலகையில் படுத்திருந்தவர்—எழுந்திருந்தார்.

மாப்பிள்ளை மௌனமாக வந்து பிள்ளையவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தார்......தலைகுனிந்த வண்ணம் கேட்டார் : "அத்தைக்கு என்ன செஞ்சது ? லெட்டர்லெ கூட ஒண்ணையும் குறிப்பிடலியே ......!" வைரவன் பிள்ளை பதில் பேசவில்லை.

"ஆச்சிக்கு என்ன ? கெடப்பிலே கெடந்தாளா என்ன...... அண்ணைக்கு என்ன, கால் கொஞ்சம் தவறிச்சு......நல்ல ஊமையடி

......இப்படி வரும்னு யார் நெனச்சா......வயசாச்சில்லியா ? எல்லாம் தெய்வ சங்கல்பம். அதுக்கு நாம் என்ன பண்ணமுடியும் !...... ஆச்சி திரேகம் கல்லுன்ணு கல்லுத்தான்......எண்ணேக்காவது ஒருநா மண்டையிடிண்ணு தலையெச் சாச்சிருக்காளா ?......அந்தப் பெரிய டாக்டரு இருக்கானே—அவன் எம்டன்தான் !—அவனே அவ்வளவு தான்ணுட்டான் !" என்று வாசாமகோசரமாக விஷயத்தைச் சொல்லி, தேறுதலும் சொல்ல ஆரம்பித்தார் முதலில் எழுந்தவர்......

அப்பொழுதுதான் எழுந்த சுந்தரம்பிள்ளை, நெற்றியில் விபூதியை எடுத்துப் பூசித்துக்கொண்டே, "போன மாசமேதான் சுப்பு பிள்ளை அண்ணச்சி சொல்லலே, ஆச்சிக்கு ஒரு கண்ட மிருக்குன்னு !...... நானும் அண்ணேக்கு விளை (விளையுமிடம்) யைப் பாத்துட்டு வரப்போ பேசிக்கிட்டுத்தானே வந்தேன்......எல்லாம் வெள்ளிக்கிளமை களிஞ்சாத்தானின்ணர்......காலன் வாரதுக்கு கணக்கிண்ணும், நேர மிண்ணும் உண்டுமா ?" என்று சொன்ணர்.

வைரவன் பிள்ளை யோசனையைச் சுடலையின் மற்ருெரு சங்கொலி கலேத்துக் குழப்பி அதனுடன் ஒன்றுபட்டது.

அதற்குள் நன்ருய் விடிந்துவிட்டது.

வீட்டினுள்ளிருந்த நான்கு வயதுப் பையனெருவன், இடை அரை ஞாண் கயிற்றில் மூலை மட்டும் சொருகிய பட்டுக்கரைத் துண்டு ஒன்றைப் பிரம்மப் பிரயத்தனம் செய்து மேலே இழுத்துப் போட்டும் முக்கால்வாசிப் பாகம் புழுதியில் புரள, வெளியே வந்து குறட்டின் மேல் ஏறினன்.

வைரவன் பிள்ளை, உணர்வற்ற நிலையிலே, அவனை ஒரு கையால் அணைத்தார்.

அவர் பக்கம் ஒண்டிக்கொண்டு அவரை அண்ணந்து ஏறிட்டுப் பார்த்தவண்ணம், "நாந்தான் ஆச்சிக்கு நெய்ப்பந்தம் பிடிச்சேனே !" என்று தன் திறமையை விளக்கிக் கொண்டான் சிறுவன்.

"பயலெப் பாருங்களேன் !...ஏலே, ஒங்க ஆச்சியெ ஏங்கடா ?" என்ருர் சுந்தரம் பிள்ளை.

"செத்துப் போயிட்டா !" என்று அர்த்தமில்லாமல் சொன்ணன் சிறுவன்.

"அது பசலெ, அதுக்கென்ன தெரியும்?" என்ருர் வைரவன் பிள்ளை.

"அவன ? வலுப் பயல்லெ, அவனுக்கா தெரியாது ! ... ஏலே, ஒங்க ஆச்சியை—" என்பதற்குள், உள்ளிருந்து தாம்பாளத்தில்

இளநீர் பால் முதலிய கிரியைக்கு வேண்டியவற்றையும், குடம் சொம்பு முதலியவற்றையும் எடுத்து வந்து வைத்த கள்ளர்பிரான் பிள்ளை, " எல்லாம் காலா காலத்திலே போயிட்டு வந்திட்டா நல்லது தானே ! நீங்க மேலவீட்டு அண்ணாச்சியைச் சத்தங் காட்டுங்க !..." என்றார்.

சுடலை மறுபடியும் மெழுகுவைத்த இரட்டைச் சங்கை முழக்கினான். எல்லோரும் துண்டை உதறித் தோள்மேல் போட்டுக் கொண்டு எழுந்தனர்...சுடலை முன்னால் முழக்கிக்கொண்டே நடந்தான்.

வைரவன் பிள்ளை கைத்தடியை ஊன்றிக்கொண்டு தள்ளாடி நடந்தார். அவருக்கு முன்னால், தலை முண்டிதமான அவருடைய ஒரே மகன் செல்லுகிறான்...மனசிலோ, நடையிலோ கவலை தள்ளாடவில்லை.

வைரவன் பிள்ளை மனக்கண்முன், மணக்கோலத்தில் பதினாறு வயதில் பார்த்த வள்ளியம்மை யாச்சியின் உருவம் நின்றது...

சுடலை சங்கை முழக்கினான்...

இனிப் பார்க்கப் போவதை வைரவன் பிள்ளை மனது நினைக்க மறுத்தது...

" ஏலே நீயுமா ? திரும்பலியா !" என்ற சுந்தரம்பிள்ளையின் குரல்... பேரன் தொடர்வதைத் திரும்பிப் பார்த்தார்.

மறுபடியும் சுடலை சங்கை முழக்கிக்கொண்டே சந்து திரும்பினான்...

# நியாயம்

தேவ இறக்கம் நாடார்—அவருக்கு வல்லின இடையினங்களைப் பற்றி அபேத வாதக் கொள்கையோ, தனது பெயரை அழுத்தமாகச் சொல்லவேண்டும் என்ற ஆசையோ, எதுவானாலும் அவர் எப் பொழுதாவது ஒரு தடவை இந்த 'டமிலில்' எழுதுவது போலவே எழுதி விடுவோம். நல்ல கிறிஸ்தவர். புரோட்டஸ்டாண்ட், ஸர்கில் சேர்மனாக இருந்து, மிஷனில் உபகாரச் சம்பளம் பெற்று வருபவர். இந்த உலகத்திலே கர்த்தருடைய நீதி வழங்கப் பெறுவதற்காகப் பாடு பட்டதனால் ஏற்படப்போக இருக்கும், இந்த உலகத்தின் பென்ஷனை எதிர்பார்த்திருக்கிறார்.

ராஜ பக்தியும். சமூக சேவையும் ஒத்துவராத இந்தக் காலத்தில், மரியாதையாகச் சமூக சேவை என்று சொல்லப்படும் தமது பெஞ்சு மாஜிஸ்திரேட் பதவியில் கொஞ்சம் பெருமையுண்டு. ஒரே கல்லில் இரண்டு காக்கை யடித்தால் பெருமையடைய மாட்டார்களா ? அவரும் மனிதன் தானே ?

அவருடைய மதபக்தி, ராஜ பக்தியுடன் போட்டியிடும். ஞாயிற்றுக் கிழமை வரத் தவறினாலும், அவர் கடவுளால் கொடுக்கப்பட்ட அந்த ஓய்வு நாளில் கோவிலில் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் இருக்கமாட்டார். சில சமயம் பால்ராஜ் ஐயர் அவர்கள், ஓர் இருபதாம் நூற்றாண்டு இந்திய யோவான் ஸ்னானகனைப்போல், " ஏ ! விரியன் பாம்புக் குட்டிகளே : உங்கள் பாவங்களை ஒப்புக் கொள் ளுங்கள். உங்கள் பாவங்களை மன்னிக்கும்படி, கர்த்தராகிய ஏசு கிறிஸ்துவின் வழியாக. அந்த மனுஷ குமாரன் வழியாக, பரமண்டலங்களில் இருக்கும் பிதாவை முழங்கால் படியிட்டு வேண்டிக் கொள்ளுங்கள். ஏ ! விரியன் பாம்புக் குட்டிகளே ! ... " என்று உற்சாகமாகப் பிரசங்கிக்கும்பொழுது, தமது அருமை மேரிக் குஞ்சுமுதல், அங்கு வந்திருக்கும் வெள்ளைக்கார பிஷப் உள்பட எல்லாம் இரட்டை நாக்குகளை நீட்டிக்கொண்டு நெளிவதுபோல் தோன்றும். வெகு உருக்கமாக மன்றாடுவதற்காகக் கண்களை இறுக மூடிக் கொள்வார். அவ்வளவு மதபக்தி. பைபிளை இந்த உலகத்

துக்கே சரியான ஓர் இந்தியனின் பீனல் கோடாகவே மதித்தார். சமணரைக் கழுவேற்றியதாக மார் தட்டிக்கொள்ளும் திருவாளர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்குக் கூட அவ்வளவு இருக்குமோ என்னவோ?

அன்று கோர்ட்டில் கூட்டம் எப்பொழுதும்போல். நியூஸென்ஸ் சார்ஜ், லைசென்ஸ் இல்லாத குற்றம், சின்னத் திருட்டு, 'பெரிய' விவகாரங்களுக்குப் பிள்ளையார் சுழி, சின்னக்கடன், இத்யாதி.

பஞ்சபாண்டவர் மாதிரி இருந்த அந்த மாஜிஸ்திரேட்டுகள், வெகு ஊக்கமாக நியாயத்தை நிறுத்துப் பறிமாறிக்கொண்டிருந்தார்கள். கடைசியாக ஒரு கேஸ்தான் அப்பா!

ஒரு எஸ். பி. ஸி. ஏ. இன்ஸ்பெக்டர், அவர் பிடித்த கேஸ், காயம் பட்ட குதிரையையும் வண்டிக்காரனையும் பிடித்த விதத்தை விரிவாகக் கூறிவிட்டு இறங்கினார்.

தேவ இறக்கம் நாடாருக்கு இந்த அநியாயமான குற்றத்தைக் கேட்டவுடன் தாங்கமுடியாத கோபம். இனிமேல் இம்மாதிரி நடக்காதபடி ஒரு 'முன்மாதிரி'யாகத் தண்டிக்க வேண்டும் என்று நினைத்துவிட்டார்.

"யாரு ஓம்பேரென்ன!"

"சொள்ள முத்துப் புள்ளெ."

"சொள்ளமுத்து இன்னு சொல்லுமேவே, புள்ளை என்ன புள்ளை! கூண்டுலே ஏறுனப்ப? நீரு புண்ணுப்போன குருதையெ வண்டிலே மாட்டலாமா? என்ன மரங்கணக்கா நீக்கிராவே; ஒமக்கு புத்தியில்லே? வாயில்லாச் சீவனை; ஊமையாகவே! என்ன நிக்கிரா?"

"தரும தொரைகளே! எங்குருதயெ புள்ளமாருதி வளக்கேன். வவுத்துக் கொடுமை; இல்லாட்டாகே நாம் போடுவனு சாமி? இனிமேலே இப்பிடி நடக்காதுசாமி. ஒருதடவை, தருமதொரைக மன்னிக்கணும்."

"நல்லாச் சொன்னீரு! வேலையத்துப் போயாவே நாங்க இங் கெடந்து பாக்கம்? 5 ரூபா அவராதம்; தவறினா ஒரு மாசம், சரிதானே...அப்புறம்?" என்று மறுபக்கம் திரும்பினார்.

சுடலைமுத்துப்பிள்ளை ஆவேசம் கொண்டவன் போல் ஓடிவந்து காலைப் பிடித்துக்கொண்டு, "தரும துரைகளே! இந்த ஒரு தடவை மன்னிச்சிக்கணும். புள்ளெ குட்டி வவுத்துலே அடியாதிங்க..."

"பின்னாலே போ சாத்தானே!" என்று தேவ இறக்கம் நாடார் கர்ஜித்தார். கோர்ட் ஆர்டலி, சுடலிமுத்துப்பிள்ளையை இழுத்துக் கொண்டு வெளியே போனான்.

இரவு, தேவ இறக்கம் நாடார் படுத்துக் கொள்ளுமுன் முழங்கால் படியிட்டு ஜபம் செய்கிறார்.

"பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே! உமது நாமம் பரிசுத்தப்படுவதாக! உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய அப்பத்தை அன்றன்று எங்களுக்குத் தாரும். எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடம் கடன் பட்டவர்களுக்கும் மன்னிக்கிறோமே... ஆமென்!"

கண்ணை விழித்து எழுந்தார். அந்த அஞ்ஞானி வண்டிக்காரனைப் பற்றி ஞாபகமேயில்லை!

# சிற்பியின் நரகம்

சூரியாஸ்தமன சமயம். காவிரிப்பூம்பட்டினத் துறை முகத்தில் என்றையும்விட அதிக நெருக்கடி. கறுத்து ஒடுங்கிய மிசிர தேச வாசிகளும், வெளுத்து ஒடுங்கிய கடார வாசிகளும், தசை வலிமையின் இலட்சியம் போன்ற கறுத்த காப்பிரிகளும், வெளுத்த யவனர்களும், தென்னாட்டுத் தமிழும், வடநாட்டுப் பிராகிருதமும்—எல்லாம் ஒன்றிற்கொன்று முரண்பட்டுக் குழம்பின. சுங்க உத்தியோகஸ்தர்கள், அன்னம் போலும், முதலைகள் போலும் மிதக்கும் நாவாய்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களையும், வேலைக்காரர்களையும், பொற்பிரம்பின் சமயோசிதப் பிரயோகத்தால் தணிக்கை செய்து கொண்டிருந்தனர். அரசனுக்குக் கடாரத்திலிருந்து வெள்ளை யானைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்க்கத்தான் என்றுமில்லாத கூட்டம்!

அஸ்தமன சூரியன் ஒளியே எப்பொழுதும் ஒரு சோக நாடகம். கோவில் சிகரங்களிலும், மாளிகைக் கலசங்களிலும் தாக்கிக் கண்களைப் பறிப்பதுமட்டுமல்லாது, கடற்கரையில் கரும்பாறையில் நிற்கும் துவஜஸ்தம்பத்தின்மீது, கீழ்த்திசை நோக்கிப் பாயும் பாவனையில் அமைக்கப்பட்ட பொன் முலாம் பூசிய வெண்கலப் புலியின் முதுகிலும் வானிலும் பிரதிபலிப்பது, அவ்விடத்திற்கே ஒரு மயக்கத்தைக் கொடுத்தது.

இந்திர விழாவின் சமயத்தில் மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட ஸ்நான கட்டத்தின் படிக்கட்டில், பைலார்க்கஸ் என்ற யவனன், கடலை நோக்கியபடி உட்கார்ந்திருந்தான். நீண்ட போர்வையான அவனது டோகா, காற்றில் அசைந்து படபடவென்றடித்து சில சமயம் அவனது தாடியையும் கழுத்துடன் இறுகப் பின்னியது. பெரிய அலைகள் சமயா சமயங்களில் அவனது பின்னிய தோல்வார்ப் பாதரட்சையை நனைத்தன. அவ்வளவிற்கும் அவன் தேகத்தில் சிறிதாவது சலனம் கிடையாது. மனம் ஒன்றில் லயித்துவிட்டால், காற்றுத்தான் என்ன செய்ய முடியும். அலைதான் என்ன செய்ய முடியும்?

பைலார்க்கஸின் சிந்தனை சில சமயம் அலைகளைப்போல் குவிந்து விழுந்து சிதறின. கனவுகள் அவனை வெறியனைப்போல் விழிக்கச் செய்தன.

திடீரென்று, " சிவா ! " என்ற குரல். ஒரு தமிழ்ப் பரதேசி.

" யவனரே ! உமது சித்தம் உமக்குப் பிரியமான ஒன்று மற்ற பாழ்வெளியில் லயித்ததோ ? நான் நேற்றுச் சொன்னது உமக்குப் பதிந்ததா ? எல்லாம் மூலசக்தியின் திருவிளையாடல், அதன் உருவம்! கொல்லிப் பாவையும் அதுதான் ; குமரக் கடவுளும் அதுதான் ! எல்லாம் ஒன்றில் லயித்தால்...? "

" உமது தத்துவத்திற்குப் பதில் ஒரு கிண்ணம் திராட்சை மது எவ்வளவோ மேலானது. அதுவும் சைப்பிரஸ் தீவின் திராட்சை... அதோ போகிறானே, அந்தக் காப்பிரியும் ஏதோ கனவை நம்புகிறான். உமது முதல் சூத்திரத்தை ஒப்புக்கொண்டால் உமது கட்டுக்கோப்பில் தவறு கிடையாதுதான்...அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஒவ்வொருவருடைய மனப் பிராந்திக்கும் தகுந்தபடி தத்துவம்... எனக்கு அது வேண்டாம்...நாளங்காடியில் திரியும் உங்கள் கரு நாடிய நங்கையும், மதுக் கிண்ணமும் போதும்..."

" சிவ ! சிவ ! இந்த ஜைனப் பிசாசுகள்கூடத் தேவலை, கபாலி வெறியர்கள்கூடத் தேவலை...உம்மை யார் இந்த அசட்டு மூட்டையைக் கட்டிக் கொண்டு யவனத்திலிருந்து வரச் சொன்னது ?"

" உம்மைப் போன்றவர்கள் இருக்குமிடத்தில் நான் இருந்தால் அர்த்தமுண்டு. எங்கள் ஜூபிட்டரின் அசட்டுத்தனத்திற்கும் உங்கள் கந்தனின் அசட்டுத்தனத்திற்கும் ஏற்றத் தாழ்வில்லை..." என்று சிரித்தான் பைலார்க்கஸ்.

" சிவ ! உம்மிடம் பாசத்தை வைத்தான். அதுவும் அவன் விளையாட்டுத்தான்..." என்று, தம் சம்புடத்திலிருந்த விபூதியை நெற்றியில் துலாம்பரமாக அணிந்துகொண்டார் பரதேசி.

" நாளங்காடிப் பக்கம் போகிறேன், வருகிறீரா ?" என்றார் மீண்டும் அச்சந்நியாசி.

" ஆமாம் ! அங்கே போனாலும சாத்தனைப் பார்க்கலாம். அவனிடம் பேசுவதில் அர்த்தமுண்டு...அவனுக்குத் தெரியும் சிருஷ்டி ரகசியம்..."

" ஓஹோ ! அந்தச் சிலை செய்கிற கிழவனையா ? உமக்கு ஏற்ற பைத்தியக்காரன்தான்...ஏதேது ! அவனே அதோ வருகிறானே !" என்றார் சாமியார்.

பைலார்க்கஸ் எழுந்து அவனை யவன முறையில் வணங்கினான்.

சாத்தனுக்கு எண்பது வயதிருக்கும்; தொண்டு கிழவன். ஆனுல் வலிமை குன்றவில்லை; கண்களில் தீட்சண்யம் போகவில்லை. பிரமன் மனித வடிவம் பெற்றதுபோல் காணப்பட்டான். அவனும் கை கூப்பிவணங்கி, ' பைலார்க்கஸ், உன்னைத்தான் தேடிவந்தேன்! வீட்டிற்கு வருகிருயா? எனது லட்சியம் இன்றுதான் வடிவம் பெற்றது...!" என்று ஒரு குழந்தையின் உற்சாகத்துடன் கூவி யழைத்தான்.

" இவரைத் தெரியுமா? பாண்டிய நாட்டு உங்கள் பரதேசி...அவர் தத்துவங்களை எல்லாம் என்னுள் திணித்துப் பார்த்தார்...பைலார்க் களிடம் முடியுமா?" என்று கேலியாகச் சிரித்தான் யவனன்.

" சுவாமி வரணும், இன்று என் குடிசையில் அமுதுபடி கழிக்க வேண்டும் " என்று பரதேசியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் சாத்தன்.

" என்ன, என்ன! நீயுமா?" என்ருன் பைலார்க்கஸ்.

" பைலார்க்கஸ்! நீ நிரீசுவர வாதியாக இருப்பதில் எனக்கு வருத்த மில்லை; மற்றவரைக் கேலி செய்யாதே... "

" அதற்குத்தான் நான் பிறந்திருக்கிறேன். அப்பா! எனது வேலை அது. "

"சரி, வாங்கள் போகலாம். சுவாமி வரணும்?" என்று இரு வரையும் இரட்டை மாட்டு வண்டிக்கு அழைத்துச் சென்ருன் சிற்பி.

வண்டியின் கதி மெதுவாகத்தான் இருக்க முடிந்தது. எதிரே யானைகளும், பொதி கழுதை பொதி மாடுகளும், துறைமுகத்தை நோக்கி வரும் நேரத்தில், தீப்பந்தம் பிடித்துச் செல்லும் மக்களை விலக்கிக்கொண்டு வண்டி செல்வது கடினந்தான். திடீரென்று அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ரதம், யானை வந்துவிட்டால் தெருவே தூளிபடும். முரசொலி இருந்து என்ன பயன்? அந்த உப்பு வண்டி ஓட்டிச் செல்லும் பெண், சிறிது தவறிஞல், ரதத்தின் அடியில்தான்! சாத்தனின் வண்டி அதில் முட்டிக்கொள்ள விருந்தது.

" தெய்வச் செயல்!" என்ருன் சாத்தன்.

" உன் சிருஷ்டி சக்தி!" என்ருன் பைலார்க்கஸ், வேறு எதையோ நினைத்துக்கொண்டு.

" பைலார்க்கஸ், உனது பேச்சு எனது பெருமையைச் சாந்தி செய்யலாம். நான் எத்தனை நாள் கஷ்டப்பட்டேன்! அது உனக்குத் தெரியுமா? நீ நேற்றுப் பிறந்தவன்...கூத்து!...அதில் எவ்வளவு அர்த்தம்! மனிதனுக்குத் தெரிந்த தெல்லாம், தெரிய

வேண்டுவதெல்லாம்...இந்தப் பிரபஞ்சமே, பைலார்க்கஸ், நீ நினைப்பதுபோல் வெறும் பாழ்வெளியன்று ; அர்த்தமற்ற பேய்க் குழப்பம் அன்று...இருபது வயசிருக்கும்; அப்போ ஒரு தரம் பாண்டிய நாட்டுக்குப் போயிருந்தேன்...சிற்பத்தைப் பார்க்கவேண்டுமானால் கொல்லிப் பாவையைப் பார்க்கவேண்டும். அங்கேதான், ஒரு மறவன், நாகன், ஒரு கூத்தில் அபிநயம் பிடித்தான். அந்தக் கால் வளைவு, அதை அதிலே பிடித்தேன்...உலகத்தின் அர்த்தத்தை—ஒவ்வொன்றாக. படிப்படியாக வளர்ந்தது...அந்த மலையத்து நடிகைதான் முகத்தின் சாந்தியை, அந்த அபூர்வமான புன்சிரிப்பை, அர்த்தமற்ற அர்த்தத்தை—பைலார்க்கஸ், உனக்கென்ன! நீ கேலிக்காரன்—உபநிஷத்தில் தேடியலைந்தேன்...ஹிமயத்தில் தேடியலைந்தேன்...சாந்தி அந்த இரவு...என் மனைவி அங்கற்கண்ணி இறந்த அன்று கிட்டியது... பிறகு வெண்கலக் கலப்பிற்கு என்ன பரீட்சை ! என்ன ஏமாற்றம்!... ஆசைதான் வழி காட்டியது. அந்த ரூப சௌந்தரியம் பெறுவதற்கு எத்தனை ஆட்களைத் தேடினேன் !...அதன் ஒரு சாயை...நீலமலைக் கொடுங்கோலன்—பத்து வருஷங்களுக்கு முன்பு சிரச்சேதம் செய்யப் பட்டானே—அவனுடைய இடை துவளுதலில் கண்டேன்...தெய்வம் ஒன்று உண்டு...அதன் அர்த்தத்தை என் சிலை உணர்த்த முடிந்தது எனது பூர்வ ஜன்மப் பலன்...இந்தக் கைகளால்...பின்னாலிருந்து ஓர் அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால்...அதைச் சாதிக்க முடியும் ?”

“நீதான் சாதித்தாய்! நீதான் பிரம்மா ! உன் சாதனை தான் அது, சிருஷ்டி ! மயங்காதே !—பயப்படாதே ! நீதான் பிரம்மா ! சிருஷ்டித் தெய்வம் !” என்று பைலார்க்கஸ் அடுக்கிக்கொண்டே போனான்.

சாமியார் புன்சிரிப்புடன் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வண்டியும் நாளங்காடியை அடைந்து, கீழ்ச் சதுக்கத்தின் வழியாக ஒரு சந்தில் திரும்பி, ஒரு வீட்டின் முன்பு நின்றது.

மூவரும் இறங்கி வாசற்படியில் ஏறினர். ஒரு யவனப் பெண் வந்து காலைக் கழுவினாள். ஒரு காப்பிரி, மரியாதையாகக் குனிந்து, கலிங்க வஸ்திரத்தினால் துடைத்தான்.

“சுவாமி, வரவேண்டும் ! பைலார்க்கஸ், இப்படி வா !” என்று இருவரையும் அழைத்துக்கொண்டு, ஓர் அறைக்குள் சென்றான் சாத்தன்...அவன் வயதிற்கு அவ்வளவு துடிதுடிப்பு ஆச்சரியமானதுதான் !

“முபாங்கோ, தீபம் !” என்று கத்தினான். அந்தக் காப்பிரி ஒரு

கை விளக்கை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். ஜன்னல் இல்லாத அந்த அறையிலும் காற்று நூலிழைபோல் வந்து உள்ளத்தையும் உடலையும் மயக்கியது.

"இங்கு கூடவா விளக்கு இல்லை! திரையை ஒதுக்கு! ஸ்வாமி, பைலாா்க்கஸ். இதுதான் என் வாழ்க்கை!" என்று திரையை ஒதுக்கினான்.

இருவரும் ஸ்தம்பித்து நின்றனர். அந்த மங்கிய தீப வொளியில், ஒற்றைக் காலைத் தூக்கி நடிக்கும் பாவனையில், ஆள் உயரத்தில் மனித விக்ரகம்! விரிந்த சடையும் அதன் மீது விளங்கும் பிறையும், விரிந்து சின்முத்திரைகளைக் காண்பிக்கும் கைகளும், அந்த அதரத்தில் தோன்றிய அபூர்வப் புன்னகையும், மனத்தில் அலைமேல் அலையாகச் சிந்தனைக் கற்பனைகளைக் கிளப்பின. மூவரும் அந்தச் சிலையேயாயினர். சிலையின் ஒவ்வொரு வளைவிலும், ஒவ்வொரு அங்கத்திலும் என்ன ஜீவத் துடிதுடிப்பு!

சந்நியாசி, தம்மை யறியாமல், பாட ஆரம்பித்தார்:

பனித்த சடையும்,
பவளம்போல் மேனியிற்
பால்வெண் ணீறும்,

குனித்த புருவமும்,
கொவ்வைச்செவ் வாயிற்
குமிழ் சிரிப்பும்,

இனித்தங் கசிய
எடுத்தபொற் பாதமும்
காணப் பெற்றால்

மனித்தப் பிறவியும்
வேண்டுவ தேஇந்த
மாநிலத் தே!

"சுவாமி, அப்படிச் சொல்லக்கூடாது!"

"சாத்தா! அவர் சொல்லுவதுதான் சரி! இது கலையா! இது சிருஷ்டி. இதை என்ன செய்யப் போகிறாய்?"

"அரசன் கோவிலுக்கு... இதென்ன கேள்வி?"

"என்ன! இந்த அசட்டுத்தனத்தை விட்டுத்தள்ளு.. அரசனுடைய அந்தப்புர நிர்வாண உருவங்களின் பக்கங்களில் இதை வைத்தாலும் அர்த்தம் உண்டு...இதை உடைத்துக் குன்றின்மேல்

எறிந்தாலும் அந்தத் துண்டுகளுக்கு அர்த்தம் உண்டு, ஜீவன் உண்டு...'' என்று வெறிபிடித்தவன்போல் பேசினான் பைலார்க்கஸ்.

''சீ, பைலார்க்கஸ்! உனது வெறி பிடித்த கொள்கைகளுக்கு யவனந்தான் சரி! அகஸ்தூஸா—அந்த உங்கள் சாம்ராட்—அவனுக்குத்தான் சரி உன் பேத்தல்!''

''சாத்தனாரே! உமது இலட்சியத்திற்கு அரசன் கோரிக்கைதான் சரியான முடிவு. இனி ஏன் இந்த ஜைனர்கள் தலை தூக்கப் போகிறார்கள்...'' என்றார் சாமியார்.

''இந்த வெறிபிடித்த மனிதர்களைவிட, அந்தக் கடலுக்கு எவ்வளவோ புத்தியிருக்கிறது...'' என்று கோபித்துக் கொண்டு, பைலார்க்கஸ் வெளியேறிவிட்டான்.

# 2

அன்றுதான் கும்பாபிஷேகம். சிலையைப் பிரதிஷ்டை செய்த தினம். சோழ தேசத்திலேயே அது ஒரு பெரும் களியாட்டம் என்று கூறவேண்டும். சாத்தனுக்கு இலட்சியம் நிறைவேறிற்று. அன்று பைலார்க்கஸ் தனது குதூகலத்தில் பங்கெடுத்துக்கொள்ள உயிருடன் இல்லையே என்ற வருத்தம் சாத்தனுக்கு அதிகம்.

புதிய கோவிலிலிருந்து வீடு சேரும்பொழுது அர்த்த ஜாமமாகி விட்டது.

வயதின் முதிர்ச்சி அன்றுதான் அவனைச் சிறிது தளர்த்தியது, சோர்ந்து படுத்தான், அயர்ந்துவிட்டான்..

அப்பா! என்ன ஜோதி! அகண்டமான எல்லையற்ற வெளி! அதிலே சாத்தனின் இலட்சியம், அந்த அர்த்தமற்ற, ஆனால் அர்த்த புஷ்டிமிகுந்த ஒரு புன்சிரிப்பு! மெதுவான ஹிருதய தாளத்தின் நடனம்! என்ன ஜீவன்! என்ன சிருஷ்டி!

திடீரென்று எல்லாம் இருண்டது! ஒரே கன்னக் கனிந்த இருள்! ஹிருதய சூனியம் போன்ற பாழ் இருட்டு!

பிறகும் ஒளி... இப்பொழுது தங்கத்தினாலான கோவில்! கண்கள் கூசும்படியான பிரகாசம்!... கதவுகள் மணியோசையுடன் தாமே திறக்கின்றன...உள்ளே அந்தப் பழைய இருள்!

சாத்தன் உள்ளே செல்லுகிறான். இருட்டின் கருபோன்ற இடம். அதில் மங்கிய தீபவொளி தோன்றுகிறது! என்ன! இதுவா பழைய

சிலை! உயிரில்லை! கவர்ச்சிக்கும் புன்னகையில்லையே! எல்லாம் மருள்...மருள்!

அந்தகார வாசலில் சாயைகள்போல் உருவங்கள் குனிந்தபடி வருகின்றன. குனிந்தபடி வணங்குகின்றன.

"எனக்கு மோட்சம்! எனக்கு மோட்சம்!" என்ற எதிரொலிப்பு... அந்தக் கோடிக்கணக்கான சாயைகளின் கூட்டத்தில், ஒருவராவது சிலையை ஏறிட்டுப் பார்க்கவில்லை! இப்படியே தினமும்...

நாட்கள், வருஷங்கள், நூற்றுண்டுகள் அலைபோல் புரள்கின்றன —அந்த அனந்தகோடி வருஷங்களில் ஒரு சாயையாவது ஏறிட்டுப் பார்க்கவேண்டுமே!—

"எனக்கு மோட்சம்...!" இதுதான் பல்லவி, பாட்டு, எல்லாம்!

சாத்தன் நிற்கிருன்...

எத்தனை யுகங்கள்! அவனுக்கு வெறி பிடிக்கிறது. "உயிரற்ற மோட்சச் சிலையே! உன்னை உடைக்கிறேன்! போடு! ஐயோ, தெய்வமே! உடையமாட்டாயா! உடைந்துவிடு! நீ உடைந்து போ! அல்லது உன் மழு என்னைக் கொல்லட்டும். அர்த்தமற்ற கூத்து!.." இடி இடிந்த மாதிரி, சிலை புரள்கிறது. சாத்தனது ஆலிங்கனத்தில், அவன் ரத்தத்தில், அது தோய்கிறது...ரத்தம் அவ்வளவு புனிதமா! பழைய புன்னகை!...

சாத்தன் திடுக்கிட்டு விழித்தான். வெள்ளி முளைத்துவிட்டது. புதிய கோவிலின் சங்கநாதத்துடன் அவனது குழம்பிய உள்ளம் முட்டுகிறது.

"என்ன பேய்க் கனவு, சீ!" என்று விபூதியை நெற்றியில் அணிந்து கொள்ளுகிருன்.

"பைலார்க்கஸ்-பாவம். அவன் இருந்தால்..." சாத்தனின் மனம் சாந்தி பெறவில்லை.

# காஞ்சனை

## 1

அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. காரணம் என்னவென்று சொல்ல முடியவில்லை. மனசுக்குக் கஷ்டமும் இல்லை, அளவுக்கு மிஞ்சிய இன்பமும் இல்லை, இந்த மாதிரித் தூக்கம் பிடிக்காமல் இருக்க! எல்லோரையும் போலத்தான் நானும். ஆனால் என்னுடைய தொழில் எல்லோருடையதும் போல் அல்ல. நான் கதை எழுதுகிறேன்; அதாவது, சரடு விட்டு, அதைச் சகிக்கும் பத்திரிகை ஸ்தாபனங்களிலிருந்து பிழைக்கிறவன்; என்னுடைய அங்கீகரிக்கப்படும் பொய்; அதாவது—கடவுள், தர்மம் என்று பல நாம ரூபங்களுடன், உலக 'மெஜாரிட்டி'யின் அங்கீகாரத்தைப் பெறுவது; இதற்குத்தான் சிருஷ்டி, கற்பனாலோக சஞ்சாரம் என்றெல்லாம் சொல்லுவார்கள். இந்த மாதிரியாகப் பொய் சொல்லுகிறவர்களையே இரண்டாவது பிரம்மா என்பார்கள். இந்த நகல் பிரம்ம பரம்பரையில் நான் கடைக்குட்டி. இதை எல்லாம் நினைக்கப் பெருமையாகத்தான் இருக்கிறது. நாங்கள் உண்டாக்குவதுபோல், அந்தப் பிரமனின் கைவேலையும் பொய் தானா? நான் பொய்யா? திடீரென்று இந்த வேதாந்த விசாரம் இரவு சுமார் பன்னிரண்டு மணிப் போதுக்கு ஏற்பட்டால், தன்னுடைய ஜீரண சக்தியைப் பற்றி யாருக்குத்தான் சந்தேகம் தோன்றாது? "அட சட்!" என்று சொல்லிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தேன்.

உட்கார்ந்தபடி எட்டினாற் போல மின்சார விளக்கைப் போடுவதற்கு வாக்காக, வீட்டைக் கட்டி வைத்திருந்தான். போட்டேன். வெளிச்சம் கண்களை உறுத்தியது. பக்கத்துக் கட்டிலில் என் மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள். தூக்கத்தில் என்ன கனவோ உதட்டுக் கோணத்தில் புன்சிரிப்பு கண்ணாம்பூச்சி விளையாடியது.

விளக்கை அணைத்தேன். லேசாக வாசனை இருந்துகொண்டுதான் இருந்தது. ஜன்னலருகில் சென்று எட்டிப் பார்த்தேன். நட்சத்திர வெளிச்சந்தான்.

லேசாக வீட்டிலிருந்து ஜன்னல், வாசல், கதவுகள் எல்லாம் பட பட வென்று அடித்துக் கொண்டன. ஒரு விநாடிதான். அப்புறம் நிச்சப்தம். பூகம்பமோ? நட்சத்திர வெளிச்சத்தில் பழந்தின்னி வௌவால் ஒன்று தன் அகன்ற தோல் சிறகுகளை விரித்துக்கொண்டு பறந்து சென்று எதிரில் உள்ள சோலைகளுக்கு அப்பால் மறைந்தது.

துர் நாற்றமும் வாசனையும் அடியோடு மறைந்தன. நான் திரும்பி வந்து படுத்துக்கொண்டேன்.

# 2

நான் மறுநாள் விடியற்காலம் தூக்கம் கலைந்து எழுந்திருக்கும் போது, காலை முற்பகலாகிவிட்டது. ஜன்னல் வழியாக விழுந்து கிடந்த தினசரிப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு வீட்டின் வெளி முற்றத் துக்கு வந்து பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தேன். கிரீச்சிட்டு ஆட் சேபித்துவிட்டு அது என்னைச் சுமந்தது.

“ ராத்திரி பூராவும் தூங்காமே இவ்வளவு நேரம் கழித்து எழுந்ததும் அல்லாமல், இப்படி வந்து உட்கார்ந்து கொண்டால், காப்பி என்னத்துக்கு ஆகும்?” என்று என் சகதர்பிணி பின்பக்கமாக வந்து நின்று உலுக்கினாள். ‘ஐக்கிய நாடுகளின் ஜுரூர் மிகுந்த எதிர்த் தாக்குதல்கள் தங்கு தடையில்லாமல் முன்னேறி வருவதில்’ அகப்பட்டுக் கொண்ட ஜனநாயகத்திலும் உலக சமாதானத்திலும் உறுதி பிறழாத நம்பிக்கை கொண்ட எனக்குச் சற்றுச் சிரமமாகத் தான் இருந்தது.

“ அது உன் சமையல் விமரிசையால் வந்த வினை ” என்று ஒரு பாரிசத் தாக்குதல் நடத்திவிட்டு எழுந்தேன்.

“ உங்களுக்குப் பொழுது போகாமே என் மேலே குத்தம் கண்டு பிடிக்கணும்னு தோணிட்டா, வேறே என்னத்தைப் பேசப் போறிய ? எல்லாம் நீங்கள் எழுதுகிற கதையைவிடக் குறைச்சல் இல்லை !” என்று சொல்லிக்கொண்டே அடுப்பங்கரைக்குள் புகுந்தாள்.

நானும் குடும்ப நியதிகளுக்குக் கட்டுப்பட்டு, பல்லைத் துலக்கி விட்டு, கொதிக்கும் காப்பித் தம்ளரைத் துண்டில் ஏந்தியபடி, பத்திரிகைப் பத்திகளை நோக்கினேன்.

அப்போது ஒரு பிச்சைக்காரி, அதிலும் வாலிபப் பிச்சைக்காரி, ஏதோ பாட்டுப் பாடியபடி, “ அம்மா, தாயே !” என்று சொல்லிக் கொண்டு வாசற்படியண்டை வந்து நின்றாள்.

நான் ஏறிட்டுப் பார்த்துவிட்டு, இந்தப் பிச்சைக்காரர்களுடன் மல்லாட முடியாதென்று நினைத்துக் கொண்டு பத்திரிகையை உயர்த்தி வேலி கட்டிக்கொண்டேன்.

"உனக்கு என்ன உடம்பிலே தெம்பா இல்லே? நாலு வீடு வேலே செஞ்சு பொளெச்சா என்ன?" என்று அதட்டிக்கொண்டே நடை வாசலில் வந்து நின்ருள் என் மனைவி.

"வேலே கெடச்சாச் செய்யமாட்டேனு? கும்பி கொதிக்குது, தாயே! இந்தத் தெருவிலே இது வரையில் பிடியரிசிகூடக் கிடைக்க வில்லே; மானத்தை மறைக்க முழுத்துணி குடம்மா" என்று பிச்சைக் கார அஸ்திரங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்தாள்.

"நான் வேலே தாரேன்; வீட்டோடவே இருக்கியா? வயத்துக்குச் சோறு போடுவேன்; மானத்துக்குத் துணி தருவேன்; என்ன சொல்லுறே?" என்ருள்.

"அது போதாதா அம்மா? இந்தக் காலத்திலே அதுதான் யார் கொடுக்கிரு?" என்று சொல்லிக் கொண்டே என் மனைவியைப் பார்த்துச் சிரித்து நின்ருள்.

"என்ன, நான் இவளை வீட்டோடே ரெண்டு நாள் வெச்சு எப்படி இருக்கான்னுதான் பாக்கட்டுமா? எனக்குந்தான் அடிக்கடி இளைப்பு இளைப்பா வருதே" என்ருள் என் மனைவி.

"சீ! உனக்கு என்ன பைத்தியமா? எங்கேயோ கெடந்த பிச்சைக்காரக் களுதையை வீட்டுக்குள் ஏத்த வேண்டும் என்கிருயே! பூலோகத்திலே உனக்கு வேறே ஆளே ஆம்பிடலியா?" என்றேன்.

வெளியில் நின்ற பிச்சைக்காரி 'களுக்' என்று சிரித்தாள். சிரிப்பிலே ஒரு பயங்கரமான கவர்ச்சி இருந்தது. என் மனைவி, வைத்த கண் மாருமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள். மனசு முழுவதும் அந்த அநாமத்திடமே ஐக்கியமாகி விட்டதுபோல் இருந்தது.

"முகத்தைப் பார்த்தா ஆள் எப்படி என்று சொல்ல முடியாதா? இநீப்படி உள்ளே வாம்மா" என்று மேலுத்தரவு போட்டுக்கொண்டு அவளை அழைத்துச் சென்ருள்.

உள்ளுக்குள்ளே பூரிப்புடன் அந்த மாய்மாலப் பிச்சைக்காரி பின் தொடர்ந்தாள். என்ன! நான் கண்களைத் துடைத்துக்கொண்டு அவள் பாதங்களையே பார்த்தேன். அவை தரைக்குமேல் ஒரு குன்றிமணி உயரத்துக்கு அந்தரத்தில் நடமாடின. உடம்பெல்லாம் எனக்குப்புல்லரித்தது. மனப் பிரமையா? மறுபடியும் பார்க்கும் போது, பிச்சைக்காரி என்னைப் புன்சிரிப்புடன் திரும்பிப் பார்த்தாள். ஐயோ, அது புன்சிரிப்பா! எலும்பின் செங்குருத்துக்குள் ஐஸ்

ஈட்டியைச் செருகியது மாதிரி என்னைக் கொன்று புரட்டியது அது!

என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வீட்டுக்குள் வருவது நல்லதற்கல்ல என்று சொன்னேன். இந்த அபூர்வத்தை வேலைக் காரியாக வைத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று ஒரேயடியாகப் பிடிவாதம் செய்தாள். மசக்கை விபரீதங்களுக்கு ஓர் எல்லை இல்லையா? என்னவோ படு ஆபத்து என்றுதான் என் மனசு படக்குப் படக்கு என்று அடித்துக்கொண்டது. மறுபடியும் எட்டி அவள் பாதங்களைப் பார்த்தேன். எல்லோரையும் போல் அவள் கால்களும் தரையில்தான் பாவி நடமாடின. இது என்ன மாயப் பிரமை!

தென்னுலிராமன் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க முடியாது என்பதை நிரூபித்தான். ஆனுல் என் மனைவி, பிச்சைக்காரிகளையும் நம்மைப்பேன்ற மனிதர்களாக்க முடியும் என்பதை நிரூபித்தாள். குளித்து முழுகி, பழசானுலும் சுத்தமான ஆடையை உடுத்துக் கொண்டால் யாரானுலும் அருகில் உட்கார வைத்துப் பேசிக்கொண் டிருக்க முடியும் என்பது தெரிந்தது. வந்திருந்த பிச்சைக்காரி, சிரிப்பு மூட்டும்படிப் பேசுவதில் கெட்டிக்காரி போலும்! அடிக்கடி 'களுக்' 'களுக்' என்ற சப்தம் கேட்டது. என் மனைவிக்கு அவள் விழுந்து விழுந்து பணிவிடை செய்வதைக் கண்டு நானே பிரமித்து விட்டேன். என்னையே கேலிசெய்து கொள்ளும்படியாக இருந்தது, சற்றுமுன் எனக்குத் தோற்றிய பயம்.

சாயந்தரம் இருக்கும்; கருக்கல் நேரம். என் மனைவியும் அந்த வேலைக்காரியும் உட்கார்ந்து சிரித்துப் பேசியபடி கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் முன் கூடத்தில் விளக்கேற்றிவிட்டு ஒரு புஸ்தகத்தை வியாஜமாகக் கொண்டு அவளைக் கவனித்த வண்ணம் இருந்தேன். நான் இருந்த ஹாலுக்கும் அவர்கள் இருந்த இடத் துக்கும் இடையில் நடுக்கட்டு ஒன்று உண்டு. அதிலே நான் ஒரு நிலைக்கண்ணுடியைத் தொங்க விட்டு வைத்திருந்தேன். அவர்க ளுடைய பிம்பங்கள் அதிலே நன்ருகத் தெரிந்தன.

"நீ எங்கெல்லாமோ சுத்தி அலஞ்சு வந்திருக்கியே; ஒரு கதை சொல்லு" என்ருள் என் மனைவி.

"ஆமாம். நான் காசி அரித்துவாரம் எல்லா எடத்துக்கும் போயிருக்கிறேன். அங்கே, காசியிலே ஒரு கதையைக் கேட்டேன்; உனக்குச் சொல்லட்டா?" என்ருள்.

"சொல்லேன்; என்ன கதை?" என்று கேட்டாள் என் மனைவி.

"அஞ்சுநூறு வருச மாச்சாம். காசியிலே ஒரு ராசாவுக்கு ஒத்தைக்

கொரு மக இருந்தா. பூலோகத்திலே அவளெப்போல அளகு தேடிப் புடிச்சாலும் கெடெக்காதாம். அவளெ ராசாவும் எல்லாப் படிப்பும் படிப்பிச்சாரு. அவளுக்குக் குருவா வந்தவன் மகாப் பெரிய சூனியக்காரன், எந்திரம், தந்திரம், மந்திரம் எல்லாம் தெரியும், அவனுக்கு இவமேலே ஒரு கண்ணு. ஆனு இந்தப் பெண்ணுக்கு மந்திரி மவனெக் கட்டிக்கிடணும்னு ஆசை.

இது அவனுக்குத் தெரிஞ்சுபோச்சு; யாருக்குத் தெரிஞ்சு போச்சு?—அந்தக் குருவுக்கு......"

என்ன அதிசயம்! நான் அவள் சொல்லிக் கொண்டிருக்கும் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கிறேனு அல்லது கையில் உள்ள புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கிறேனு? கையிலிருப்பது 'சரித்திர சாசனங்கள்' என்ற இங்கிலீஷ் புஸ்தகம் அதிலே வாராணசி மகாராஜன் மகளின் கதை என் கண்ணுக்கெதிரே அச்செழுத்துக்களில் விறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தது. கையில் விரித்துவைத்த பக்கத்தில் கடைசி வாக்கியம், 'அந்த மந்திர வாதிக்கு அது தெரிந்துவிட்டது' என்ற சொற்றெடரின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு. மூளை சுழன்றது. நெற்றியில் வியர்வை அரும்பியது. என்ன, எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா! பிரித்துப் பிடித்து வைத்திருந்த பக்கத்திலேயே கண்களைச் செருகி யிருந்தேன். எழுத்துக்கள் மங்க ஆரம்பித்தன.

திடீரென்று ஒரு பேய்ச்சிரிப்பு! வெடிபடும் அதிர்ச்சியோடு என் மனதை அப்படியே கவ்வி உறிஞ்சியது. அதிர்ச்சியில் தலையை நிமிர்த்தினேன். எனது பார்வை நிலைக் கண்ணுடியில் விழுந்தது. அதனுள், ஒரு கோர உருவம் பல்லைத் திறந்து உன்மத்த வெறியில் சிரித்துக்கொண்டிருந்தது. எத்தனையோ மாதிரியான கோர உருவங் களைக் கனவிலும், சிற்பிகளின் செதுக்கி வைத்த கற்பனைகளிலும் பார்த்திருக்கிறேன். ஆனல் இந்தமாதிரி ஒரு கோரத்தைக் கண்டதே இல்லை. குரூபமெல்லாம் பற்களிலும் கண்களிலுமே தெறிந்தது. முகத்தில் மட்டும் மோக லாகிரியை எழுப்பும் அற்புதமான அமைதி. கண்களிலே ரத்தப் பசி! பற்களிலே சதையைப் பிய்த்துத் தின்னும் ஆவல். இந்த மங்கலான பிம்பத்துக்குப் பின்னல் அடுப்பு நெருப்பின் தீ நாக்குகள். வசமிழந்து அதையே பார்த்துக்கொண்டிருந்தேன். தோற்றம் கணத்தில் மறைந்தது; அடுத்த நிமிஷம் அந்தப் பிச்சைக் காரியின் முகமே தெரிந்தது.

"உன் பெயர் என்ன என்று கேட்க மறந்தே போயிட்டுதே" என்று மனைவி கேட்பது எனது செவிப் புலனுக்கு எட்டியது.

“ காஞ்சனைன்னுதான் கூப்பிடுங்களேன். கதேலெ வர்ற காஞ்சனை மாதிரி, எப்படிக் கூப்பிட்டா என்ன: ஏதோ ஒரு பேரு ” என்ருள் பிச்சைக்காரி.

என் மனைவியைத் தனியாக அங்கு விட்டிருக்க மனம் ஒப்ப வில்லை. என்ன நேரக்கூடுமோ ? பயம் மனசைக் கவ்விக் கொண்டால், வெடவெடப்புக்கு வரம்பு உண்டா ?

நான் உள்ளே போனேன். இருவரும் குசாலாகவே பேசிக் கொண்டிருந்தனர்.

வலுக்கட்டாயத்தின் பேரில் சிரிப்பை வருவித்துக்கொண்டு நுழைந்த என்னை, “ பொம்பளைகள் வேலை செய்கிற எடத்தில் என்ன உங்களுக்காம் ? ” என்ற பாணம் எதிரேற்றது.

காஞ்சனை என்று சொல்லிக்கொண்டவள் குனிந்து எதையோ நறுக்கிக் கொண்டிருந்தாள். விஷமம் துளும்பும் சிரிப்பு அவளது உதட்டின் கோணத்தில் துள்ளாடியது. நான் வேறு ஒன்றும் சொல்ல முடியாமல் புஸ்தகவேலியின் மறைவில் நிற்கும் பாராக் காரன் ஆனேன். மனைவியோ கர்ப்பிணி. அவள் மனசிலேயா பயத்தைக் குடி யேற்றுவது ? அவளை எப்படிக் காப்பாற்றுவது ?

சாப்பிட்டோம். தூங்கச் சென்ருேம். நாங்கள் இருவரும் மாடியில் படுத்துக் கொண்டோம். காஞ்சனை என்பவள் கிழே முன் கூடத்தில் படுத்துக் கொண்டாள்.

நான் படுக்கையில் படுத்துத்தான் கிடந்தேன். இமை மூட முடியவில்லை. எப்படி முடியும் ? எவ்வளவு நேரம் இப்படிக் கிடந்தேனே ? இன்று மறுபடியும் அந்த வாசனை வரப்போகிறதா என்று மனம் படக்குப் படக்கென்று எதிர்பார்த்தது.

எங்கோ ஒரு கடிகாரம் பன்னிரண்டு மணி அடிக்கும் வேலையை ஆரம்பித்தது.

*சீ ! என்ன நாற்றம் !* ஒரே யடியாகப் பிணவாடை அல்லவா அடிக்கிறது ? குமட்டல் எடுக்க, புகையிலையின் கோளாருே என்று, ஜன்னல் பக்கமாகச் சென்று அப்படியே உமிழ்ந்து, வாயை உரசிக் கொப்புளித்துவிட்டு வந்து படுக்கையின்மீது உட்கார்ந்தேன்.

துர்நாற்றம் தாங்க முடியவில்லை, உடல் அழுகி, நாற்றம் எடுத்துப்போன பிணம்போல ; என்ருல் சகிக்க முடியவில்லை. எனக்குப் புரியவில்லை. ஜன்னல் வழியாக நாற்றம் வருகிறதோ ? ஊசிக் காற்றுக்கூட இழைய வில்லையே ! கட்டிலை விட்டு எழுந்திருந்து ஜன்னலின் பக்கம் நடந்தேன். இரண்டடி எடுத்து

வைக்கவில்லை; நாற்றம் அடியோடு மறைந்துவிட்டது. மறுபடியும் நாற்றம். அதே துர்க்கந்தம். கட்டிலின் அடியில் ஏதேனும் செத்துக் கிடக்கிறதோ? விளக்கை ஏற்றினேன். கட்டிலடியில் தூசிதான் தும்மலை வருவித்தது. எழுந்து உடம்பைத் தட்டிக் கொண்டு நின்றேன்.

தும்மல் என் மனைவியை எழுப்பி விட்டது. "என்ன, இன்னுமா உங்களுக்கு உறக்கம் வரவில்லை? மணி என்ன?" என்று கொட்டாவி விட்டாள்.

மணி சரியாகப் பன்னிரண்டு அடித்து ஒரு நிமிஷம் ஆயிற்று.

என்ன அதிசயம்! நாற்றம் இப்பொழுது ஒருவித வாசனையாக மாறியது. ஊதுவத்தி வாசனை; அதுவும் மிகவும் மட்டமான ஊதுவத்தி; பிணத்துக்குப் பக்கத்தில் ஏற்றி வைப்பது.

"உனக்கு இங்கே ஒரு மாதிரி வாசனை தெரியுதா?" என்று கேட்டேன்.

"ஒண்ணும் இல்லியே" என்றாள்.

சற்று நேரம் மோந்து பார்த்துவிட்டு, "ஏதோ லேசா ஊதுவத்தி மாதிரி வாசனை வருது; எங்காவது ஏற்றி வைத்திருப்பார்கள்; எனக்கு உறக்கம் வருது; விளக்கை அணைத்துவிட்டுப் படுங்கள்" என்றாள். வேதாந்த விசாரத்துக்கு மனிதனை இழுத்துக் கொண்டு போகும் தன்னுடைய நளபாக சாதுர்யத்தைப்பற்றி இவள் மனசு கும்மாளி போடுகிறதுபோலும்! தூக்கக் கலக்கத்தில் சிணுங்கிக் கொண்டு புரண்டு படுத்தாள். அவள் மூன்று மாசக் கர்ப்பிணி. நமக்குத்தான் தூக்கம் பிடிக்கவில்லை என்றால், அவளையும் ஏன் எழுப்பி உட்கார்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்?

உடனே விளக்கை அணைத்தேன். எனக்கு எப்போதும் இருட்டில் உட்கார்ந்துகொண்டிருப்பதில் ஒரு நிம்மதி. இருட்டோடு இருட்டாய், நாமும் இருட்டும் ஐக்கியமாய், பிறர் பார்வையில் விழாமல் இருந்து விடலாம் அல்லவா? நாமும் நம் இருட்டுக் கோட்டைக்குள் இருந்துகொண்டு நம் இஷ்டம்போல் மனசு என்ற கட்டை வண்டியை ஓட்டிக்கொண்டு போகலாம் அல்லவா? சாதாரணமாக எல்லோரும் மனசை நினைத்த இடத்துக்கு நினைத்த மாத்திரத்தில் போகும் ரதம் என்று சொல்லுவார்கள். மனித வித்து அநாதி காலந் தொட்டு இன்று வரையில் நினைத்து நினைத்துத் தேய்ந்து தடமாகிவிட்ட பாதையில் தான் இந்தக் கட்டை வண்டி செல்லுகிறது. சக்கரம் உருண்டு உருண்டு பள்ளமாக்கிய பொடிமண் பாதையும் நடுமத்தியில் கால்கள்

அவ்வளவாகப் பாவாத திரட்டுந்தான் உண்டு; ஒவ்வொரு சமயங்களில், சக்கரங்கள் தடம்புரண்டு திரடு ஏறி 'டொடக்' என்று உள்ளே இருக்கிறவர்களுக்கு அதிர்ச்சி கொடுக்கிறதும் உண்டு; மற்றப்படி சாதுவான, ஆபத்தில்லாத மயிலைக்காளைப் பாதை. நினைவுச் சுகத்தில் இருட்டில் சிறிது அதிகமாகச் சுண்ணும்பு தடவி விட்டேன் போலும்! நாக்கு, சுருக்கென்று பொத்துக்கொண்டது. நான் அதைப் பொருட் படுத்துவதில்லை. இருட்டில் வெற்றிலை போடுவது என்றால், அதிலும் மனசை, கயிற்றை முதுகில் போட்டுவிட்டுத் தானே போகும்படி விட்டு விடுவது என்றால், இந்த விபத்துக்களை யெல்லாம் பொருட்படுத் தலாமா? உள்ளங்கையில் கொட்டி வைத்திருந்த புகையிலையைப் பவித்திரமாக வாயில் போட்டுக்கொண்டேன்.

பதினோராவது ரீங்காரம் ஓயவில்லை.

எங்கோ கதவு கிரீச்சிட்டது.

திடீரென்று எனது கைமேல் கூரிய நகங்கள் விழுந்து பிருண்டிக் கொண்டு நழுவின.

நான் உதறியடித்துக்கொண்டு எழுந்தேன். நல்ல காலம்; வாய் உளறவில்லை.

என் மனைவியின் கைதான் அசப்பில் விழுந்து கிடந்தது.

அவளுடையதுதானு?

எழுந்து குனிந்து கவனித்தேன். நிதானமாகச் சுவாசம் விட்டுக் கொண்டு தூங்கினுள்.

கீழே சென்று பார்க்க ஆவல்; ஆனுல் பயம்!

போனேன். மெதுவாகக் கால் ஓசைப்படாமல் இறங்கினேன்.

ஒரு யுகம் கழிந்த மாதிரி இருந்தது.

மெதுவாக முன் கூடத்தை எட்டிப் பார்த்தேன். வெளிவாசல் சார்த்திக் கிடந்தது. அருகிலிருந்த ஜன்னல் வழியாக விழுந்த நிலா வெளிச்சம், காலியாகக் கிடக்கும் பாயையும் தலையணையையும் சுட்டிக் காட்டியது.

கால்கள் எனக்குத் தரிக்கவில்லை. வெடவெட வென்று நடுங்கின.

திரும்பாமலே பின்னுக்குக் காலடி வைத்து நடந்து மாடிப்படி யருகில் வந்தேன். உயரச் சென்று விட்டாளோ?

விடு விடு என்று மாடிக்குச் சென்றேன்.

அங்கே அமைதி.

பழைய அமைதி.

மனம் தெளியவில்லை.

மாடி ஜன்னலருகில் நின்று நிலா வெளிச்சத்தை நோக்கினேன்.

மனித நடமாட்டம் இல்லை.

எங்கோ ஒரு நாய் மட்டும் அழுது பிலாக்கணம் தொடுத்து ஒடுங்கியது.

பிரம்மாண்டமான வௌவால் ஒன்று வானத்தில் எதிர்கோணத்திலிருந்து எங்கள் வீடுநோக்கிப் பறந்து வந்தது.

வெளியே பார்க்கப் பார்க்கப் பயம் தெளிய ஆரம்பித்தது. என்னுடைய மனப்பிரமை அது என்று நிதானத்துக்கு வந்தேன்.

ஆனால் கீழே !

மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

கீழே இறங்கினேன்.

தைரியமாகச் சொல்ல முடியவில்லை.

அதோ ! காஞ்சனை பாயில் உட்கார்ந்துதான் இருக்கிறாள். என்னைப் பார்த்துச் சிரித்தாள், விஷச் சிரிப்பு. உள்ளமே உறைந்தது. நிதானமாக இருப்பவனைப் போலப் பாசாங்கு செய்து கொண்டு, "என்ன, தூக்கம் வரவில்லையா ?" என்று முணு முணுத்துக் கொண்டு மாடிப்படிகளில் ஏறினேன்.

அப்பொழுது சாம்பிராணி வாசனை வந்ததா? வந்தது போலத்தான் ஞாபகம்.

நான் எழுந்திருக்கும் போது நெடு நேரமாகி விட்டது.

"என்ன, வரவரத்தான், இப்படித் தூங்கித் தொலைக்கிறது ; காப்பி ஆறுது !" என்று என் மனைவி எழுப்பினாள்.

## 3

இருட்டுக்கும் பயத்துக்கும் ஒளிவிடம் இல்லாத பகலிலே எல்லாம் வேறு மாதிரியாகத்தான் தோன்றுகிறது. ஆனால், மனசின் ஆழத்திலே, அந்தப் பயம் வேரூன்றி விட்டது. இந்த ஆபத்தை எப்படிப் போக்குவது ?

தன் மனைவி சோரம் போகிறாள் என்ற மனக் கஷ்டத்தை, தன்னைத் தேற்றிக் கொள்வதற்காக வேறு யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியுமா ? அதேமாதிரிதான் இதுவும். என்னைப் போன்ற ஒருவன் ஜன சமுதாயத்துக்காக இலக்கிய சேவை செய்கிறேன் என்று

தம்பட்டம் அடித்துக்கொண்டு மனப்பால் குடித்துக்கொண்டிருக்கும் ஒருவன், "ஸார், எங்கள் வீட்டில் புதுசாக ஒரு பேய் குடிவந்து விட்டது. அது என் மனைவியை என்ன செய்யுமோ என்று பயமாக இருக்கிறது; ஆபத்தைப் போக்க உங்களுக்கு ஏதாவது வழி தெரியுமா ?" என்று கேட்டால், நான் நையாண்டி செய்கிறேனு அல்லது எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்று தான் சந்தேகிப்பான். யாரிடம் இந்த விவகாரத்தைச் சொல்லி வழி தேடுவது? எத்தனை நாட்கள் நான் பாராக் கொடுத்துக் கொண் டிருக்க முடியும் ?

இது எந்த விபரீதத்தில் கொண்டுபோய் விடுமோ? சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல், திண்டாடிக்கொண்டிருந்தேன். என் மனைவிக்கு அந்தப் புதிய வேலைக்காரி என்ன சொக்குப் பொடி போட்டு விட்டாளோ ? அவர்கள் இருவரும் மனசில் துளிகூடப் பார மில்லாமல் கழித்துவிட்டார்கள்.

இன்றைப் பார்த்துப் பகலும் இராத்திரியை விரட்டிக்கொண்டு ஓடிவந்தது. இவ்வளவு வேகமாகப் பொழுது கழிந்ததை நான் ஒரு நாளும் அநுபவித்ததில்லை.

இரவு படுக்கப் போகும் போது என் மனைவி, "காஞ்சனை, இன்றைக்கு மாடியிலேயே நமக்கு அடுத்த அறையில் படுத்துக் கொள்ளப்போகிருள்" என்று கூறிவிட்டாள். எனக்கு மடியில் நெருப்பைக் கட்டியதுபோல ஆயிற்று.

இது என்ன சூழ்ச்சி !

இன்று தூங்குவதே இல்லை. இரவு முழுவதும் உட்கார்ந்தே கழிப்பது என்று தீர்மானித்தேன்.

"என்ன படுக்கலியா ?" என்ருள் என் மனைவி.

"எனக்கு உறக்கம் வரவில்லை" என்றேன். மனசுக்குள் வல் லூட்டிகளாகப் பயம் குத்தித் தைத்து வாங்கியது.

"உங்கள் இஷ்டம்" என்று திரும்பிப் படுத்தாள். அவ்வளவு தான். நல்ல தூக்கம்; அது வெறும் உறக்கமா ?

நானும் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துப்போனேன்.

சற்றுப் படுக்கலாம் என்று உடம்பைச் சாய்த்தேன்.

பன்னிரண்டு மணி அடிக்க ஆரம்பித்தது.

இதென்ன வாசனை !

பக்கத்தில் படுத்திருந்தவள் அமானுஷ்யக் குரலில் வீரிட்டுக் கத்தினுள்; வார்த்தைகள் ரூபத்தில் வரும் உருவற்ற குரல்களுக்கு

இடையே காஞ்சனை என்ற வார்த்தை ஒன்றுதான் புரிந்தது.

சட்டென்று விளக்கைப் போட்டுவிட்டு அவளை எழுப்பி எழுப்பி உருட்டினேன்.

பிரக்ஞை வரவே, தள்ளாடிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள், "ஏதோ ஒன்று என் கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சின மாதிரி இருந்தது" என்றாள் கண்களைத் துடைத்துக்கொண்டு.

கழுத்தைக் கவனித்தேன். குரல்வளையில் குண்டூசி நுனிமாதிரி ரத்தத்துளி இருந்தது. அவள் உடம்பெல்லாம் நடுங்கியது.

"பயப்படாதே எதையாவது நினைத்துக்கொண்டு படுத்திருப்பாய்" என்று மனமறிந்தும் பொய் சொன்னேன்.

அவள் உடம்பு நடுநடுங்கிக்கொண்டிருந்தது. மயங்கிப்படுக்கையில் சரிந்தாள்.

அதே சமயத்தில் வெளியில் சேமக்கலச் சப்தம் கேட்டது.

கர்ணகடூரமான குரலில் ஏதோ ஒரு பாட்டு.

அதிகாரத் தோரணையிலே, "காஞ்சனை! காஞ்சனை!!" என்ற குரல்.

என் வீடே கிடுகிடாய்த்துப் போகும்படியான ஓர் அலறல்: கதவுகள் படபடவென்று அடித்துக் கொண்டன.

அப்புறம் ஓர் அமைதி. ஒரு சுடுகாட்டு அமைதி.

நான் எழுந்து வெளிவாசலின் பக்கம் எட்டிப் பார்த்தேன்.

நடுத்தெருவில் ஒருவன் நின்றிருந்தான். அவனுக்கு என்ன மிடுக்கு!

" இங்கே வா " என்று சமிக்ஞை செய்தான்.

நான் செயலற்ற பாவைபோலக் கீழே இறங்கிச் சென்றேன்.

போகும்போது காஞ்சனை இருந்த அறையைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. நான் எதிர்பார்த்தபடியே தான் இருந்தது. அவள் இல்லை.

தெருவிற்குப் போனேன்.

" அம்மா நெத்தியிலே இதைப் பூசு. காஞ்சனை இனிமேல் வர மாட்டாள். போய் உடனே பூசு. அம்மாவை எளுப்பாதே" என்றான்.

விபூதி சுட்டது.

நான் அதைக் கொண்டுவந்து பூசினேன், அவள் நெற்றியில். அது வெறும் விபூதிதானா: எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. அவன் கையில் சேமக்கலம் இல்லை என்பதும் ஞாபகம் இருக்கிறதே!

மூன்று நாட்கள் கழிந்துவிட்டன.

காலையில் காப்பி கொடுக்கும்போது, " இந்த ஆம்பிளைகளே இப்படித்தான்!" என்றாள் என் மனைவி. இதற்கு என்ன பதில் சொல்ல?

# கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்

மேலகரம் மே. க. ராமசாமிப் பிள்ளை அவர்களின் ஏகபுத்திரனும் செல்லப்பா என்பவருமான மேலகரம் மே. க. ரா. கந்தசாமிப் பிள்ளை யவர்கள் 'பிராட்வே'யும் 'எஸ்பிளனேடு'ம் கூடுகிற சந்தியில் ஆபத்தில்லாத ஓரத்தில் நின்றுகொண்டு வெகு தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். 'டிராமில் ஏறிச்சென்ருல் ஒன்ரே காலணு. காலணு மிஞ்சும். பக்கத்துக் கடையில் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு விட்டுக்கு நடந்து விடலாம். பஸ்ஸில் ஏறிக் கண்டக்டரை ஏமாற்றிக்கொண்டே ஸென்ட்ரலைக் கடந்து விட்டு அப்புறம் டிக்கட் வாங்கித் திருவல்லிக்கேணிக்குப் போனுல் அரைக் 'கப்' காபி குடித்து விட்டு வீட்டுக்குப் போகலாம்; ஆனுல் வெற்றிலை கிடையாது...

'கண்டக்டர்தான் என்னை ஏமாற்று ஏமாற்று என்று வெற்றிலை வைத்து அழைக்கும்போது அவனை ஏமாற்றுவது, அதாவது அவனை ஏமாருமல் ஏமாற்றுவது தர்ம விரோதம். நேற்று அவன் அப்படிக் கேட்டபடி ஸென்ட்ரலிலிருந்து மட்டும் கொடுத்திருந்தால் காப்பி சாப்பிட்டிருக்கலாம்.

'இப்பொழுது காப்பி சாப்பிட்டால் கொஞ்சம் விறு விறுப்பாகத் தான் இருக்கும்.'

இப்படியாக மேற்படியூர் மேற்படி விலாசப் பிள்ளையவர்கள் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுதுதான் அவருக்குக் கடவுள் பிரசன்னமானுர்.

திடீரென்று அவருடைய புத்தி பரவசத்தால் மருளும்படித் தோன்றி, "இந்தா, பிடி வரத்தை" என்று வற்புறுத்தவில்லை.

"ஐயா, திருவல்லிக்கேணிக்கு எப்படிப் போகிறது?" என்றுதான் கேட்டார்.

"டிராமிலும் போகலாம், பஸ்சிலும் போகலாம், கேட்டுக் கேட்டு நடந்தும் போகலாம்; மதுரைக்கு வழி வாயிலே" என்ருர் ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை.

"நான் மதுரைக்குப் போகவில்லை; திருவல்லிக் கேணிக்குத்தான்

வழி கேட்டேன் ; எப்படிப்போனால் சுருக்க வழி ?" என்றார் கடவுள் இரண்டுபேரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

சாடி மோதித் தள்ளிக்கொண்டு நடமாடும் ஜனக் கூட்டத்திலிருந்து விலகி செருப்புரிப்பேர் செய்யும் சக்கிலியன் பக்கமாக இருவரும் ஒதுங்கி நின்றார்கள்.

மேலகரம் ராமசாமிப் பிள்ளையின் வாரிசுக்கு நாற்பத்தைந்து வயசு ; நாற்பத்தைந்து வருஷங்களாக அன்ன ஆகாரமில்லாமல் வளர்ந்தவர் போன்ற தேகக் கட்டு ; சில கறுப்பு மயிர்களும் உள்ள நரைத்த தலை ; இரண்டு வாரங்களாக க்ஷவரம் செய்யாத முகவெட்டு ; எந்த ஜனக் கும்பலிலும், எவ்வளவு தூரத்திலும் போகும் நண்பர்களையும் கொத்திப் பிடிக்கும் அதி தீட்சண்யமான கண்கள் ; காரிக்கம் ஷர்ட், காரிக்கம் வேஷ்டி, காரிக்கம் மேல் அங்க வஸ்திரம்.

வழி கேட்டவரைக் கந்தசாமி பிள்ளை கூர்ந்து கவனித்தார். வயசை நிர்ணயமாகச் சொல்ல முடியவில்லை. அறுபது இருக்கலாம், அறுபதினாயிரமும் இருக்கலாம். ஆனால் அத்தனை வருஷமும் சாப்பாட்டுக் கவலையே இல்லாமல் கொழுகொழு என்று வளர்ந்த மேனி வளப்பம்.

தலையிலே துளிக்கூடக் கறுப்பில்லாமல் நரைத்த சிகை, கோதிக் கட்டாமல் சிங்கத்தின் பிடரிமயிர் மாதிரி கழுத்தில் விழுந்து சிலிர்த்துக்கொண்டு நின்றது. கழுத்திலே நட்ட நடுவில் பெரிய கறுப்பு மறு. கண்ணும் கன்னங்கரேலென்று, நாலு திசையிலும் சுழன்று, சுழன்று வெட்டியது. சில சமயம் வெறியனுடையது போலக் கவிழ்ந்தது. சிரிப்பு ?—அந்தச் சிரிப்பு, கந்தசாமிப் பிள்ளையைச் சில சமயம் பயமுறுத்தியது. சில சமயம் குழந்தை யுடையதைப் போலக் கொஞ்சியது.

"ரொம்பத் தாகமாக இருக்கிறது" என்றார் கடவுள்.

"இங்கே ஜலம் கிலம் கிடைக்காது ; வேணுமென்றால் காப்பி சாப்பிடலாம் ; அதோ இருக்கிறது காப்பி ஹோட்டல்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"வாருங்களேன், அதைத்தான் சாப்பிட்டுப் பார்ப்போம்" என்றார் கடவுள்.

கந்தசாமிப் பிள்ளை பெரிய அபேதவாதி. அன்னியர், தெரிந்தவர் என்ற அற்ப பேதங்களைப் பாராட்டுகிறவர் அல்லர்.

"சரி, வாருங்கள் போவோம்" என்றார், 'பில்லை நம் தலையில் கட்டிவிடப் பார்த்தால் ?' என்ற சந்தேகம் தட்டியது. 'துணிச்சல்

இல்லாதவரையில் துன்பந்தான்' என்பது கந்தசாமிப் பிள்ளையின் சங்கற்பம்.

இருவரும் ஒரு பெரிய ஹோட்டலுக்குள் நுழைந்தனர். கடவுள் கந்தசாமிப் பிள்ளையின் பின்புறமாக ஒண்டிக்கொண்டு பின் தொடர்ந்தார்.

இருவரும் ஒரு மேஜையருகில் உட்கார்ந்தார்கள். பையனுக்கு மனப்பாடம் ஒப்பிக்க இடங் கொடுக்காமல்,

"சூடா, ஸ்ட்ராங்கா இரண்டு கப் காப்பி!" என்று தலையை உலுக்கினார் கந்தசாமிப் பிள்ளை.

"தமிழை மறந்துவிடாதே. இரண்டு கப் காப்பிகள் என்று சொல்" என்றார் கடவுள்.

"அப்படி அல்ல; இரண்டு கப்கள் காப்பி என்று சொல்ல வேண்டும்" என்று தமிழ்க் கொடி நாட்டினார் பிள்ளை.

முறியடிக்கப்பட்ட கடவுள் அண்ணாந்து பார்த்தார். "நல்ல உயரமான கட்டடமாக இருக்கிறது; வெளிச்சமும் நன்றாக வருகிறது" என்றார்.

"பின்னே பெரிய ஹோட்டல் கோழிக் குடில் மாதிரி இருக்குமோ? கோவில் கட்டுகிறதுபோல என்று நினைத்துக்கொண்டீராக்கும்! சுகாதார உத்தியோகஸ்தர்கள் விடமாட்டார்கள்" என்று தமது வெற்றியைத் தொடர்ந்து முடுக்கினார் பிள்ளை.

கோவில் என்ற பதம் காதில் விழுந்ததும் கடவுளுக்கு உடம்பெல்லாம் நடுநடுங்கியது.

"அப்படி என்றால்......?" என்றார் கடவுள். தோற்றாலும் விடவில்லை. "சுகாதாரம் என்றால் என்ன என்று சொல்லும்?" என்று கேட்டார் கடவுள்.

"ஓ! அதுவா? மேஜையை லோஷன் போட்டுக் கழுவி, உத்யோகஸ்தர்கள் அபராதம் போடாமல் பார்த்துக் கொள்வது. பள்ளிக்கூடத்திலே, பரீட்சையில் பையன்கள் தோற்றுப் போவதற்கென்று சொல்லிக் கொடுக்கும் ஒரு பாடம்; அதன்படி இந்த ஈ, கொசு எல்லாம் ராக்ஷசர்களுக்குச் சமானம். அதிலும் இந்த மாதிரி ஹோட்டல்களுக்குள்ளே வந்து விட்டால் ஆபத்துத்தான். உயிர் தப்பாது என்று எழுதியிருக்கிறார்கள்" என்றார் கந்தசாமிப் பிள்ளை. அவருக்கே அதிசயமாக இருந்தது இந்தப் பேச்சு. நாக்கில் சரஸ்வதி கடாட்சம் ஏற்பட்டு விட்டதோ என்று சந்தேகித்தார்.

கடவுள் அவரைக் கவனிக்கவில்லை. இவர்கள் வருவதற்கு முன் ஒருவர் சிந்திவிட்டுப் போன காப்பியில் சிக்கிக்கொண்டு தவிக்கும் ஈ

ஒன்றைக் கடவுள் பார்த்துக் கொண்டே இருந்தார். அது முக்கி முனகி ஈரத்தை விட்டு வெளியே வர முயன்றுகொண்டிருந்தது.

"இதோ இருக்கிறதே!" என்றார் கடவுள். உதவி செய்வதற்காக விரலை நீட்டினார். அது பறந்து விட்டது. ஆனால் எச்சில் காப்பி அவர் விரலில் பட்டது.

"என்ன ஐயா, எச்சிலைத் தொட்டு விட்டீரே...இந்த ஜலத்தை எடுத்து மேஜைக்குக் கீழே கழுவும்" என்றார் பிள்ளை.

"ஈயை வர விடக்கூடாது, ஆனால் மேஜையின் கீழே கழுவ வேண்டும் என்பது சுகாதாரம்" என்று முனகிக் கொண்டார் கடவுள்.

பையன் இரண்டு 'கப்' காப்பி கொண்டு வந்து வைத்தான்.

கடவுள் காப்பியை எடுத்துப் பருகினார். சோமபானம் செய்த தேவகளை முகத்தில் தெறித்தது.

"நம்முடைய லீலை" என்றார் கடவுள்.

"உம்முடைய லீலை இல்லைங்காணும், ஹோட்டல்காரன் லீலை. அவன் சிக்கரிப் பவுடரைப் போட்டு வைத்திருக்கான்; உம்முடைய லீலை எல்லாம் பில் கொடுக்கிற படலத்திலே" என்று காதோடு காதாய்ச் சொன்னார் கந்தசாமிப் பிள்ளை. சூசகமாகப் பில் பிரச்னையைத் தீர்த்து விட்டதாக அவருக்கு ஓர் எக்களிப்பு.

"சிக்கரிப் பவுடர் என்றால்...?" என்று சற்றுச் சந்தேகத்துடன் தலையை நிமிர்த்தினார் கடவுள்.

"சிக்கரிப் பவுடர், காப்பி மாதிரிதான் இருக்கும்; ஆனால் காப்பி அல்ல; சில பேர் தெய்வத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு ஊரை ஏமாற்றி வருகிற மாதிரி" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

தெய்வம் என்றதும் திடுக்கிட்டார் கடவுள்.

பெட்டியடியில் பில்லைக் கொடுக்கும்பொழுது, கடவுள் புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினார்; கந்தசாமிப் பிள்ளை திடுக்கிட்டார்.

"சில்லறை கேட்டால் தரமாட்டேனா? அதற்காக மூன்றணா பில் எதற்கு? கண்ணைத் துடைக்கவா, மனசைத் துடைக்கவா?" என்றார் ஹோட்டல் சொந்தக்காரர்.

"நாங்கள் காப்பி சாப்பிடத்தான் வந்தோம்" என்றார் கடவுள்.

"அப்படியானால் சில்லறையை வைத்துக்கொண்டு வந்திருப்பீர்களே?" என்றார் ஹோட்டல் முதலாளி. அதற்குள் சாப்பிட்டு விட்டு வெளியே காத்திருப்போர் கூட்டம் ஜாஸ்தியாக, வீண்

கலாட்டா வேண்டாம் என்று சில்லறையை எண்ணிக் கொடுத்தார். "தொண்ணூற்று ஒன்பது ரூபாய் பதிமூன்று சரியா? பார்த்துக்கொள்ளும் சாமியாரே!"

"நீங்கள் சொல்லிவிட்டால் நமக்கும் சரிதான்; எனக்குக் கணக்கு வராது" என்றார் கடவுள்.

ஒரு போலிப் பத்து ரூபாய் நோட்டைத் தள்ளிவிட்டதில் கடைக்காரருக்கு ஒரு திருப்தி.

வெளியே இருவரும் வந்தார்கள். வாசலில் அவ்வளவு கூட்டமில்லை. இருவரும் நின்றார்கள்.

கடவுள், தம் கையில் கற்றையாக அடுக்கியிருந்த நோட்டுக்களில் ஐந்தாவது மட்டும் எடுத்தார். சுக்கு நூறாகக் கிழித்துக் கீழே எறிந்தார்.

கந்தசாமிப் பிள்ளைக்கு, பக்கத்தில் நிற்பவர் பைத்தியமோ என்ற சந்தேகம். திடுக்கிட்டு வாயைப் பிளந்துகொண்டு நின்றார்.

"கள்ள நோட்டு; என்னை ஏமாற்றப் பார்த்தான்; நான் அவனை ஏமாற்றிவிட்டேன்" என்றார் கடவுள். அவருடைய சிரிப்பு பயமாக இருந்தது.

"என் கையில் கொடுத்தால், பாப்பான் குடுமியைப் பிடித்து மாற்றிக்கொண்டு வந்திருப்பேனே!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"சிக்கிரிப் பவுடருக்கு நீர் உடன்பட்டீரா இல்லையா? அந்த மாதிரி இதற்கு நான் உடன்பட்டேன் என்று வைத்துக் கொள்ளும். அவனுக்குப் பத்து ரூபாய்தான் பெரிசு; அதனால் தான் அவனை ஏமாற்றும்படி விட்டேன்" என்றார் கடவுள்.

வலிய வந்து காப்பி வாங்கிக் கொடுத்தவரிடம் எப்படி விடை பெற்றுக்கொள்ளுவது என்று பட்டது கந்தசாமிப் பிள்ளைக்கு.

"திருவல்லிக்கேணிக்குத்தானே? வாருங்கள் டிராமில் ஏறுவோம்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"அது வேண்டாம்; எனக்குத் தலை சுற்றும்; மெதுவாக நடந்தே போய்விடலாம்" என்றார் கடவுள்.

"ஐயா, நான் பகலெல்லாம் காலால் நடந்தாச்சு. என்னால் அடி எடுத்துவைக்கமுடியாது; ரிக்ஷாவிலே ஏறிப்போகலாமே" என்றார் கந்தசாமிப் பிள்ளை, "நாம்தான் வழி காட்டுகிறோமே; பத்து ரூபாய் நோட்டைக் கிழிக்கக் கூடியவர் கொடுத்தால் என்ன?" என்பதுதான் அவருடைய கட்சி.

"நர வாகனமா? அதுதான் சிலாக்கியமானது" என்றார் கடவுள்.

இரண்டு பேரும் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டார்கள். "சாமி,

கொஞ்சம் இருங்க; வெளக்கை ஏத்திக்கிறேன்" என்றான் ரிக்ஷாக்காரன்.

பொழுது மங்கி, மின்சார வெளிச்சம் மிஞ்சியது.

"இவ்வளவு சீக்கிரத்தில் அன்னியோன்னியமாகிவிட்டோமே! நீங்கள் யார் என்றுகூட எனக்குத் தெரியாது; நான் யார் என்று உங்களுக்குத் தெரியாது. பட்டணத்துச் சந்தை இரைச்சலிலே, இப்படிச் சந்திக்க வேண்டும் என்றால்......"

கடவுள் சிரித்தார். பல், இருட்டில் மோகனமாக மின்னியது. "நான் யார் என்பது இருக்கட்டும், நீங்கள் யார் என்பதைச் சொல்லுங்களேன்" என்றார் அவர்.

கந்தசாமிப் பிள்ளைக்குத் தம்மைப்பற்றிச் சொல்லிக் கொள்வதில் எப்பொழுதுமே ஒரு தனி உத்ஸாகம். அதிலும் ஒருவன் ஓடுகிற ரிக்ஷாவில் தம்மிடம் அகப்பட்டுக்கொண்டால் விட்டுவைப்பாரா? கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

"சித்த வைத்திய தீபிகை என்ற வைத்தியப் பத்திரிகையைப் பார்த்ததுண்டா?" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

"இல்லை" என்றார் கடவுள்.

"அப்பொழுது வைத்திய சாஸ்திரத்தில் பரிசயமில்லை என்று தான் கொள்ள வேண்டும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"பரிசயம் உண்டு" என்றார் கடவுள்.

'இதென்னடா சங்கடமாக இருக்கிறது?' என்று யோசித்தார் கந்தசாமிப் பிள்ளை. "உங்களுக்கு வைத்திய சாஸ்திரத்தில் பரிசயமுண்டு; ஆனால் சித்த வைத்திய தீபிகையுடன் பரிசயமில்லை என்று கொள்வோம்; அப்படியாயின் உங்கள் வைத்திய சாஸ்திர ஞானம் பரிபூர்ணமாகவில்லை. நம்மிடம் பதினேழு வருஷத்து இதழ்களும் பைண்டு வால்யூம்களாக இருக்கின்றன. நீங்கள் அவசியம் வீட்டுக்கு ஒருமுறை வந்து அவற்றைப் படிக்கவேண்டும்; அப்பொழுதுதான்......"

"பதினேழு வருஷ இதழ்களா! பதினேழு பன்னிரண்டு இருநூற்று நாலு." கடவுள் மனசு நடுநடுங்கியது. 'ஒருவேளை கால் வருஷம் ஒருமுறைப் பத்திரிகையாக இருக்கலாம்' என்ற ஓர் அற்ப நம்பிக்கை தோன்றியது.

"தீபிகை மாதம் ஒரு முறைப் பத்திரிகை. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் ஒன்று; வெளிநாடு என்றால் இரண்டே முக்கால்; ஜீவிய சந்தா ரூபாய் 25. நீங்கள் சந்தாதாராகச் சேர்ந்தால் ரொம்பப் பிரயோஜனம் உண்டு; வேண்டுமானால் ஒரு வருஷம்

உங்களுக்கு அனுப்புகிறேன். அப்புறம் ஜீவிய சந்தாவைப் பார்க்கலாம்'' என்று கடவுளைச் சந்தாதாராகச் சேர்க்கவும் முயன்றார்.

'பதினேழு வால்யூம்கள் தவிர, இன்னும் இருபத்தைந்து ரூபாயை வாங்கிக்கொண்டு ஓட ஓட விரட்டலாம் என்று நினைக்கிறாரா? அதற்கு ஒரு நாளும் இடம் கொடுக்கக் கூடாது' என்று யோசித்துவிட்டு, ''யாருடைய ஜீவியம்?'' என்று கேட்டார் கடவுள்.

''உங்கள் ஆயுள்தான். என் ஆயுளும் அல்ல. பத்திரிகை ஆயுளும் அல்ல; அது அழியாத வஸ்து. நான் போனாலும் வேறு ஒருவர் சித்தவைத்திய தீபிகையை நடத்திக்கொண்டுதான் இருப்பார்; அதற்கும் ஏற்பாடு பண்ணியாச்சு'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

இந்தச் சமயம் பார்த்து ரிக்ஷாக்காரன் வண்டி வேகத்தை நிதான மாக்கிவிட்டுப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான்.

வேகம் குறைந்தால் எங்கே வண்டியில் இருக்கிற ஆசாமி குதித்து ஓடிப்போவாரோ என்று கந்தசாமிப் பிள்ளைக்குப் பயம்.

''என்னடா திரும்பிப் பாக்கிறே? மோட்டார் வருது மோதிக் காதே; வேகமாகப் போ'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''என்ன சாமி, நீங்க என்ன மனுசப்பெறவியா அல்லது பிசாசுங் களா? வண்டிலே ஆளே இல்லாத மாதிரி காத்தாட்டம் இருக்கு'' என்றான் ரிக்ஷாக்காரன்.

''வாடகையும் காத்தாட்டமே தோணும்படி குடுக்கிறோம்; நீ வண்டியே இஸ்துக்கினு போ'' என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

''தவிரவும் நான் வைத்தியத் தொழிலும் நடத்தி வருகிறேன்; சித்த முறைதான் அநுஷ்டானம். வைத்தியத்திலே வருவது பத்திரி கைக்கும், குடும்பத்துக்கும் கொஞ்சம் குறையப் போதும். இந்த இதழிலே ரசக் கட்டைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கேன்; பாருங்கோ, நமக்கு ஒரு பழைய சுவடி ஒன்று கிடைத்தது; அதிலே பல அபூர்வப் பிரயோகம் எல்லாம் சொல்லியிருக்கு'' என்று ஆரம்பித்தார் கந்தசாமிப் பிள்ளை.

'ஏதேது, மகன் ஓய்கிற வழியாய்க் காணமே' என்று நினைத்தார் கடவுள். ''தினம் சராசரி எத்தனை பேரை வேட்டு வைப்பீர்?'' என்று கேட்டார்.

''பெருமையாகச் சொல்லிக்கொள்ளும்படி அவ்வளவு ஒன்றுமில்லை. மேலும் உங்களுக்கு, நான் வைத்தியத்தை ஜீவனோபாயமாக வைத்

திருக்கிறேன் என்பது ஞாபகம் இருக்கவேண்டும். வியாதியும் கூடுமானவரையில் அகன்று விடக்கூடாது. ஆசாமியும் தீர்ந்து விடக்கூடாது; அப்பொழுதுதான், சிகிச்சைக்கு வந்தவனிடம் வியாதியை ஒரு வியாபாரமாக வைத்து நடத்த முடியும். ஆள் அல்லது வியாதி என்று முரட்டுத்தனமாகச் சிகிச்சை பண்ணினால், தொழில் நடக்காது. வியாதியும் வேகம் குறைந்து படிபடியாய்க் குணமாக வேண்டும்; மருந்தும் வியாதிக்கோ மனுஷனுக்கோ கெடுதல் தந்து விடக்கூடாது. இதுதான் வியாபார முறை. இல்லாவிட்டால் இந்தப் பதினேழு வருஷங்களாகப் பத்திரிகை நடத்திக் கொண்டிருக்க முடியுமா?" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் விஷயம் புரிந்தவர்போலத் தலையை ஆட்டினார்.

"இப்படி உங்கள் கையைக் காட்டுங்கள், நாடி எப்படி அடிக்கிறது என்று பார்ப்போம்" என்று கடவுளின் வலது கையைப் பிடித்தார் கந்தசாமிப் பிள்ளை.

"ஓடுகிற வண்டியில் இருந்துகொண்டா?" என்று சிரித்தார் கடவுள்.

"அது வைத்தியனுடைய திறமையைப் பொறுத்தது" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

நாடியைச் சில விநாடிகள் கவனமாகப் பார்த்தார். "பித்தம் ஏறி அடிக்கிறது; விஷப் பிரயோகமும் பழக்கம் உண்டா?" என்று கொஞ்சம் விநயத்துடன் கேட்டார் பிள்ளை.

"நீ கெட்டிக்காரன்தான்; வேறும் எத்தனையோ உண்டு" என்று சிரித்தார் கடவுள்.

"ஆமாம், நாம் என்னத்தை யெல்லாமோ பேசிக்கொண்டிருக்கிறோம்: அதிருக்கட்டும், திருவல்லிக்கேணியில் எங்கே?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"ஏழாம் நம்பர் வீடு, ஆபீஸ் வெங்கடாசல முதலி சந்து" என்றார் கடவுள்.

"அடெடெ! அது நம்ம விலாசமாச்சே; அங்கே யாரைப் பார்க்க வேண்டும்?"

"கந்தசாமிப் பிள்ளையை!"

"சரியாப் போச்சு, போங்க; நான்தான் அது. தெய்வந்தான் நம்மை அப்படிச் சேர்த்துவைத்திருக்கிறது. தாங்கள் யாரோ? இனம் தெரியவில்லையே?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"நானா? கடவுள்!" என்றார் சாவகாசமாக, மெதுவாக. அவர் வானத்தைப் பார்த்துக்கொண்டு தாடியை நெருடினார்.

கந்தசாமிப் பிள்ளை திடுக்கிட்டார். கடவுளாவது, வருவதாவது!

"பூலோகத்தைப் பார்க்க வந்தேன்; நான் இன்னும் சில நாட்களுக்கு உம்முடைய அதிதி."

கந்தசாமிப் பிள்ளை பதற்றத்துடன் பேசினார். "எத்தனை நாள் வேண்டுமானாலும் இரும்; அதற்கு ஆட்சேபம் இல்லை. நீர்மட்டும் உம்மைக் கடவுள் என்று தயவுசெய்து வெளியில் சொல்லிக் கொள்ள வேண்டாம்; உம்மைப் பைத்தியக்காரன் என்று நினைத்தாலும் பரவாயில்லை. என்னை என் வீட்டுக்காரி அப்படி நினைத்துவிடக் கூடாது" என்றார்.

"அந்த விளக்குப் பக்கத்தில் நிறுத்துடா" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

வண்டி நின்றது. இருவரும் இறங்கினார்கள்.

கடவுள் அந்த ரிக்ஷாக்காரனுக்குப் பளபளப்பான ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

"நல்லா இருக்கணும் சாமி" என்று உள்ளம் குளிரச் சொன்னான் ரிக்ஷாக்காரன்.

கடவுளை ஆசீர்வாதம் பண்ணுவதாவது!

"என்னடா, பெரியவரைப் பாத்து நீ என்னடா ஆசீர்வாதம் பண்ணுவது?" என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

"அப்படிச் சொல்லடா அப்பா; இத்தனை நாளா காது குளிர மனசு குளிர இந்தமாதிரி ஒரு வார்த்தை கேட்டதில்லை. அவன் சொன்னால் என்ன?" என்றார் கடவுள்.

"அவன்கிட்ட இரண்டணாக் கொறச்சுக் குடுத்துப் பார்த்தால் அப்போ தெரியும்!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"எசமான், நான் நாயத்துக்குக் கட்டுப்பட்டவன். அநியாயத் துக்குக் கட்டுப்பட்டவனில்லெ, சாமி! நான் எப்பவும் அன்று அந்த லெக்கிலேதான் குந்திக்கிட்டு இருப்பேன்; வந்தா பாக்கணும்" என்று ஏர்க்காலை உயர்த்தினான் ரிக்ஷாக்காரன்.

"மகா நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன்தான்! தெரியும் போடா; கள்ளுத் தண்ணிக்குக் கட்டுப்பட்டவன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"வாடகை வண்டியெ இஸ்துகிட்டு நாள் முச்சூடும் வெயிலிலே ஓடினாத் தெரியும். உன்னை என்ன சொல்ல? கடவுளுக்குக் கண்ணில்லெ; உன்னியே சொல்ல வச்சான், என்னியே கேக்க வச்சான்" என்று சொல்லிக் கொண்டே வண்டியை இழுத்துச் சென்றான்.

கடவுள் வாய்விட்டு உரக்கச் சிரித்தார். விழுந்து சிரித்தார். மனசிலே மகிழ்ச்சி, குளிர்ச்சி.

“ இதுதான் பூலோகம் ” என்ருர் கந்தசாமிப் பிள்ளை.

“ இவ்வளவுதானு ! ” என்ருர் கடவுள்.

இருவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

வீட்டுக்கு எதிரில் உள்ள லாந்தல் கம்பத்தின் பக்கத்தில் வந்ததும் கடவுள் நின்ருர்.

கந்தசாமிப் பிள்ளையும் காத்து நின்ருர்.

“ பக்தா ! ” என்ருர் கடவுள்.

எதிரில் கிழவனுர் நிற்கவில்லை.

புலித் தோலாடையும், சடா முடியும் மானும் மழுவும், பிறையுமாகக் கடவுள் காட்சியளித்தார். கண்ணிலே மகிழ்ச்சி வெறி துள்ளியது. உதட்டிலே புன்சிரிப்பு.

“ பக்தா ! ” என்ருர் மறுபடியும்.

கந்தசாமிப் பிள்ளைக்கு விஷயம் புரிந்து விட்டது.

“ ஓய் கடவுளே, இந்தா பிடி வரத்தை என்கிற வித்தை எல்லாம் எங்கிட்டச் செல்லாது. நீ வரத்தைக் கொடுத்துவிட்டு உம் பாட்டுக்குப் போவீர். இன்ஞெரு தெய்வம் வரும், தலையைக்கொடு என்று கேட்கும். உம்மிடம் வரத்தை வாங்கிக்கொண்டு பிறகு தலைக்கு ஆபத்தைத் தேடிக் கொள்ளும் ஏமாந்த சோணகிரி நான் அல்ல. ஏதோ பூலோகத்தைப் பார்க்க வந்தீர் ; நம்முடைய அதிதியாக இருக்க ஆசைப்பட்டீர் ; அதற்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. என்னுடன் பழக வேண்டுமாஞல் மனுஷனைப் போல, என்னைப் போல நடந்து கொள்ள வேண்டும் ; மனுஷ அத்துக்குக் கட்டுப் பட்டிருக்கவேண்டும் ; நான் முந்திச் சொன்னதை மறக்காமல், வீட்டுக்கு ஒழுங்காக வாரும் ” என்ருர் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் மௌனமாகப் பின் தொடர்ந்தார். கந்தசாமிப் பிள்ளையின் வாதம் சரி என்று பட்டது. இதுவரையில் பூலோகத்திலே வரம் வாங்கி உருப்பட்ட மனுஷன் யார் என்ற கேள்விக்குப் பதிலே கிடையாது எனறுதான் அவருக்குப் பட்டது.

கந்தசாமிப் பிள்ளை, வாசலருகில் சற்று நின்ருர். “ சாமி, உங்களுக்குப் பரமசிவம் என்று பேர் கொடுக்கவா ? அம்மையப்பப் பிள்ளை என்று கூப்பிடவா ? ” என்ருர்.

“ பரமசிவந்தான் சரி ; பழைய பரமசிவம்.”

“ அப்போ, உங்களை அப்பா என்று உறவுமுறை வைத்துக் கூப்பிடுவேன், உடன்பட வேணும் ” என்ருர் கந்தசாமிப் பிள்ளை.

“ அப்பா என்று வேண்டாமப்பா; பெரியப்பா என்று கூப்பிடும். அப்போதுதான் என் சொத்துக்கு ஆபத்தில்லை” என்று சிரித்தார் கடவுள். பூலோக வளமுறைப்படி நடப்பது என்று தீர்மானித்தபடி சற்று ஜாக்கிரதையாக இருந்துகொள்ள வேண்டும் என்று பட்டது கடவுளுக்கு.

“ அப்படி உங்கள் சொத்து என்னவோ?” என்றார் கந்தசாமிப் பிள்ளை.

“ இந்தப் பிரபஞ்சம் முழுவதுந்தான் ” என்றார் கடவுள்.

“பயப்பட வேண்டாம்; அவ்வளவு பேராசை நமக்கு இல்லை” என்று கூறிக்கொண்டே நடைப்படியில் காலை வைத்தார் கந்தசாமிப் பிள்ளை.

## 2

வீட்டு முன் கூடத்தில் ஒரு தகர விளக்கு அவ்விடத்தைக் கோவிலின் கர்ப்பக் கிருகமாக்கியது. அதற்கு அந்தப் புறத்தில் நீண்டு இருண்டு கிடக்கும் பட்டகசாலை. அதற்கப்புறம் என்னவோ? ஒரு குழந்தை, அதற்கு நாலு வயசு இருக்கும். மனசிலே இன்பம் பாய்ச்சும் அழகு. கண்ணிலே எப்பொழுது பார்த்தாலும் காரண மற்ற சந்தோஷம். பழைய காலத்து ஆசாரப்படி உச்சியில் குறுக்காக வகிடு எடுத்து முன்னும் பின்னுமாகப் பின்னிய எலிவால் சடை வாலை வளைத்துக்கொண்டு நின்றது. முன்புறம் சடையைக் கட்டிய வாழைநார், கடமையில் வழுவித் தொங்கி, குழந்தை குனியும்போதெல்லாம் அதன் கண்ணில் விழுந்து தொந்தரவு கொடுத்தது. குழந்தையின் கையில் ஒரு கரித்துண்டும், ஓர் ஓட்டுத் துண்டும் இருந்தன. இடையில் முழங்காலைக் கட்டிக்கொண் டிருக்கும் கிழிசல் சிற்றாடை. குனிந்து தரையில் கோடுபோட முயன்று, வாழைநார் கண்ணில் விழுந்ததனால் நிமிர்ந்து நின்று கொண்டு இரண்டு கைகளாலும் வாழை நாரைப் பிடித்துப் பலங் கொண்ட மட்டும் இழுத்தது. அதன் முயற்சி பலிக்கவில்லை. வலித்தது. அழுவோமா, அல்லது இன்னும் ஒரு தடவை இழுத்துப் பார்ப்போமா என்று அது தர்க்கித்துக் கொண்டிருக்கும்போது அப்பா உள்ளே நுழைந்தார்.

“ அப்பா! ” என்ற கூச்சலுடன் கந்தசாமிப் பிள்ளையின் காலைக் கட்டிக் கொண்டது. அண்ணாந்து பார்த்து “எனக்கு என்ன

கொண்டாந்தே ?" என்று கேட்டது.

"என்னைத்தான் கொண்டாந்தேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னப்பா, தினந் தினம் உன்னியேத்தானே கொண்டாரே; பொரி கடலையாவது கொண்டாரப்படாது?" என்று சிணுங்கியது குழந்தை.

"பொரி கடலை உடம்புக்காகாது; இதோ பார். உனக்கு ஒரு தாத்தாவைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இதுதான் உம்முடைய குழந்தையோ?" என்று கேட்டார் கடவுள். குழந்தையின் பேரில் விழுந்த கண்களை மாற்ற முடியவில்லை அவருக்கு.

கந்தசாமிப் பிள்ளை சற்றுத் தயங்கினார்.

"சும்மா சொல்லும்; இப்போவெல்லாம் நான் சுத்த சைவன்; மண்பானைச் சமையல்தான் பிடிக்கும். பால், தயிர் கூடச் சேர்த்துக் கொள்ளுவதில்லை" என்று சிரித்தார் கடவுள்.

"ஆசைக்கு என்று காலம் தப்பிப் பிறந்த கருவேப்பிலைக் கொழுந்து" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இப்படி உட்காருங்கள்; இப்பொ குழாயிலே தண்ணீர் வராது; குடத்திலே எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று உள்ளே இருட்டில் மறைந்தார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் துண்டை உதறிப் போட்டுவிட்டுக் கூடத்தில் உட்கார்ந்தார்.

மனசிலே ஒரு துறுதுறுப்பும் எல்லையற்ற நிம்மதியும் இருந்தன.

"வாடியம்மா கருவேப்பிலைக் கொழுந்தே?" என்று கைகளை நீட்டினார் கடவுள்.

ஒரே குதியில் அவருடைய மடியில் வந்து ஏறிக் கொண்டது குழந்தை.

"எம்பேரு கருகப்பிலைக் கொளுந்தில்லெ; வள்ளி. அப்பா மாத்திரம் என்னெக் கறுப்பி கறுப்பின்னு கூப்பிடுதா; நான் என்ன அப்பிடியா?" என்று கேட்டது,

அது பதிலை எதிர்பார்க்கவில்லை. அதன் கண்களுக்குத் தாத்தாவின் கண்டத்தில் இருந்த கறுப்பு மறுத்தென்பட்டது.

"அதென்ன தாத்தா, கன்னங் கறேலுன்னு நவ்வாப் பழம் மாதிரி களுத்திலே இருக்கு? அதைக் கடிச்சுத் திங்கணும்போலே இருக்கு" என்று கண்களைச் சிமிட்டிச் சிமிட்டிப் பேசிக்கொண்டு மடியில் எழுந்து நின்று, கழுத்தில் பூப்போன்ற உதடுகளை வைத்து

அழுத்தியது. இளம்பல் கழுத்தில் கிளு கிளுத்தது. கடவுள் உடலே குளுகுளுத்தது.

" கூச்சமா இருக்கு " என்று உடம்பை நெளித்தார் கடவுள்.

"ஏன் தாத்தா, களுத்திலே நெருப்பு கிருப்புப்பட்டு பொத்துப் போச்சா? எனக்கும் இந்தா பாரு" என்று தன் விரல் நுனியில் கன்றிக் கறுத்துப்போன கொப்புளத்தைக் காட்டியது.

"பாப்பா, அது நாகப்பளந்தாண்டி யம்மா; முந்தி ஒரு தரம் எல்லாரும் கொடுத்தாளேன்னு வாங்கி வாயிலே போட்டுக் கொண்டேன். எனக்குப் பங்கில்லியான்னு களுத்தெப் புடிச்சுப்புட்டாங்க. அதிலே இருந்து அது அங்கியே சிக்கிச்கிச்சு; அது கெடக்கட்டும். உனக்கு விளையாடத் தோழிப் பிள்ளைகள் இல்லியா?" என்று கேட்டார் கடவுள்.

"வட்டும் கரித்துண்டும் இருக்கே; நீ வட்டாட வருதியா?" என்று கூப்பிட்டது.

குழந்தையும் கடவுளும் வட்டு விளையாட ஆரம்பித்தார்கள்.

ஒற்றைக் காலை மடக்கிக்கொண்டே நொண்டியடித்து ஒரு தாவுத் தாவினார் கடவுள்.

" தாத்தா, தோத்துப் போனியே " என்று கை கொட்டிச் சிரித்தது குழந்தை.

" ஏன் ?" என்று கேட்டார் கடவுள்.

கால் கரிக்கோட்டில் பட்டுவிட்டதாம்.

" முந்தியே சொல்லப்படாதா ?" என்றார் கடவுள்.

" ஆட்டம் தெரியாமே ஆட வரலாமா ?" என்று கையை மடக்கிக் கொண்டு கேட்டது குழந்தை.

அந்தச் சமயத்தில் ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை முன்னே வர, ஸ்ரீமதி, பின்னே குடமும் இடுப்புமாக இருட்டிலிருந்து வெளிப்பட்டார்கள்.

" இவுங்கதான் கைலாசவரத்துப் பெரியப்பா; கரிசங்கொளத்துப் பொண்ணை இவுங்களுக்கு ஒண்ணுவிட்ட அண்ணச்சி மகனுக்குந் தான் கொடுத்திருக்கு. தெரியாதா " என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னமோ தேசாந்திரியாகப் போயிட்டதாகச் சொல்லுவார் களே, அந்த மாமாவா? வாருங்க மாமா, சேவிக்கிறேன் " என்று குடத்தை இறக்கி வைத்து விட்டு விழுந்து நமஸ்கரித்தாள். காது நிறைந்த பழங்காலப் பாம்படம் கன்னத்தில் இடிபட்டது.

" பத்தும் பெருக்கமுமாகச் சுகமாக வாழவேணும் " என்று ஆசீர் வதித்தார் கடவுள்.

காந்திமதி அம்மையாருக்கு (அதுதான் கந்தசாமிப் பிள்ளை மனைவி

யின் பெயர்) என்றும் அநுபவித்திராத உள்ள நிறைவு ஏற்பட்டது.

"வாசலில் இருக்கிற அரிசி மூட்டை அப்படியே போட்டு வச்சிருந்தா ?" என்று ஞாபகமூட்டினுர் கடவுள்.

"இ வுகளுக்கு மறதிதான் சொல்லி முடியாது. அரிசி வாங்கியாச் சான்னு இப்பத்தான் கேட்டேன். இல்லேன்னு சொன்னுக. ஊருக் கெல்லாம் மருந்து கொடுக்காக; இவுக மறதிக்குத்தான் மருந்தைக் காங்கலெ. படெச்ச கடவுள்தான் பக்கத்திலே நின்னு பாக்கணும்" என்ருள், காந்திமதி அம்மாள்.

"பாத்துக் கிட்டுத்தான் நிக்காறே" என்ருர் கடவுள் கிராமியமாக.

"பாத்துச் சிரிக்கணும், அப்பத்தான் புத்தி வரும்" என்ருள் அம்மையார்.

கடவுள் சிரித்தார்.

கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் வாசலுக்குப் போனுர்கள்.

"அந்தச் செப்பிடுவித்தை எல்லாம் கூடாது என்று சொன் னேனே" என்ருர் பிள்ளை காதோடு காதாக.

"இனிமேல் இல்லே" என்ருர் கடவுள்.

கந்தசாமிப் பிள்ளை முக்கி முனகிப் பார்த்தார்; மூட்டை அசையவே இல்லே.

"நல்ல இளவட்டம்!" என்று சிரித்துக்கொண்டே மூட்டையை இடுப்பில் இடுக்கிக் கொண்டார் கடவுள்:

"நீங்க எடுக்கதாவது; உங்களேத்தானே, ஒரு பக்கமாத் தாங்கிப் பிடியுங்க; சும்மா பாத்துக்கிட்டே நிக்கியளே!" என்று பதைத்தாள் காந்திமதியம்மாள்.

"நீ சும்மா இரம்மா; எங்கே போடணும்னு சொல்லுதே?" என்ருர் கடவுள்.

"இந்தக் கூடத்திலியே கெடக்கட்டும்; நீங்க இங்கே சும்மா வச்சிருங்க" என்று வழி மறித்தாள் காந்திமதியம்மாள்.

கந்தசாமிப் பிள்ளையும் கடவுளும் சாப்பிட்டு விட்டு வாசல் திண்ணைக்கு வரும்பொழுது இரவு மணி பதினொன்று.

"இனிமேல் என்ன யோசனை?" என்ருர் கடவுள்.

"தூங்கத்தான்" என்ருர் பிள்ளை கொட்டாவி விட்டுக்கொண்டே.

"தாத்தா, நானும் ஒங் கூடத்தான் படுத்துக்குவேன்" என்று ஓடிவந்தது குழந்தை.

"நீ அம்மையெக் கூப்பிட்டுப் பாயும் தலையணையும் எடுத்துப் போடச் சொல்லு" என்ருர் கந்தசாமிப் பிள்ளை.

"என்னையுமா தூங்கச் சொல்லுகிறீர்?" என்று கேட்டார் கடவுள்.

“மனுஷாள் கூடப் பழகினுல் அவர்களைப் போலத்தான், நடந்தா கணும்; தூங்க இஷ்டமில்லை என்ருல், பேசாமல் படுத்துக்கொண் டிருங்கள். ராத்திரியில் அபவாதத்துக்கு இடமாகும்” என்ருர் கந்தசாமிப் பிள்ளை.

# 3

கந்தசாமிப்பிள்ளை பவழக்காரத் தெரு சித்தாந்த தீபிகை ஆபீசில் தரையில் உட்கார்ந்துக்கொண்டு பதவுரை எழுதிக்கொண்டிருக்கிருர். போகர் நூலுக்கு விளக்கவுரை பிள்ளையவர்கள் பத்திரிகையில் மாத மாதம் தொடர்ச்சியாகப் பிரசுரமாகி வருகிறது.

“ஆச்சப்பா இன்னமொன்று சொல்லக் கேளு, அப்பனே வயமான செங்கரும்பு, காச்சியவெந்நீருடனே கருடப்பிச்சு, கல்லுருவி புல்லுருவி நல்லூமத்தை (கருடப் பச்சை என்றும் பாடம்)......” என்று எழுதி விட்டு, வாசல் வழியாகப் போகும் தபாற்காரன் உள்ளே நுழையாமல் நேராகப் போவதைப் பார்த்து விட்டு, “இன்றைக்கும் பத்திரிகை போகாது” என்று முனகியபடி, எழுதியதைச் சுருட்டி மூலையில் வைத்து விட்டு விரல்களைச் சொடுக்கு முறித்துக் கொண்டார்.

வாசலில் ரிக்ஷா வந்து நின்றது. கடவுளும் குழந்தையும் இறங்கி ஞர்கள். வள்ளியின் இடுப்பில் பட்டுச் சிற்ருடை; கை நிறைய மிட்டாய்ப் பொட்டலம்.

“தாத்தாவும் நானும் செத்த காலேஜ் உசிர் காலேஜெல்லாம் பார்த்தோம்” என்று துள்ளியது குழந்தை.

“எதற்காக ஓய், ஒரு கட்டடத்தைக் கட்டி, எலும்பையும் தோலை யும் பொதிந்து பொதிந்து வைத்திருக்கிறது? என்னைக் கேலி செய்ய வேண்டும் என்ற நினைப்போ?” என்று கேட்டார் கடவுள். குரலில் கடுகடுப்புத் தொனித்தது.

“அவ்வளவு ஞானத்தோடே இங்கே யாரும்செய்துவிடுவார்களா? சிருஷ்டியின் அபூர்வத்தைக் காட்டுவதாக நினைத்துக் கொண்டுதான் அதை எல்லாம் அப்படி வைத்திருக்கிருர்கள். அது கிடக்கட்டும்; நீங்க இப்படி ஓர் இருபத்தைந்து ரூபாய் கொடுங்கள்; உங்களை ஜீவிய சந்தாதாராகச் சேர்த்துவிடுகிறேன்; இன்று பத்திரிகை போய் ஆகவேனும்” என்று கையை நீட்டிஞர் பிள்ளை.

“இது யாரை ஏமாற்ற? யார் நன்மைக்கு?” என்று சிரித்தார் கடவுள்.

"தானம் வாங்கவும் பிரியமில்லை ; கடன் வாங்கும் யோசனையும் இல்லை ; அதனால்தான் வியாபாரார்த்தமாக இருக்கட்டும் என்கிறேன். நன்மையைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிவிட்டீர்களே ! இந்தப் பூலோகத்திலே நெய் முதல் நல்லெண்ணைவரையில் எல்லாம் கலப்படந்தான். இது உங்களுக்குத் தெரியாதா ?" என்று ஒரு போடு போட்டார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் யோசனையில் ஆழ்ந்தார்.

"அதிருக்கட்டும். போகரிலே சொல்லியிருக்கிறதே, கருடப்பச்சை ; அப்படி ஒரு மூலிகை உண்டா ? அல்லது கருடப்பிச்சுதானா ?" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

"பிறப்பித்த பொறுப்புதான் எனக்கு ; பெயரிட்ட பழியையும் என்மேல் போடுகிறீரே, இது நியாயமா ? நான் என்னத்தைக் கண்டேன் ? உம்மை உண்டாக்கினேன் ; உமக்குக் கந்தசாமிப் பிள்ளையென்று உங்க அப்பா பெயர் இட்டார் ; அதற்கும் நான்தான் பழியா ?" என்று வாயை மடக்கினார் கடவுள்.

"நீங்கள் இரண்டு பேரும் வெயிலில் அலைந்து விட்டு வந்தது கோபத்தை எழுப்புகிறது போலிருக்கிறது. அதற்காக என்னை மிரட்டி மடக்கி விட்டதாக நினைத்துக் கொள்ளவேண்டாம் ; அவசரத்தில் திடுதிப் பென்று சாபம் கொடுத்தீரானால், இருபத்தைந்து ரூபாய் வீணாக நஷ்டமாய்ப் போகுமே என்பதுதான் என் கவலை" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

பொட்டலத்தை அவிழ்த்துத் தின்றுகொண்டிருந்த குழந்தை, "ஏன் தாத்தா அப்பாகிட்டப் பேசுதே ? அவுங்களுக்கு ஒண்ணுமே தெரியாது ; இதைத் தின்னு பாரு, இனிச்சுக் கெடக்கு" என்று கடவுளை அழைத்தது.

குழந்தை கொடுக்கும் லட்டுத் துண்டுகளைச் சாப்பிட்டுக் கொண்டே, "பாப்பா, உதுந்தது எனக்கு, முழுசு உனக்கு !" என்றார் கடவுள்.

குழந்தை ஒரு லட்டை எடுத்துச் சற்று நேரம் கையில் வைத்துக் கொண்டே யோசித்தது.

"தாத்தா, முழுசு வாய்க்குள்ளே கொள்ளாதே. உதுத்தா உனக்குன்னு சொல்லுதியே. அப்போ எனக்கு இல்லையா ?" என்று கேட்டது குழந்தை.

கடவுள் விழுந்து விழுந்து சிரித்தார். "அவ்வளவும் உனக்கே உனக்குத்தான்" என்றார்.

"அவ்வளவுமா ! எனக்கா !" என்று கேட்டது குழந்தை.

" ஆமாம். உனக்கே உனக்கு " என்றார் கடவுள்.

" அப்புறம் பசிக்காதே! சாப்பிடாட்டா அம்மா அடிப்பாகளே! அப்பா லேவியம் குடுப்பாகளே!" என்று கவலைப்பட்டது குழந்தை.

" பசிக்கும். பயப்படாதே!" என்றார் கடவுள்.

" தாங்கள் வாங்கிக் கொடுத்திருந்தாலும், அது ஹோட்டல் பட்சணம். ஞாபகம் இருக்கட்டும் " என்றார் கந்தசாமிப் பிள்ளை.

" நான் தான் இருக்கிறேனே!" என்றார் கடவுள்.

" நீங்கள் இல்லையென்று நான் எப்பொழுது சொன்னேன்?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

சில விநாடிகள் பொறுத்து, " இன்றைச் செலவு போக, அந்த நூறு ரூபாயில் எவ்வளவு மிச்சம்? " என்றார் கந்தசாமிப் பிள்ளை.

" உமக்கு ரூபாய் இருபத்தைந்து போகக் கையில் ஐம்பது இருக்கிறது" என்று சிரித்தார் கடவுள்.

" அதற்குப் பிறகு என்ன யோசனை?"

" அதுதான் எனக்கும் புரியவில்லை."

" என்னைப்போல வைத்தியம் செய்யலாமே!"

" உம்முடன் போட்டி போட நமக்கு இஷ்டம் இல்லை."

" அப்படி நினைத்துக்கொள்ள வேண்டாம். என்னோடே போட்டி போடல்லே; லோகத்து முட்டாள் தனத்தோடே போட்டி போடு கிறீர்கள்; பிரியமில்லை என்றால், சித்தாந்த உபந்நியாசங்கள் செய்யலாமே?"

" நீர் எனக்குப் பிழைக்கிறதற்கா வழி சொல்லுகிறீர்;— அதில் துட்டு வருமா?" என்று சிரித்தார் கடவுள்.

" அப்போ?"

"எனக்குத்தான் கூத்து ஆட நன்றாக வருமே; என்ன சொல்லு கிறீர்? தேவியை வேண்டுமானாலும் தருவிக்கிறேன்."

கந்தசாமிப் பிள்ளை சிறிது யோசித்தார். "எனக்கு என்னவோ பிரியமில்லை!என்றார்.

" பிறகு பிழைக்கிற வழி? என்னங்காணும். பிரபஞ்சமே எங்கள் ஆட்டத்தை வைத்துத்தானே பிழைக்கிறது?"

" உங்கள் இஷ்டம்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

கந்தசாமிப் பிள்ளை மறுபடியும் சிறிது நேரம் சிரித்தார்.

" வாருங்கள், போவோம்" என்று ஆணியில் கிடந்த மேல் வேட்டியை எடுத்து உதறிப் போட்டுக்கொண்டார்.

" குழந்தை " என்றார் கடவுள்.

“ அதுதான் உறங்குகிறதே ; வருகிற வரையிலும் உறங்கட்டும் ” என்றார் பிள்ளை.

கால்மணிப் போது கழித்து மூன்று பேர் திவான் பகதூர் பிருகதீசுவர சாஸ்திரிகள் பங்களாவுக்குள் நுழைந்தனர். ஒருவர் கந்தசாமிப் பிள்ளை ; மற்றொருவர் கடவுள் ! மூன்றாவது பெண் ;— தேவி.

“ நான் இவருக்குத் தங்கபஸ்பம் செய்து கொடுத்து வருகிறேன். நான் சொன்னால் கேட்பார் ” என்று விளக்கிக்கொண்டே முன் வராந்தாப் படிக்கட்டுகளில் ஏறினார் பிள்ளை ; இருவரும் பின் தொடர்ந்தனர். தேவியின் கையில் ஒரு சிறு மூட்டை இருந்தது.

“ சாமி இருக்காங்களா ; நான் வந்திருக்கேன் என்று சொல்லு ” என்று அதிகாரத்தோடு வேலைக்காரனிடம் சொன்னார் கந்தசாமிப் பிள்ளை.

“ பிள்ளையவர்களா ! வரவேணும், வரவேணும் ; பஸ்பம் நேத்தோடே தீர்ந்து போச்சே ; உங்களைக் காணவில்லையே என்று கவலைப்பட்டேன் ” என்ற கல கலத்த பேச்சுடன் வெம்பிய சரீரமும், மல் வேஷ்டியும், தங்க விளிம்புக் கண்ணாடியுமாக ஒருதிவான்பகதூர் ஓடிவந்தது. எல்லோரையும் கும்பிட்டுக் கொண்டே அது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது.

“ உட்காருங்கள், உட்காருங்கள் ” என்றார் திவான் பகதூர். கந்தசாமிப் பிள்ளை அவரது நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொண்டே, “ பரவாயில்லை ; சாயங்காலம் பஸ்மத்தை அனுப்பி வைக்கிறேன் ; நான் வந்தது இவாளை உங்களுக்குப் பரிசயம் பண்ணிவைக்க. இவாள் ரெண்டு பேரும் நாட்டிய சாஸ்திர சாகரம். உங்கள் நிருத்திய கலாமண்டலியில், வசதி பண்ணினா சௌகரியமாக இருக்கும் ” என்றார் கந்தசாமிப் பிள்ளை.

திவான் பகதூரின் உத்ஸாகம் எல்லாம் ஆமையின் காலும் தலையும் போல் உள் வாங்கின. கைகளைக் குவித்து, ஆள்காட்டி விரல்களையும் கட்டை விரல்களையும் முறையே மூக்கிலும் மோவாய்க் கட்டையிலுமாக வைத்துக்கொண்டு “ உம் ”, “ உம் ” என்று தலையை அசைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

“ இவர் பெயர் கூத்தனார் ; இந்த அம்மாளின் பெயர் பார்வதி. இருவரும் தம்பதிகள் ” என்று உறவைச் சற்று விளக்கி வைத்தார் கந்தசாமிப் பிள்ளை.

“ நான் கேள்விப்பட்டதே இல்லை ; இதற்கு முன் நீங்கள் எங்கேயாவது ஆடியிருக்கிறீர்களா ? ” என்று தேவியைப் பார்த்

துக்கொண்டு கூத்தனுரிடம் திவான் பகதூர் கேட்டார்.

கடவுளுக்கு வாய் திறக்கச் சந்தர்ப்பம் கொடுக்காமல், "நாங்கள் ஆடாத இடம் இல்லை" என்ருள் தேவி.

"என்னவோ என் கண்ணில் படவில்லை. இருக்கட்டும்; அம்மா ரொம்பக் கறுப்பா இருக்காங்களே, சதஸிலே சோபிக்காதே என்றுதான் யோசிக்கிறேன்" என்ருர் வர்ணபேத திவான் பகதூர்.

"பெண் பார்க்க வந்தீரா, அல்லது நாட்டியம் பார்க்கிறதாக யோசனையோ?" என்று கேட்டாள் தேவி.

"அம்மா, கோவிச்சுக்கப்படாது. ஒன்று சொல்லுகிறேன் கேளுங்க; கலைக்கும் கறுப்புக்கும் காணுவுக்கு மேலே சம்பந்தமே கிடையாது. நானும் முப்பது வருஷமா இந்தக் கலாமண்டலியிலே பிரெஸிடெண்டா இருந்து வருகிறேன். சபைக்கு வந்தவர்கள் எல்லாருக்கும் கண்கள்தான் கறுத்திருக்கும்."

"உம்ம மண்டலியுமாச்சு, சுண்டெலியுமாச்சு!" என்று சொல்லிக் கொண்டே தேவி எழுந்திருந்தாள்.

"அப்படிக் கோவிச்சுக்கப் படாது" என்று ஏக காலத்தில் திவான் பகதூரும் கந்தசாமிப் பிள்ளையும் எழுந்திருந்தார்கள்.

"இவர்கள் புதுப் புதுப் பாணியிலே நாட்டிய மாடுவார்கள். அந்தமாதிரி இந்தப் பக்கத்திலேயே பார்த்திருக்க முடியாது. சாஸ்திரம் இவர்களிடம் பிச்சை வாங்கவேணும். ஒருமுறைதான் சற்றுப் பாருங்களேன்" என்று மீண்டும் சிபார்சு செய்தார் கந்தசாமிப் பிள்ளை.

"சரி, பார்க்கிறது; பார்க்கிறதுக்கு என்ன ஆட்சேபம்?!" என்று சொல்லிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். "சரி, நடக்கட்டும்!" என்று சொல்லிக் கொண்டு இமைகளை மூடினுர்.

"எங்கே இடம் விசாலமாக இருக்கும்?" என்று தேவி எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"அந்த நடு ஹாலுக்குள்ளேயே போவோமே" என்ருர் கடவுள். "சரி" என்று உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டார்கள். சில விநாடிகளுக்கெல்லாம் உள்ளிருந்து கணீரென்று கம்பீரமான குரலில் இசை எழுந்தது.

"மயான ருத்திரனும்—இவன்
மயான ருத்திரனும்......" கதவுகள் திறந்தன.

கடவுள் புலித்தோலுடையும், திரிசூலமும், பாம்பும், கங்கையும் சடையும் பின்னிப் புரள, கண்மூடிச் சிலையாக நின்றிருந்தார்.

மறுபடியும் இசை. பின்னலைச் சிக்கலெடுத்து உதறியதுபோல, ஒரு வெட்டு வெட்டித் திரும்புகையில், கடவுள் கையில் சூலம் மின்னிக் குதித்தது; கண்களில் வெறியும், உதட்டில் சிரிப்பும் புரண்டோட, காலைத் தூக்கினர்.

கந்தசாமிப் பிள்ளைக்கு நெஞ்சில் உதைப்பு எடுத்துக் கொண்டது. கடவுள் கொடுத்த வாக்கை மறந்துவிட்டார் என்று நினைத்துப் பதறி எழுந்தார்.

"ஓய் கூத்தனுரே, உம் கூத்தைக் கொஞ்சம் நிறுத்தும்."

"சட்! வெறும் தெருக்கூத்தாக இருக்கு; என்னங்காணும், போர்னியோ காட்டு மிராண்டி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு" என்று அதட்டினர் திவான் பகதூர்.

ஆடிய பாதத்தை அப்படியே நிறுத்தி, சூலத்தில் சாய்ந்தபடி பார்த்துக்கொண்டே நின்ருர் கடவுள்.

"ஓய்! கலைன்னு என்னன்னு தெரியுமாங்காணும்? புலித் தோலைத் தான் கட்டிக்கொண்டீரே. பாம்புன்னு பாம்பையா புடிச்சுக்கொண்டு வருவா? பாம்புமாதிரி ஆபரணம் போட்டுக் கொள்ள வேணும். புலித்தோல் மாதிரி பட்டுக் கட்டிக்கொள்ள வேணும். கலைக்கு முதல் அம்சம் கண்ணுக்கு அழகுங்காணும்! வாஸ்தவமாகப் பார்வதி பரமேசுவராளே இப்படி ஆடினலும் இது நாட்டிய சாஸ்திரத்துக்கு ஒத்து வராது. அதிலே இப்படிச் சொல்லலே. முதலிலே அந்தப் பாம்புகளை யெல்லாம் பத்திரமாகப் புடிச்சுக் கூடையிலே போட்டு வச்சுப்புட்டு வேஷத்தைக் கலையும். இது சிறுசுகள் நடமாடற எடம், ஜாக்கிரதை!" என்ருர் திவான் பகதூர்.

ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளையையும் அவர் லேசில் விட்டு விடவில்லை. "கந்தசாமிப் பிள்ளைவாள்; நீர் ஏதோ மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறீர் என்பதற்காக இந்தக் கூத்துப் பார்க்க முடியாது; கச்சேரியும் வைக்க முடியாது; அப்புறம் நாலு பேரோடே தெருவிலே நான் நடமாட வேண்டாம்?"

கால் மணி நேரம் கழித்துச் சித்த வைத்திய தீபிகை ஆபீசில் இரண்டுபேர் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள், தேவியைத் தவிர. குழந்தை பாயில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது.

இரண்டுபேரும் மௌனமாக இருந்தார்கள். "தெரிந்த தொழிலைக் கொண்டு லோகத்தில் பிழைக்க முடியாதுபோல இருக்கே!" என்ருர் கடவுள்.

"நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கவில்லை; உங்களுக்குப்

பிடித்தது லோகத்துக்குப் பிடிக்கவில்லை ;—வேணும் என்ருல் தேவாரப் பாடசாலை நடத்திப் பார்க்கிறதுதானே !"

கடவுள், "ச்சு" என்று நாக்கைச் சூள் கொட்டினுர்.

"அதுக்குள்ளேயே பூலோகம் புளிச்சுப் போச்சோ !"

"உம்மைப் பார்த்தால் உலகத்தைப் பார்த்தது போல்" என்ருர் கடவுள்.

"உங்களைப் பார்த்தாலோ ?" என்று சிரித்தார் கந்தசாமிப் பிள்ளை

"உங்களிடமெல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம் ; உடன் இருந்து வாழ முடியாது" என்ருர் கடவுள்.

"உங்கள் வர்க்கமே அதற்குத்தான் லாயக்கு" என்ருர் கந்தசாமிப் பிள்ளை.

அவருக்குப் பதில் சொல்ல அங்கே யாரும் இல்லை.

மேஜையின் மேல் ஜீவிய சந்தா ரூபாய் இருபத்தைந்து நோட்டாகக் கிடந்தது.

"கைலாசபுரம் பழைய பரமசிவம் பிள்ளை, ஜீவிய சந்தா வரவு ரூபாய் இருபத்தைந்து" என்று கணக்கில் பதிந்தார் கந்தசாமிப் பிள்ளை.

"தாத்தா ஊருக்குப் போயாச்சா, அப்பா ?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தது குழந்தை.

# சாமியாரும், குழந்தையும், சீடையும்

"மனிதன் கடவுளைப் படைத்தான். அப்புறம் கடவுள் மனிதனை சிருஷ்டிக்க ஆரம்பித்தான்.

"இருவரும் மாறிமாறிப் போட்டிபோட ஆரம்பித்தார்கள். இன்னும் போட்டி முடியவில்லை.

"நேற்றுவரை பிந்திப்பிறந்த கடவுளுக்கு முந்திப் பிறந்த மனிதன் ஈடு கட்டிக்கொண்டு வந்தான்.

"இதில் வெற்றி தோல்வி, பெரியவர் சின்னவர் என்று நிச்சயிப்பதற்கு எப்படி முடியும்?

"நிச்சயிக்க என்ன இருக்கிறது?......"

இப்படியாகப் பின்னிக்கொண்டே போனார் ஒரு சாமியார். எதிரிலே தாமிரவருணியின் புதுவெள்ளம் நுரைக் குளிர்ச்சியுடன் சுழன்று உருண்டது.

அவர் உட்கார்ந்திருந்தது ஒரு படித்துறை. எதிரே அக்கரையில் பனைமரங்களால் புருவமிட்ட மாந்தோப்பு; அதற்கப்புறம் சிந்துபூந்துறை என்று சொல்வார்களே அந்த ஊர். இப்பொழுது பூ சிந்துவதற்கு அங்கு மரம் இருக்கிறது. அதைப்போல எண்ணக் குலைவையும் ஏமாற்றத்தையும் சிந்துவதற்கு சுமார் ஆயிரம் இதயங்கள் துடிக்கின்றன. துடிப்பு நின்றவுடன் வைத்து எரிக்க அதோ சுடுகாடு இருக்கிறது. இப்பொழுதும் இந்த நிமிஷத்தில் கூடத்தான் அது புகைந்து கொண்டிருக்கிறது. தோல்வியின், ஏமாற்றத்தின் வாகனங்களை வைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பது பலவீனந் தானே. பலவீனத்தை வைத்துக்கொண்டு நாலு காசு சம்பாதிக்கப் பிச்சைக்காரனுக்கு முடியும். மனுஷனால் வாழ முடியுமா? அதனால் தான் இந்தச் சுடுகாடு என்ற ரண சிகிச்சை டாக்டர், வாழ்க்கை என்ற நோயாளிக்கு மிக அவசியம்.

அதை இந்தச் சாமியார் அறிந்துகொண்டிருந்தார். அதனால்தான் இவருக்கு விரக்தி ஏற்பட்டது. இவருக்கு இடது பக்கத்தில் சுலோசன முதலியார் பாலம். கட்டபொம்மு சண்டையின்போது சமரசம் பேச முயன்ற துபாஷ் அவர். அவர்தான் அதைக் கட்டியது.

திருநெல்வேலிக்காரர்களுக்கு அதில் அபாரப் பெருமை. முட்டையும் பதநீரும்விட்டு அரைத்த காரையில் கட்டியதாம். அதில் ஒரு தனிப் பெருமை

இதற்குமுன் எப்போதோ ஒருமுறை இதுபோல வந்த வெள்ளம் அடித்துக்கொண்டு வந்த வைக்கோல் போர், முன்பல்லைத் தட்டிய மாதிரி இரண்டு மூன்று கணவாய்களைப் பெயர்த்துக் கொண்டு போய் விட்டது. இப்பொழுது மறுபடியும் கட்டிவிட்டார்கள். பொய்ப்பல் கட்டிக்கொண்டால் எப்படியும் கிழவன்தானே; அப்படித்தான் அதுவும். வயசு முதிர்ந்த நாகரிகம் ஒன்று தன்னை வலுவுள்ளது மாதிரி காட்டிக் கொள்வது போன்றிருந்தது. அதற்கும் சற்று அப்பால் பொதிகை. குண்டுக்கல் மாதிரி ஒரு குன்று; தெத்துக்குத்தான வானத்தின் சிவப்பு கோரச் சிரிப்பைத் தாங்குவது போலப் படுத்திருந்தது குன்றின் தொடர்.

சாமியாருக்குப் பின்புறத்தில் சுப்பிரமணியன் கோவில். அதாவது வாலிபம், வலிமை, அழகு, நம்பிக்கை இவற்றையெல்லாம் திரட்டி வைத்த ஒரு கல் சிலை இருக்கும் கட்டிடம். அதற்குப் பின்னால் ஒரு பேராய்ச்சி கோவில். மேற்குத்திசையின் கோரச் சிரிப்புக்கு எதிர்ச் சிரிப்பு காட்டும் கோர வடிவம். இருட்டில் மினுக்கும் கோவில். வாலிபமும் நம்பிக்கையும் அந்தக் கோரச் சிரிப்பின் தயவில் நிற்பது போல, சாமியாரின் முதுகுப் புறத்திலிருந்தன.

அவர் வெறுத்துவிட்டவை; ஆனால் மனிதனால் வெறுக்க முடியாதவை. அதனால்தான் அவரது முதுகுப்புறமானது அவற்றிற்கு அப்பால் விலகிச் செல்ல முடியாது தவித்தது.

சாமியாரின் வலது பக்கத்தில்......

சாமியாரின் வலது பக்கத்தில் ஒரு சின்னக் குழந்தை. நான்கு வயசுக் குழந்தை. பாவாடை முந்தானையில் சீடையை மூட்டை கட்டிக்கொண்டு, படித்துறையில் உட்கார்ந்து காலைத் தண்ணீரில் விட்டு ஆட்டிக் கொண்டிருக்கிறது. சின்னக் கால்காப்புகள் தண்ணீரிலிருந்து வெளிவரும்பொழுது, ஓய்ந்துபோன சூரிய கிரணம் அதன்மேல் கண் சிமிட்டும். அடுத்த நிமிஷம் கிரணத்திற்கு ஏமாற்றம். குழந்தையின் கால்கள் தண்ணீருக்குள் சென்று விடும். சூரியனாக இருந்தால் என்ன? குழந்தையின் பாதத் தூளிக்குத் தவம் கிடந்துதான் ஆகவேண்டும்.

குழந்தை சீடையை மென்றுகொண்டு சாமியாரைப் பார்க்கிறது.

சாமியார் வெள்ளத்தைப் பார்க்கிறார். வெள்ளம் இருவரையும் கவனிக்கவில்லை.

"மனிதன் நல்லவன்தான்; தான் உண்டாக்கின கடவுளிடம் அறிவை ஒப்படைத்திருந்தால் புத்திசாலியாக வாழ்ந்திருக்க முடியும். அப்பொழுது அது தன்னிடமிருந்ததாக அவனுக்குத் தெரியாது. இப்பொழுது அறிவாளியாக அல்லல்படுகிறான்.

"சிருஷ்டித் தொழிலை நடத்துகிறவனுக்கு அறிவு அவசியம் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது. இப்பொழுது அவஸ்தைப்படுகிறான். அதற்காக அவனைக் குற்றம் சொல்ல முடியுமா?

"மனிதன் தன் திறமையை அறிந்து கொள்ளாமல் செய்த பிசகுக்குக் கடவுள் என்று பெயர். மனிதனுக்கு உண்டாக்கத்தான் தெரியும். அழிக்கத் தெரியாது. அழியும்வரை காத்திருப்பதுதான் அவன் செய்யக்கூடியது.

"அதனால்தான் காத்திருக்கிறான். ஆனால் அவனுக்குத் துரு துருத்த கைகள். அதனால்தான் பிசகுகளின் உற்பத்திக் கணக்கு வரம்பை மீறுகிறது..." என்றார் சாமியார்.

துறையில் தலை நிமிர்ந்து வந்த நாணல் புல் ஒன்று சுழலுக்குள் மறைந்துவிட்டது. குழந்தையும் 'ஆமாம்' என்பதுபோல் தலையை அசைத்துக் கொண்டு ஒரு சீடையை வாயில் போட்டுக்கொண்டு கடுக்கென்று கடித்தது.

அந்தப் படித்துறையில் கடுக்கென்ற அந்த சப்தத்தைக் கேட்க வேறு யாரும் இல்லை.

Printed at Shivam Offset Press, A-12/1 Naraina Indl. Area, Phase-I, New Delhi-110 028